மஹாமகத்துவம்பொருந்திய

# தேரையர் வயித்தியம்

(ஆயிரத்தொன்று)



சென்னை

வித்தியா ரத்நாகரம் பிரஸில்

பதிப்பித்தது.

இதன் விலை] 1935 [அணா-12.

S. 191

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்களில்

மஹாமகத்துவம்பொருந்திய

# தேரையர் வயித்தியம்

ஆயிரத்தொன்று.

இஃது,

தஞ்சைமாநகரம் மகாராஜா சமஸ்தானத்து

வயித்திய காதர்சாகிபு

கரையாங்குட்டை ஆயுள்வேதபண்டிதர்

இலட்சுமண நாயகர்

பட்டாளம்

கனகசபைபண்டிதர்

இவர்கள் முன்னிலையில்

மதுரை புதுவை சென்னை இச்சங்கங்களில்

தமிழ்த் தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர் - வேதகிரிமுதலியார் குமாரன்

ஆயுள்வேதபாஸ்கரன் கந்தசாமிமுதலியாரால்

பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சிசெய்த

பிரதிக்கிணங்க,

வித்தியா ரத்நாகரம் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

இதன் விலை] 1935. [அணா-12.

உ

கடவுள் துணை.

# தேரையர் சரித்திரம்.

தெய்வீகத்தன்மைபொருந்திய அகஸ்தியமுனிவர் தன்னருள் ஞானோபதேசங்களைத் தனக்குத் தக்க சீஷனொருவனுக்குப் போதிக்க வேண்டுமென்று கருதியிருந்ததால் அவரொற்ற ஒருநாளில் அக் கருத்தை நினைத்து ஊமைப்பிள்ளையாயிருந்தால் மெத்த நலமென் றெண்ணிப் பொதிகையைவிட்டிறங்கி ஊருக்குட் பிரவேசமானார் அப் போது அருள்தங்கிய ஔவையென்பவள் இவர்வருஞ் செய்தியறிந்து முற்பிறப்பில் இராமதேவரென்றும் யாக்கோபு என்றும் பெயர்தங்கிய இருவரையும் அழைத்து அப்பா மைந்தர்களே அகஸ்தியமகாமுனிவர் தன்னுடைய ஞானோபதேசங்களை ஓர் நற்சீஷனுக்கு போதிக்கவேண்டு மென்று நினைத்து வருகின்றார் ஆனதால் அவரிஷ்டப்படி முடிக்க வுபாயத்தந்திரங்கள் கூறுகிறேன் அதென்னெனில் அவர் ஊமைப் பிள்ளை வேண்டுமென்று விரும்புவதால் உங்களிருவரில் மூத்தவனாகிய இராமதேவ னென்பவனே உன்னை மந்திரோபதேசத்தால் ஊமை யாக்கிவைப்பான் நீயு மவுனமுற்றிரு அவர் வந்தழைப்பார் உன்னைக் கொடுத்துவிட்டுப் பொன்னைப் பெற்றுக்கொள்ளுகிறேன் நீ அவர் பின்சென்று அவருக்குத் தொண்டுசெய்து சகலகலையுமறிந்து சில காலங்கழித்து வருகவென்று வரங்கொடுத்தாள் அப்படியே ஊமை யாக்கி வைத்திருக்க அகஸ்தியரும் உடனே அழைத்துக்கொண்டு சென்றனர். பின்வரும் அவர் சொற்படி பொதிகையில் அவர்செய்யும் கிரிகைகள் முதலானதும் பார்த்து இவரும் தெரியாதவர்போலிருந்தார் இப்படி இருக்குங்காலத்தில் சங்கப்புலவர்களில் நக்கீரரென்பவருக்கு பத்துவருஷகாலமாய் தலைநோக்காடுகண்டு மெத்தவும் துன்பப்படு கிறதை அவரது சீஷர் நச்சினார்க்கினியார் அகஸ்தியரை யழைத்துக் கொண்டு சங்கத்திற்குச் சென்றனர் இவர் மருந்துப் பையையும் கத்திரி குறடா சிமிட்டாக்களுடன் அவ்விடஞ் சென்றனர் அச்செய்தி சீஷனாகிய இராமதேவனுக்குத் தெரிந்து அவரும் பின்தொடர்ந்தனர் உடனே அகஸ்தியரும் தலைநோக்காடுடைய நக்கீரருக்குத் தலைகிறி மூளையைப் பற்றிக்கொண்டிருக்கிற தேரையை சிமிட்டாகொண்டு தூக்கப்போனார் அது மோசம்வருமென்றெண்ணி அப்போது சீஷ னாகிய இராமதேவர் தடுத்தனர் அப்போது அகஸ்தியருங் கவனித்து உடனே ஊமையாகிய இராமதேவர் கைசாடை கண்சாடையால் ஓர்

பெரிய தாம்பாளத்தில் சலங் கொண்டுவரச்சொல்லி பக்குவமாய்த் தாம்பாளத்தைக் காண்பிக்க தேரையானது மூளையைவிட்டுத் தண்ணீரில் குதித்தது அப்போது இராமதேவர் குருவுக்குமுந்தின சீஷனுர் இவ்வல்லமைப்புத்திகளை அகஸ்தியர்கண்டு மெத்தவுஞ் சந்தோஷித்து இன்னம் தெரிந்துந் தெரியாத விஷயங்களையும் போதித்தார் உடனே தேரைவயித்தியஞ் செய்ததால் இராமதேவர் என்ற பெயரைநீக்கி தேரையர் என்று பெயர்கொடுத்தனர் இப்படியிருக்க இவர் இறுமாப்புகொண்டு அனேக சரக்குகளையும் நாகமலை பொன்மலை பித்தளைமலை வெள்ளிமலை கந்தகமலை தாளகமலை இப்படிக்கொற்ற அற்புதங்களை மானிடர் பிழைக்கவென்று உண்டாக்கினுர் பின்னும் ஆயிரத்தெட்டு மாற்றுடைய சொல்லப்பட்ட மலைமுழுதும் மூலிகைகளால் சார்பிழிந்து மலைமுழுதும்பூசி இரட்டை துருத்திகொண்டு ஊதத்தொடங்கினுர் அந்த தீபாக்கினியானது சித்தர் முனிவர்கட்குத் தகிக்கமுடியாமல் அகஸ்தியருக்கு முறையமிட்டனர் என்னையா என் குருவே தேரையனென்பவனுக்கு தாங்கள் ஞானேபதேசமும் சர்வ வித்தைகளும் போதித்ததால் லோகமெல்லாஞ் சித்தாய்ப்போய்விடும் மலைமேற் சிகரம்வரையில் மீட்டுந் தீபாக்கினியானது நிர்வகிக்கக் கூடவில்லையென்று கூறினுர்கள் உடனே அகஸ்தியருங் கோபங் கொண்டு இவரை இரண்டாய்க் கிழித்தெறிந்து பொதிகைக்குப் போயினர் உடனே இவரது விசுவாசம்பெற்ற இரண்டுசீஷர்களங்கிருந்தனர். முன் தேரையரென்பவர் தன் குருவால் தனக்கிடையூறு வருமென்றெண்ணி சஞ்சீவி மூலிகையை அவ்விருவருக்கு மருளிச் செய்திருந்தார் உடனே அச்சீஷர்களிருவரும் இருபகுதியாயிருந்த தேரையரென்பவரை யொன்ருய்ச்சேர்த்து மூலிகைப் பிழிந்தனர் அவரும் உயிர்த்தெழுந்தனர் பின்னும் அற்புதங்களை லோகத்து மானிடர்களுக்கு விளைவித்தனரென்று பெரும்பாலும் பெரியோர்களால் கேள்வியுற்றேம் மேற்கூறிய இராமதேவர் யாக்கோபு என்பவருடைய சரித்திரவாலாற்றை அவரவர்கள்செய்த நூலின் முகவுரையில் பார்த்தால் தெரியவரும் இச்சரித்திரத்தை இந்நூல் திருத்தியவர் கேள்வியுற்றவரையில் அச்சிடத்துணிந்தனர்.

தேரையர் சரித்திர வரலாறு

முற்றுப்பெற்றது.

---

உ

கடவுள் துணை.

# தேரையர் வயித்தியம்

## பொருளடக்கவகராதி.


| | பக்கம். |
|---|---|
| அண்டவாதவரோசிகம் | 13 |
| அஷ்டகெண்டவாதம் | 22 |
| அரையாப்புக்கு சுன்னப் பத்துதாமரையிலைப்பத்து | 29 |
| அரையாப்புக்கு | 30 |
| அசுவகெந்திசூரணம் | 56 |
| அர்த்தனாரீசுரக்குளிகை | 74 |
| அடிதள்ளினால்பூசுமருந்து | 77 |
| அபானவாயுவின்குணம் | 97 |
| அண்டவாதவுப்பலுக்கு | 97 |
| அதிசாரசுரம் | 121 |
| அதிசாரத்திற்குகியாழம் | 130 |
| அரோசிகத்திற்கு | 132 |
| அக்கினிப்பிளாஸ்திரி | 132 |
| அண்டவாயுவுக்குமாத்திரை | 133 |
| ஆனந்தவாயுவுக்கு | 3 |
| ஆக்கிராணம் | 15 |
| இரணங்களுக்குச்சிலைஎண்ணை | 3 |
| இராமபாணக்குளிகை | 7 |
| இரத்தப்பிரமியத்திற்குக்கலி | 14 |
| இலிங்கபற்பம் | 17 |
| இடுப்பின்வாதம் | 21 |
| இரசச்செந்தூரம் | 27 |
| இராஜபுண்ணுக்குவீரமுலா | 30 |
| இரணங்களுக்கு அன்னக்கட் | 28 |
| இரணத்திற்குப்பூவரசுபத்து | 32 |
| இரசசெந்தூரம் | 39 |
| இரத்தச்சீழ் வயிற்றுக்கடுப்புக்கு பெரும்பாடு நீர்சுருக்குக்கியாழம் | 50 |
| இரணம் சில்விஷம் வண்டு பூரான் செய்யான் வாயுவு குடல்பிரட்டுக்கு வன்னிரசம் | 51 |
| இருமல்க்ஷயத்துக்குகியாழம் | 73 |
| இரணங்களுக்குப்புகை | 83 |
| இரத்தகுன்மத்தின்குண | 106 |
| இரத்தவாந்திக்கு | 128 |
| இரத்தவாந்திக்குக்கியாழம் | 131 |
| இருமலுக்குக்கியாழம் | 5 |
| இருமலுக்குக்கியாழம் | 131 |
| இந்நூல்தொகுப்பு | 141 |
| ஈயசெந்தூரப்பிளாஸ்திரி | 34 |
| உஷ்ணத்திற்குலேகியம் | 44 |
| உந்திவேர்க்குளிசம் | 60 |
| உள்குத்துக்கு | 106 |
| உட்சுரம் | 122 |
| எழுவகைமாந்தத்திற்கு | 10 |
| எலிகடிக்கு | 86 |
| ஒடுவுக்குஎண்ணெய் | 108 |
| ஒடுவுபுண்ணுக்குமருந்து | 108 |
| ஒருதலைநோய்க்குத்தயிலம் | 136 |
| ஒருதலைநோய்க்குநசியாக்கிராணம் | 124 |
| ஒருவிரைவாதத்திற்குமெழுகு | 4 |
| கண்படலத்திற்கு | 19 |
| கண்படலம் சிவப்பு நீரேத்தலுக்கு தும்பைமை | 20 |
| கண்எழுச்சிக்கு | 21 |
| கவுசைஎலும்புருக்கிக்கு நமனுசமெழுகு | 26 |
| கரப்பான்புண்ணுக்குமிருதார்சிங்கிபிளாஸ்திரி | 34 |
| கடுக்காய்லேகியம் | 37 |
| கருவங்கபற்பம் | 45 |
| கண், கால், எரிச்சல், வாந்தி, பித்தம், வீக்கம் எரி குன்மத்திற்கு வாழைப்பழம் சர்ப்பத்து | 51 |
| கபாடமாத்திரை | 17 |
| கள்ளிக்காக்கை எண்ணெய் | 70 |

| | பக்கம். |
|---|---|
| கண்ணில்நீர்வடிதலுக்குமை | 78 |
| கண்வலிக்கெல்லாம் | 78 |
| கவுசையின்குணம் | 107 |
| கபோலசன்னிக்குத்தயிலம் | 110 |
| கண்டவியாதி ஆக்கிராணப்புகை | 110 |
| கண்டவியாதிக்குத்தயிலம் | 111 |
| கபாலவலிக்குத்தயிலம் | 5 |
| கபாலவலிக்குத்தயிலம் | 135 |
| கல்லடைப்புக்கு | 4 |
| காசத்துக்கு அனுபானம் | 63 |
| காமாலைக்குச்செய்புங்குண | 117 |
| காய்ச்சி ஆறவைத்ததண்ணீர் குடிக்க குளிக்க. | 118 |
| காசத்திற்கு | 130 |
| கிராணிக்கு | 2 |
| கிரந்திக்குநுணுஎண்ணெய் | 34 |
| கிரந்தியரையாப்புக்கு எண் | 90 |
| கிராணிக்கழிச்சலுக்கு | 139 |
| குழந்தைகட்குமாந்தக்குளிகை | 9 |
| குடோரிரசம்கண்படலத்தி | 19 |
| குடல்வாதம் | 22 |
| குதிரைகால்வாதம் | 21 |
| குழிப்புண்ணுக்கு கெந்தி காரச்சிலை | 23 |
| குஷ்டம் 18-க்கு சூரணம் | 36 |
| குன்மங்களுக்குலேகியம் | 44 |
| குலையெரிவுக்கு | 47 |
| குடைச்சலுக்கு சிகாமணி சூரணம் | 53 |
| குன்மத்திற்கு | 64 |
| குன்மத்திற்குச்சூரணம் | 74 |
| குஷ்டத்துக்குமருந்து | 87 |
| குன்மத்திற்குக்கியாழம் | 129 |
| குடிநீர் | 131 |
| கெந்தகபற்பம் | 13 |
| கெந்திரசாயனம் | 71 |
| கைகாலெரிவுக்குஎண்ணெய் | 102 |
| சயித்தியத்திற்கு | 1 |
| சகலவியாதிக்கும் இரசபற்பம் | 16 |

| | பக்கம். |
|---|---|
| சந்துவாதத்திற்குவிழுதிக்க | 21 |
| சகலவலிக்குந்திருகுகள்ளி | 23 |
| சகலவியாதிக்குகெந்தி, கபாடக்குளிகை | 37 |
| சளிகோழைக்குபிரண்டைர | 62 |
| சகலவியாதிக்குகுளிகை | 62 |
| சன்னிசயித்தியத்திற்கு | 64 |
| சன்னிக்கு | 66 |
| சகலரிணங்களுக்கு களிம்பு | 80 |
| சகலகிரந்திக்குஎண்ணெய் | 84 |
| சகலமேகங்களுக்குஎண்ணெ | 85 |
| சகலவிஷங்களுக்கு | 87 |
| சன்னிபதின்மூன்றிற்கு மேற்பூசுந்தயிலம் | 109 |
| சகலமேகத்திற்குஎண்ணெ | 140 |
| சன்னிக்குக்கியாழம் | 131 |
| சரக்குகளுக்குமேல்விஷம் | 6 |
| சகலவீக்கத்திற்குபத்து | 70 |
| சாந்துசந்திரோதயமாத்திரை | 4 |
| சாரீரமுண்டாக | 5 |
| சாலேசரத்திற்குநேத்திராஞ்சனத்தயிலம் | 50 |
| சாரதிராவகத்தில் இலிங்கப | 67 |
| சிறுநீரிறங்க | 44 |
| சிரோஸ்தானசிலதூளரை | 51 |
| சிறுபாம்புகடிக்கு | 87 |
| சீதசுரம், குளிர்சுரம். பவுத்திரங்களுக்கு சூர்ண | 28 |
| சீதசுரத்திற்கனுபானம் | 64 |
| சீதசுரத்திற்குமாத்திரை | 132 |
| சீழ்மூலத்திற்கு | 2 |
| சுகபேதிக்கு | 24 |
| சுகஜன்னிக்கு | 53 |
| சுரக்கியாழம் | 72 |
| சுரங்களுக்கு | 91 |
| சுவாசகாசக்குளிகை | 76 |
| சுழிகணம்அல்லதுசுழிமாந்தம் | 11 |
| சுரஞ்சன்னிகுளிருக்கு ஆனந்தவயிரவக்குளிகை | 36 |
| சூதபற்பம் | 18 |

| | பக்கம். |
|---|---|
| சூதகெந்திதாரசெந்தூரம் | 40 |
| சூலேக்கு | 46 |
| சூலேக்குஎண்ணெய் | 119 |
| செவிநோய்க்குத்தயிலம் | 137 |
| சேத்துவெள்ளேக்கு | 46 |
| சேத்துமசுரத்திற்கு | 89 |
| சோபத்திற்கும்சுரத்திற்குவிஷபாகத்துக்குமருந்து | 116 |
| சோகைகாமாலே நீர்க்கட்டுக்கியாழம் | 81 |
| தந்தவியாதி வாய்கொப்பளிக்குக்கியாழம். | 8 |
| தந்தவாயுவுக்கு வேது | 8 |
| தன்றுவாதம் | 22 |
| தலேநோவுக்குத்திரிபுகை | 48 |
| தந்தவாயுவுக்குஉப்புச்சூரணம் | 61 |
| தந்தவுதிரவியாதிக்கு வேது | 110 |
| தமரகவாயுவுக்கு | 66 |
| தந்தரோகத்திற்கு மருந்து | 126 |
| தந்தவியாதிக்கு | 79 |
| தாம்பரபற்பம் | 65 |
| தாம்பரபற்பம் | 13 |
| தாளகபற்பம் | 14 |
| தாளகபற்பம் | 35 |
| தாகவாந்திக்கு | 129 |
| தாபசுரத்திற்கு | 122 |
| திரிதோஷத்திற்குஉப்புச்சூர | 4 |
| திமிர்நோய்புழுக்குழித்தயில | 17 |
| திமிருக்கு கிரந்தி ஊரல் குஷ்டம் அரிகிரந்திக்கு | 66 |
| தீராதரோகத்திற்கு | 123 |
| தீராதவாந்திக்கு | 5 |
| தீராதவெள்ளேக்கு | 6 |
| துத்தமைகண்ணுக்குமை | 102 |
| துருசுபிளாஸ்த்ரி | 34 |
| தோஷமாந்தத்திற்கு எண்ணே | 10 |
| நார்த்தங்காய்க்கடுகு | 114 |
| நாய்க்கடிக்கு | 2 |
| நாவரட்சிக்குகாளான்சூரணம் | 27 |
| நீரில்ரத்தங்கண்டால்மருந்து | 83 |
| நீரிழிவுக்குச்சூரணம் | 27 |
| நீரிழிவுக்கு | 76 |
| நீர்ச்சுருக்குக்கு | 130 |
| நூல்சமர்த்து | 141 |
| நெல்லிக்காய்கெந்திபற்பம் | 16 |
| நேத்திரவாயுவுக்குக்கலிக்கம் | 18 |
| நேத்திராஞ்சனத்திற்கு | 128 |
| நேத்திராஞ்சனவியாதி தொண்ணூற்ருருக்கு | 137 |
| பவுத்திரகங்கணசிகைஷ | 28 |
| பவுத்திரத்துக்கும் அரையாப்புக்கும்மல்லிமூலிகைகட்டு | 29 |
| பருவுகளுக்கும்பத்து | 31 |
| பயித்தியத்திற்கு ஸ்தானம் | 42 |
| பக்கசூலேசுரவாதத்திற்கு | 66 |
| பல்விஷத்திற்கும் எலிவிஷத் | 59 |
| படர்தாமரைக்கு வாய்வுக்கு | 76 |
| பரங்கிவியாதிக்கு | 119 |
| பல்புழுச்சாக | 79 |
| பரங்கிப்புண்ணுக்கு மேற்பூசும் எண்ணெய் | 134 |
| பாரளந்தான்சக்கரம் | 6 |
| பாஷாணபற்பம் | 61 |
| பாண்டுவிரைவாதத்துக்கு | 67 |
| பித்தத்திற்கு | 66 |
| பித்தத்திற்குக்கியாழம் | 5 |
| பித்தத்திற்குக்கியாழம் | 6 |
| பித்தப்பாண்டுபயித்தியமூர்ச் | 68 |
| பிரமேகம்நீர்க்கடுப்புக்கு | 63 |
| பித்தசுரம் | 116 |
| பித்தவெடிப்புக்கு | 82 |
| பித்தஅதிசாரத்திற்குகியாழ | 131 |
| பித்தமயக்கத்துச் சூரணம் | 134 |
| பித்தக்காதடைப்புக்குத்தயில | 75 |
| புளித்தக்கண்ணுக்கு வெண்கலமை | 20 |
| புத்தஞ்சாரதி | 114 |
| புண்ணுக்கு கொண்ணேகட்டு, குமரிகட்டு, மல்லிகைகட்டு | 31 |
| புண்ணுக்குவீரபிளாஸ்திரி | 32 |

| | பக்கம். |
|---|---|
| புருஷர்கள் மதன கோலாகல ரசமணிமாத்திரை | 81 |
| புருஷவசியம் | 36 |
| பூமணிக்குளிகை | 54 |
| பெருநோய்திமிர்குஷ்டத்தி | 12 |
| பெண்வசியம் | 35 |
| பொன்னுங்கண்ணின்மை | 19 |
| பெருச்சாளிகடிக்கு | 86 |
| பெரும்பாட்டுக்கு | 113 |
| பேதிகொட்டலுக்கு | 30 |
| பேதிக்கும்பெருவயிறுக்கும் | 24 |
| மன்மதக்குழம்பு | 61 |
| மகோதரத்திற்கு | 67 |
| மலசலங்கட்டினால்மருந்து | 78 |
| மகாவிக்கலுக்கு | 80 |
| மயிர்முளைக்கத்தயிலம் | 48 |
| மயக்கத்திற்குக்கலிக்கம் | 80 |
| மருந்துமுறிவு | 88 |
| மருவுக்குக்கியாழம் | 129 |
| மாரடைப்புக்குச்சூரணம் | 135 |
| மாலைக்கண்ணுக்குதும்பைமை | 20 |
| மார்வலிகுன்மபேதிக்கு | 25 |
| மாதவிடாய்வாராதவளுக்குமரு | 72 |
| மாறல்சுரம் | 119 |
| மாந்தசுரத்திற்கு | 123 |
| முழங்கால்வாதம் | 22 |
| மூலவாயுவுக்கு | 3 |
| மூர்ச்சைசன்னிக்கு | 126 |
| மேகரணத்திற்கு | 7 |
| மேகங்களுக்குகளி | 8 |
| மேகத்துக்கு | 8 |
| மேகநாதக்குளிகை | 42 |
| மேற்சுவாசத்திற்கு | 49 |
| மேகத்திற்குலேகியம் | 49 |
| மேகத்திற்கு வெள்ளறுகுகி யாழம் | 50 |
| வயிற்றுக்கடுப்புக்கு | 2 |
| வயிற்றுவலிக்கு | 8 |
| வங்கபற்பம் | 35 |
| வச்சிரக்கியாழம் | 57 |
| வச்சிரவல்லிச்சூர்ணம் | 57 |
| வயிற்றுநோவுக்கு | 57 |
| வண்டுகடிக்குமருந்து | 90 |
| வயிற்றுக்கடுப்புக்கு | 86 |
| வயிற்றுவலிக்கு | 105 |
| வாந்திபேதிக்குமாத்திரை | 132 |
| வாதசுரக்கியாழம் | 80 |
| வாய்ப்புண்ணுக்குஎண்ணெ | 71 |
| வாந்திவிக்கல்இருமலுக்கு | 64 |
| வாயுவுக்கு பலசரக்கு ஏலாதி | 97 |
| வாந்திக்குநெய் | 101 |
| விஷத்திற்குநசியம் | 78 |
| விரைவாதத்திற்கும்பிடிப்பும் | 7 |
| விக்கலுக்கு | 42 |
| விஷநசியம் | 87 |
| விதவையைக்கூடப் பிள்ளையி ல்லாதிருக்க | 89 |
| விஷசுரம் | 107 |
| வில்வாதிலேகியம் | 85 |
| விக்கலுக்குக்கியாழம் | 116 |
| வீரியவிர்த்திக்கு ஒணான்லே கியம் | 59 |
| வீரியவிர்த்திக்கு ஊர்க்குருவி லேகியம் | 60 |
| வீக்கத்திற்கு பிரமிக்கட்டு | 73 |
| வீக்கத்துக்குடிநீர் | 117 |


பொருளடக்கவகராதி

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்களில்

மகாமகத்துவம்பொருந்திய

# தேரையர் வயித்தியம் - 1001.

கலிவிருத்தம்.

ஆதிசத்தியருள்புதல்வாசரண்
மாதிலுற்ற பிணியகலும்படி
வாதியுத்தமர் சித்தர்பதம்பணிந்
தோதிவைத்ததோ ராயிரத்தொன்றுமே. 1

ஒன்றுமாத்திரை யோங்குமுடுபர
நன்றுலேகிய மாடுமைக்கண்ணின்மை
மன்றுசூரண மாக்ராணஞ்சர்க்கரை
வென்றுதேறி மனத்திலிருத்திடே. 2

இருத்திடுமெருந் தெண்ணெய்ரசாயனந்
திருத்திடும்பாலைச் செந்தூரமூலிகை
கறுத்திடுங்கலிக்கங் கஷாயங்கிருதம்
குருத்திடுந்தயிலங் கூழுப்பாண்டமே. 3

பாண்டநற்குழம் பரஞ்சிலையெண்ணெயுங்
கூண்டதுமெழு கோடுபதங்கமும்
வேண்டதுநெய் யிலங்குங்கிருதமு
மேண்டதுக்கவி யோர்ப்புகைப்பத்திடே. 4

பத்திவேதிது பற்பங்காரமுலாஞ்
சித்திக்காரச் சிலையுங்கபாடமு
மத்திதுகட்டு மாத்திரைகற்கமும்
நித்திதுகுடி நீர்பற்பம்பார்த்திடே. 5

சயித்தியத்துக்கு.

ஒண்டரியின் திப்பிலியுள்ளிடை
விண்டரிவகை வீதம்பலமரைக்
கண்டரிமுருங்கைப் பட்டைச்சாறரைத்
திண்டரிசயித்தியமும் பார்த்திடே. 6

### சொறிக்கு.

பார்த்துப்பூவர சன்பட்டையோர்பலந்
தேர்த்துநீராகா ரத்திலாழாக்குடன்
ஏர்த்துமூன்றுநா ளிவ்விதங்கொண்டிடில்
போர்த்துமேசொறி போமுடல்விட்டிடே. 7

### வயிற்றுக்கடுப்புக்கு.

விட்டிடாவின் விழுதுதுளிர்பலம்
பட்டிடாவெரு மைத்தயிராற்பலந்
தட்டிடாய்ப்பழச் சாற்பலமேவிடு
தொட்டிடாவயிற் றுக்கடுப்போகுமே. 8

### நாய்க்கடிக்கு.

ஓடுங்கோழிச் சாறுதிமேனிச்சாற்
றோடுங்கூட்டுச் செவித்துளைவிட்டிடல்
வேடுநாயின் வெளிப்படுந்தோலமிட்
டாடுமில்லாவிட்டா லழிந்திருமே. 9

### விஷத்துக்கு.

தீரடாவெள்ளைச் சிந்திற்கழுகுடன்
வேரடாயிரண்டு மண்ணிற்கீழ்தனில்
சேரடாவிஷந் திக்கென்றிரங்கிடுஞ்
சாரடாமுறை தப்பாதுபாங்கூடே. 10

### கிராணிக்கு.

பாங்குமூவந்திப் பட்டையெண்ணூர்பல
மாங்குமோடி யழிஞ்சிவிரைசுக்கு
நீங்குகீழுக்காய் நெல்லிவேர்கிரந்தையும்
வாங்குநீர்செவ்வல்லிக் கொடிபார்த்திடே. 11

### சீழ்மூலத்துக்கு.

பார்த்திடாய் விடயம்பற்பாடகஞ்
சார்த்திடாய்பரங்கிப் பட்டைசாதிக்காய்
நேர்த்திடாய்ப்படிரெண்டு வெள்ளாட்டுப்பால்
சேர்த்திடாயெரித் தீர்ந்திடாதாரியே. 12

ஆரிதேநிழலாக வுலர்த்திப்பின்
சேரிதேயிடித்தே வடிசெய்துடன்
மாரிதேபனவெட்டு நெய்தேனோடு
பாரிதேகொட்டைப் பாக்களவுண்டிடே. 13

வுண்டியவிரு போதுமேவேழுநாள்
கண்டிடுமூலக் கிராணிசீழ்மூலமும்

நின்றிடுவயி ரெத்தக்கழிச்சலும்
உண்டிடும்நெய்யோ டன்னமுந்தாக்கிடே. 14

மூலவாய்வுக்கு.

தாக்குவாய்ப்பிரண் டைச்சாற்குறுணியாய்
தேக்குவாய்ப்பல மேகரைத்தேபிணி
தோக்குவாயிரண் டுந்தொந்தமாய்க்குழம்
பாக்குவாய்ப்பதம் பாகெனக்காய்ச்சிடே. 15

காய்ச்சிடுகடுக்காய் சுக்குதிப்பிலி
பாச்சிடுமிளகுப் பருவேந்திய
மாச்சிடுவகை யொன்றுக்கரைப்பலந்
தேச்சிடுவறுத்துப் பொடிசெய்திடே. 16

செய்யுஞ்சோமணுதிப் பெருங்காயமாங்
கெய்யுங்குப்பைமேனிப் பொடிசெய்துமே
பெய்யுமின்குழம்பி லிழைத்தாட்டியே
வெய்யஞ்சாற்றினில் விட்டுண்ணக்கண்டிடே. 17

கண்டுமேயொரு கடிப்பிரமாணமாம்
மண்டுநீதமெண் ணெய்ந்துநாட்கொண்டிடில்
வண்டுமூலத்தின் வாய்வையெரித்திடுந்
திண்டுவாய்வட லற்றிடுமாத்திடே. 18

இரணங்களுக்கு சிலையெண்ணெய்.

மாத்துப்புங்கத்தி மாவோடிலுப்பைவேர்
ஆத்துமாவிலி னரசுபூவரசன்
காத்துவாரைக் கடம்புகுளம்புடன்
ஏத்துபுன்னை யிருள்ளியும்வாங்கிடே. 19

வாங்கிடப்பா வகைக்குச்சரிபலம்
ஆங்கிடப்பாமணக் கெண்ணெயரைப்படி
பாங்கிடப்பா பதத்திலெரித்திறுத்
தோங்கிடப்பா துதித்தெடுவார்த்திடே. 20

வாத்திடுநிதமா ராரிணத்தின்மேற்
போர்த்திடுவிப் புருதிப்புரையொடு
கார்த்திவெட்டுக் காயம்பெருத்ததி
லார்த்திடுமரை யாப்பிவைகோறிடே. 21

ஆனந்தவாய்வுக்கு.

கோறிடுந்தேளுக் கொட்டியுழக்கது
சாறிடுநிதந் தப்பாதேயோரைந்து

ஊரிடும்புளி யுப்பும்புகையொடு
மாறுடானந்த வாயுவிட்டோடுமே. 22

ஓடும்வெளவா லுறைந்தமரத்தடி
தேடுஞ்சக்கை யெடுத்தரைத்தேயதை
காடுமுள்ளியின் காய்போலுருட்டியே
போடுமூன்றுநாள் போய்விடுங்கல்லுமே. 23

கல்முருக்கிலைக் காடிவர்த்தனரசம்
நெல்குறுவைமா ரென்றுரவாகவே
வில்பழச்சார்விட்டுக் களிக்கிண்டியே
மல்பொசிக்கையில் மலசலமோடுமே. 24

திரிதோஷத்துக்கு அநுபானச்சூரணம்.

வெட்டுமேகொடி வேலியிந்துப்புடன்
கட்டுமேதிப்பிலிக் கடுக்காய்சமன்
வெட்டுமேவடித்தே வடிகொண்டபின்
மெட்டுமேகொள் வெறுகடிதெனிலே. 25

தேனிற்கொள்ள தெரித்திடும்வாதமாம்
சீனிற்கொள்ள திகைத்திடும்பித்தமாம்
பாணிற்கொள்ளப் பறந்திடும்வூஷணம்
வேணிற்கொள்ள வெகுபசியாகுமே. 26

ஒருவிரைவாதத்துக்கு மெழுகு.

நீங்குநன்மிளகு வகையோர்பலம்
ஓங்குபூரமு மென்றுகளஞ்சிடை
வாங்குலிங்கம் வகையதுகாலதாய
ஆங்குதேன்விட்டரை மெழுகுகாகுமே. 27

ஆடுந்தூதளங்காய் போலுருட்டிடு
தேடுமைந்து தினமிருநேரமும்
வாடுமுன்விரை வாதக்குடைச்சலும்
ஓடுமுப்புபுளி புகைதள்ளிடே. 28

(வேறு) சாந்து சந்திரோதையமாத்திரை.

காந்தரிப்பகைபொரி பூரந்தொடிகடையாதி
சாந்தமொன்றரைமொன்றரை மொன்றரைசம்பீரம்
தாழ்ந்தரைத்தனமணியென மணிபுரிமதநாமம்
சாந்துசந்திரோதைய மதிலழல்நோடுதரியாதே. 29

(வேறு) சூலைக்கு.

கழல்மணிவெள்ளையுள்ளிக் கடுகுடன்வசம்புதேறு
அழகியசுக்கோடைந்து அடுப்பில்வெந்துழக்கதானல்

குழலிடைகூப்பிட்டோடுங் குழலிடுங்குடலில்வாதம்
பழகியசூலைகுன்மம் பாயெடுத்தோடுந்தானே. 30

(வேறு) சாரீரமுண்டாக.

சுக்கடாகடுக் காயுடன்திப்பிலி
ஒக்கடாவாலுளு வையுங்கூட்டியே
நக்கடாதேனில் நாளிலோர்மண்டலம்
அக்கடாகுர லானந்தம்பாடுமே. 31

(வேறு) தீராதவாந்திக்கு.

கடுக்காய்சுக்குவெண்காரங் கடியசீனிக்காரமுடன்
அடுக்காய்சீனித்தேன்கூட்டி யரிதாயெலுமிச்சஞ்சாற்றரைத்து
கொடுக்கவாந்திவிட்டோடுந் துகளும்நாக்கிற்றேய்த்துவிட்டால்
சடக்காரிந்தக்கிரியைதனைச் சதுராய்ச்செய்துமுடிப்பீரே. 32

வேறு.

நெற்பொரியின் சிறுபயறு வில்வமுல்லை நெறியசீ ரேலமுடன் சுக்குநெல்லி, முட்படவே யிளநீர்வெங் தெட்டொன்றாக்கி முத்திய பின் னெடுத்துவடித் தூக்கிக்கொள்ள, சொற்பெரிய சத்திகுன்மஞ் சுரத்தில்சத்தி றுயரமுடன் கிறுகிறுப்பு சுழலைமூர்ச்சி, இப்படியெ ன் றிமையவரும் ரிஷிகள்தாமு மிசைந்தனர்பன் னருந்தமிழின் படி யைக்கண்டே. 33

கபாலவலிக்குத்தயிலம்.

பச்சைமஞ்சள்சாறு ஆதண்டைச்சாறு பருத்தநொச்சி யிலைச் சாறு பகர்வோர்கேளு, இச்சையாமணக்கெண்ணெய் வகையேநாழி இதனுடனே கற்கவகை அரத்தைசதகுப்பி, வைத்தவகை பலமொ ன்றே யரைத்துக்காய்ச்சி வழுவாத பதம்வடித்துத் தலையில்மூழ்க, உச்சிதமாய்க் கபாலவலி யொருத்தலைநோயெல்லாம், ஓடிப்போ மென்னே யுரைத்தல் முனிவர்தாமே. 34

(வேறு) இருமலுக்குக் கியாழம்.

இண்டிலைதூதளை யிசங்குதிப்பிலி
கண்டரிசுக்குடன் கலந்தமென்தநீர்
உண்டபின்னொருதர மிருமலுற்றிடில்
தெண்டமுந்தருவன்யான் தேறனல்லவே. 35

பித்தத்துக்குக் கியாழம்.

பெருத்தநெற்பொறி பேய்ப்புடல்கூவிளம்
பருத்தசுக்குப் பயருடன்வெந்தநீர்
ஒருத்தர்சொல்லவும் வேண்டுமோவண்பீராய்
வருத்தமாம்பித்தம் நாற்பதுமோடுமே. 36

(வேறு) பித்தத்துக்குக் கியாழம்.

கொத்தமல்லிக்கூவிளங் குறுந்தமுட்குநெற்பொரி
ஒத்தசுக்குமுத்தமொடு ருத்தநீருழக்கதாம்
கத்ததிண்டிசர்க்கரைக் கலத்துடன்குடிப்பீராய்
சத்தியென்றுதோற்றுமோ தவிர்க்கலாகுமென்பரே. 37

(வேறு) விக்கலுக்கு.

நீடுமாதளை நெற்பொரிசர்க்கரைத்
தேடுந்திப்பிலித் தேனிற்குழைத்துண்ண
பீடையான பெருவிக்கல்சாத்தியும்
ஓடஓடதுரத்தலு முண்மையே. 38

சரக்குகளுக்கு மேல்விஷம்.

பெரியவாகைப் பெருங்குமிப்பாதிரி
நெறியிற்கூவளை நயமுன்னையுள்ளியும்
பரியசுக்குப் பருஞ்சதாவேலியும்
செரியிற்சிந்திலுந் தோல்விஷஞ்செய்யுமே. 39

(வெண்பா) சரக்குகளுக்கு உள்விஷம்.

கடுகநெல்லித்தான்றிக் கனச்சித்ரமூலம்
நாடுவாகுஞ்சிவதையிவை நாட்டில்—வடிவாய்கேள்
கள்ளேயவிழுங் கனங்குழலிகாணுங்காண்
உள்ளேவிஷ மென்றுரை. 40

(வேறு) பாரளந்தான் சக்கரம்.

ஆதிவிந்துதாரலிங்க மானசத்திநாபியும்
சோதிமூலபஸ்பமுந் துலங்குகாந்தமுஞ்சரி
நீதிநிம்பச்சாற்றினில் நெருங்குகுன்றிநேர்பட
பாதிசத்தியாயிருந்த பாரளந்தான்சக்கரம். 41

சக்கரத்திலோர்மணித் தரிதிருகடுகுநீர்
மிக்கயிஞ்சிசாற்றினில் விட்டமொடருந்திட
பக்கவீச்சுவிக்கல்சத்திப் பத்துமூன்றுசந்நியும்
தக்கசூலைமிக்கவாய்வு சகலவாய்வுமோடுமே. 42

(வேறு) தீராதவெள்ளைக்கு.

கறுத்தோல்நாவலுதித்தோலுங் கரும்பாமலகம்பழாசமும்
அருத்தல்செய்யும்ஆவினெய்யும் அன்பாய்வகைக்குபபடிமுக்கால்
எரிக்குமருந்துதாளிசமு மேலங்கிராம்புசாதிக்காய்
பருக்கமரத்தைமதுரம்பூ பனையின்வகைமுக்காற்பலமே. 43

மூக்கண்கனிபாலரைத்து முதிராப்பதத்தில்தான்வடித்து
நக்கன்தன்னைப்பூசித்து நவநாட்பாதிபலங்கொள்ள
நிக்காச்சுறுக்குநீரடைப்புக்கு நீங்காவெள்ளைச்சதையடைப்பு
எக்காலத்துப்பெரும்பாடு மெலும்பையுருக்கிப்பாண்டுவுடன்
செப்பாமேகமதுவொழியுந் தீராப்பிணியெலாம்பறக்கும்
தப்பாதொழியுமிவையெல்லாந் தரணிமீதுமானிடற்கும்
அப்பாயிதற்கோர்பத்தியமும் ஆவின்பாலுந்தயிராகும்
உப்பாமதனைவறுத்துண்ண வுமையாட்கீசனுரைத்தனரே. 44

### (வேறு) மேகரணத்துக்கு.

பரிதியிரசகர்ப்பூர பலந்தானொன்று பாவையர்பாலூறவைத்து மற்றாநாளும், முருகாமல்நீரதனி லலசிபோடு வுத்தமனேகாய்ந்த பின்பு பொடியதாக்கி, மெருகான கொப்பரைக்காய் கொத்தமல்லி நேர்த்தியாய் லவங்கப்பூ வோமம் வெண்ணெய், வருகிறதோர் துவர்க்குப் பனையின்வெல்லம் மக்களே பணவிடைதான் வைத்துக் கொள்ளே. 45

### தீரும்வியாதி.

கொண்டிடவே பரங்கிப்புண் கிரந்திச்சூலை கொடிதான அரையாப்பு யோனிச்சூலை, நொண்டியிடும் வாதமொடு முடக்குப் புண்கள் நொறுக்கிடுமே பவுத்திரங்கள் நொடியிற்போகும், வென்றிடவே நாவரட்சி சன்னிதோஷம் விதமான சந்திடுப்பு அஷ்டகுன்மம், தென்றிசையில் வயித்தியத்திற்கு வொன்றேபோதும் சித்திதுவே புளிபுகையுந் தூரத்தள்ளே. 46

### இராமபாணக்குளிகை.

இடிமருந்து அரிதாரங் காந்தமெள்ளு எட்டிவிரை சேங்கொட்டை சித்திரமூலம், வடிமருந்து ரசங்கெந்தி மஞ்சளோமம் மாசக்காய் சாதிக்காய் வசம்பீருள்ளி, குடிமருந்து கொள்ளுக்காற் றுரிசுதுத்தம் கோழிமுட்டை யிந்துப்பு கோஷ்டங்கார்கோல், பிடிமருந்து அமுக்கிரு யிடைசமமாக்கி யிடிற்கலச மதியதனி லறையக்கேளே.

### தீரும்வியாதி.

அறையுகிறேன் யோனிதன்னி லிங்கந்தன்னில் அண்டத்தின் புரைபுண்க ளரையின்புண்கள், விறையுறேன் மூக்கரத்தன் கரப்பன்புண்கள் இடிப்புற்றுக் குறிப்புற்று யீரப்புற்று, விறையுறேன் யிடிகரப்பன் குறவுகுஷ்டம் வீச்சுடனே பிறவிச்சு விஷநீர்ப்புற்று, முறையுடனே மண்டலந்தான் கொண்டுசென்றால் மூட்டோடே வியாதியெழுந் திடுமென்பீரே. 48

(வேறு) மேகங்களுக்குக்களி.

எட்டுமேபெருந் தும்பையிலைபதி
ஒட்டுமேயரிசி யுடன்சேர்த்தரை
கட்டுமேயெள்ளெண்ணெய் களிக்கிண்டியுண்
மட்டுமேக மசையறுங்கண்டிடே. 49

தந்தவியாதிக்கு வாய்கொப்பளிக்கக் கியாழம்.

கண்டுமேநாவற் கங்காவிப்பட்டையும்
வெண்டுனர்ச்சலம் விட்டுறவானபின்
கொண்டுநீர்தனை கொப்பளிக்கைந்துநாள்
மூண்டுவாய்வாத மோடுபொய்யல்லவே. 50

அல்லவேலம்பட்டை யாவரம்பட்டை
செல்லவோர்சலஞ் சேர்த்திடித்தூரிடில்
நலலவோரெட்டு நாட்கொப்பளித்திட
வெல்லவே தந்த வாதமுந்தீருமே. 51

இதுவுமது.

தீருஞ்சுக்கது தேறியப்பாக்குடன்
ஏறும்வாயினி விட்டுமேமெல்லிடில்
மீறுதந்த மிகக்கடுப்பேறுநீர்
பாறுங்கொப்பளிக்கப் படும்பஞ்சுமே. 52

தந்தவாய்வுக்கு வேது.

அஞ்சிவாத மடக்கித்தழுதாழை
கொஞ்சிநொச்சிக் கொடுத்திடில்வேதுதான்
மிஞ்சிநீரில் மிளகருணையின்வேர்
பஞ்சுபோலரைப் பத்துமேலேத்திடே. 53

மேகத்துக்கு.

தள்ளுமாவிலிங்கப் பட்டைத்தன்னிடை
விள்ளுமீர்பல மேயரைமோருடன்
கொள்ளுமைந்தினங் கொள்ளமோரன்னம்
துள்ளுமேக மெடுபட்டுவோடுமே. 54

வயிற்றுவலிக்கு.

தூர்முருங்கையின் துளிரினரைப்பலம்
மோர்வெள்ளுள்ளிக் கடுக்காயொருபலம்
தோரைத்தாமரைக் கெண்ணெய்சரியிடை
கோரைத்துரா குழப்பியண்முத்திதே. 55

விரைவாதத்துக்கும் பிடிப்புக்கும்.

முத்திதுமுறை மூன்றுதினங்கொடுப்
பெத்திதுவயர் பேதிதப்பாதரி

மத்திதுவிரை வாதப்பிடிப்பொடு
தித்திதுபுளி கீருமறிந்திடே. 56

## இதுவுமது.

மறந்திடுத்தாமணிச் சார்கழஞ்சிடை
நிறைந்திடாமணக் கெண்ணெயிலூட்டியுண்
ணிறைந்துபேதி யெடுக்குமொருதரம்
உறைந்திடாவலி யொருவகைகண்டதே. 57

கண்டுப்புப்படிகார மீராற்பலம்
விண்டுமேசூதம் விட்டரைத்துண்டைநால்
உண்டுபோது மிருவேளைமண்டலம்
இண்டுத்திரேக மிறுகவுமின்னவே. 58

மின்னையேயெலுமிச் சரசத்துடன்
தன்னையாட்டிச் சனித்திடபூசிமேல்
பின்னைக்காட்டு புளிப்புராணிப்புகை
அன்னைமூன்றுத் தினமுறையானதே. 59

ஆனதேவிரை வாதமகன்றிடும்
போனதேமெய்யிது பொய்யிதல்லவே
தானதேசெய் தறிந்தரிவாய்முறை
தேனதேபொழிந்தே பொசிப்புண்டிடே. 60

உண்டிடும்வசம் புள்ளிவிழுதலைக்
கொண்டிடுமிளகு சிறுசுக்கொடுக்
கண்டிடுவகை யொன்றுக்கரைப்பலந்
தொன்றிடுமாரைத் தூட்டுவென்னீரிலே. 61

வென்னீரிற்வெற்றியா மைந்துநாள்
நன்னிநாக்குமே லட்டிநாயகத்தின்
கன்னியேபுத்துக் கட்டுத்தொடியரை
முன்னியேபாலில் மூன்றுநாள்தீரிடே. 62

தீருடுன்னி தெருபுளியின்னிலை
ஈருடீரெலு மிச்சக்கனிரசம்
கோருடீர்வகைக்குப் பலம்ரண்டுதான்
மாருடீரெருமைத் தயிர்சேர்த்திடே. 63

## குழந்தைகட்குமாந்தக்குளிகை.

சேர்த்திடுங்குழப்பியே தின்றுமூன்றுநாள்
வார்த்திடுவயி ரேத்தமரிபடு
மேத்திடுபுது வண்ணத்தயிருடன்
சாத்திடும்புளிதான் விட்டரிந்திடே. 64

அரிந்திடும்பழச் சாறுடனுவின்பால்
தெரிந்திடும்வகைசேர் பலம்ரண்டுதான்
வரிந்திடுநிதம் வாங்கொருமூன்றுநாள்
சொரிந்திடுமேழுதிர்ந் தொத்துப்போகுமே. 65

போகுஞ்சண்பகப் பூவிலாமிச்சம்வேர்
ஏகுங்கோஷடமோ டேலங்கோரோசனை
வேகுஞ்சாத்திரப் பேதிமதுரமும்
வாகும்வெட்டிவேர் மாசிப்பச்சொன்பதே. 66

ஒன்பதுவகைக் கொண்டுகழஞ்சிடை
மின்பதுவெட்டிவேர் தண்டுசாற்றினில்
நன்பதுவெழிநாழி கையாட்டிப்பின்
அன்பதுகுன்றி போலத்திரட்டிடே. 67

திரட்டியேயுலர்த்தி யொருமாத்திரை
விரட்டிடுமுலைப் பாலினில்வென்னீரில்
கொரட்டிடுமிழைத்தே கொடுமூன்றுநாள்
கரட்டிடுமீன் கெடும்பிணியோடுமே. 68

எழுவகைமாந்தத்துக்கு.

ஆவுஞ்சின்னி யடவுவெண்ணொச்சிலை
ஏவும்வேப்பிலைச் சீந்திலிடித்தநீர்
மேவுமூன்றுநாள் மேத்துவளையிடில்
நோவுமாந்தம் நொடிக்குள்ளேநீங்குமே. 69

நீங்குங்கோரோசனைத் திப்பிலியுள்ளி
ஓங்குமோமதுரம் வகையொன்றுக்கு
காங்குநீயொரு கழஞ்சிடை தூக்கியே
வாங்குமண்டலம் வெண்கருவார்த்திடே. 70

வார்த்திடுமுலைப்பால் விதமாகவே
தோர்த்திடும்வரைத் துள்ளுக்குமூன்றுநாள்
ஏர்த்திடும்வகை மாந்தமோரேழையும்
பார்த்திடும்புளி யுப்பாகாதன்னமே. 71

தோஷமாந்தத்துக்கு எண்ணெய்.

அன்னமேமுருங்கைப் பட்டைத்தன்னுடன்
முன்னமேவெண்கருவும் வெள்ளுளியும்
மின்னமேவேப் பெண்ணெயிவைநாலுடன்
வின்னமேசெயி தயிலமிறக்கிடே. 72

இறக்கிடுந்தயிலம் நெல்லைக்குத்தியே
உறக்கிடுங்கன்னி விட்டுநாவினிவது

துரிக்கிடுந்தடவ தோஷமாந்தமும்
எரிக்கிடுமிது மெய்முறைக்கண்டிடே 73

இதுவுமது.

கண்டிடுசாதிக்காய் சாதிப்பத்திரி
உண்டிடேலவுங்கப் பட்டைதன்னுடன்
கொண்டிடுமல்லிக் கோஷ்டங்கோரோசினை
செண்டிடுஞ் செண்பகமலர்த்திடே. 74

சேர்த்துக்கார்போக வரிசிமதுரமாம்
பார்த்துலவுங்கப் பத்திரிசீரகம்
ஏர்த்துச்செங்கழ னீர்க்கிழங்கேலமும்
கார்த்துவோர்வகை காற்பலமாட்டிடே. 75

ஆட்டிடாமணக் கெண்ணெயீராற்பலம்
சூட்டிடாய்நற்பசும் வெண்ணெயார்பலம்
மூட்டிடாயெள் ளெண்ணெபலமூன்றுதான்
காட்டிடாய்முருங் கையிலைச்சாத்திடே. 76

சாத்திடாயிடை தானெரெண்டுபலம்
சேர்த்திடாவெறித்து மெழுகாம்பதம்
வார்த்திடாய்பல மாமுறைமூன்றுநாள்
கார்த்திடாயுதிர கணந்தாளவே. 77

சுழிகணம் அல்லது சுழிமாந்தம்.

தாளடாவீருள்ளிச் சாறுவெள்ளீண்டின்
கேளடாமணக் கெண்ணெயுஞ்சேரதாய்
சூளடாயெரித் துப்பலங்கொண்டிடில்
வாளடாசுழி மாந்தமும்நீங்குமே. 78

நீங்குமேபச்சை நெல்வுமியோர்பலம்
பாங்குமேயகத் திப்பட்டையார்பலம்
ஓங்குமேயுள்ளி யோரிடையோர்பலம்
தாங்குநன்னாரி தான்பலம்நாட்டிடே. 79

நாட்டரைப்படி நற்சலம்விட்டுடன்
சூட்டடுப்பில்வைத்துச் சுண்டக்காச்சியே
மூட்டடுத்தையே யொருமூன்றுநாள்
மாட்டடுத்தவிச் சுழிகணமார்த்திடே. 80

மார்த்திடும்பொன் னாங்கண்ணிவல்லாரையே
ஏர்த்திடும்புளி யாகீழாநெல்லி
சேர்த்திடுந்துள சிச்சிறுபுள்ளடி
போர்த்திடுமிறு பூலாத்தகரையே. 81

தகரையோரிலைத் தாமரைப்பூவிலை
அவரைதூதுவரை யம்மான்பச்சிலை
துவரைபீர்க்கிலை காரவெண்ணொச்சிலை
அவரைசெந்நா யுருவிக்காவேளையே. 82

வேளைமுத்திரு சுக்குடன்வாடுதிண்
ணளைவேலிப் பருத்திமிளகுசுக்
காளையடாதோ டைக்கருநொச்சியாய்
வேளைசின்னுவேம்பு வட்டப்புல்லிதே. 83

புல்லிதுகனம் பூண்டுநுனித்துளிர்
செல்லிதுபரி வாலிசிறுகீரை
வெல்லிதுமுசுக் கைவேற்முருங்கிலை
சொல்லிதுபொன் முசுட்டையும்பாங்கிடே. 84

பாங்கடத்தின்னரிப் பயித்தங்கோரை
நீங்கடத்தினி லக்குமிழாவாரை
வேங்கடத்தி னுரைவிஷ்ணுகாந்தியும்
தாங்கடத்திற் சங்கங்குப்பிதாக்கிடே. 85

இதுவுமது.

தாக்கடாசெங்கத் தாரினுவத்துளிர்
மேக்கடாகண்டங் கத்திரிவில்வமுந்
தேக்கடாசீந்திற் குட்டிவிளாமிச்சன்
தோக்கடாபிடித் தொருபடிச்சாறுமே. 86

சாறுஞ்சீரகங் கிராம்புவசம்பொடு
சேறுமுள்ளி திப்பிலிபற்பாடகம்
நேறுமேகடு ரோகணிமஞ்சளாம்
மாறும்புந்திப்பழ மாமீருள்ளியே. 87

உள்ளிடாமை யோடுசீரகம்
விள்ளிடாழி நுரைவகைக்கோர்பலம்
தெள்ளிடாடடி சித்தாமணக்கெண்ணெய்சேர்த்
துள்ளிடாய்படி தோத்திரெண்டேத்திடே. 88

எத்திட்டேயெறித் தேயிருத்தேயுடன்
தோத்திட்டேதினந் துட்டெடையுள்ளுக்கு
மாத்திட்டேகன மாந்தமோரேழையும்
பேத்திட்டேபுளி யப்பில்லைக்கண்டிடே. 89

பெருநோய்திமிர்குஷ்டத்துக்கு.

கண்டிடேஎலைக் கள்ளிசமூலமுஞ்
செண்டிடுப்பொடி செய்திடுமார்பலம்

துண்டிடுமஞ்சள் தூளிடையார்பலம்
எண்டிடுங்கலசத்தி விருத்திடே. 90

இருத்திடும்பலமே யரையாவினீர்
புரித்திடுமிருபோது கொள்மண்டலம்
முரித்திடும்பெரு நோயின்திமிர்வாதம்
பரித்திடுபசும் பாலன்னஞ்சட்டமே. 91

சட்டமாநெறி யிஞ்சியின்சாறிடை
திட்டமாய்க்கொடு சோரையின்மூன்றுநாள்
தொட்டபோதுமே கரணமகன்றிடும்
விட்டகலுங்குஷ்டம் பிரண்டோடுமே. 92

தாம்பரபஸ்பம்.

ஓடுமாத்தலலரி யிலையரைத்
தேடுந்தாம்பர மீதிற்கவசஞ்செய்
ஓடுமூடிசந்தொக்க மண்சிலையாற்
போடுமேகெசப்புடம் போடபற்பமே. 93

அனுபானம்.

பற்பங்காலதான் பணவிடைதூக்கியே
விற்பமாநெய் விட்டனுபானமாய்
நற்பமாயரை மண்டலம்நாட்டியுண்
அற்பமாபலநோய்க் குஷ்டமாறுமே. 94

கெந்தகபற்பம்.

மாறுங்கெந்தியில் வைத்திடுவேப்பிலைச்
சாறுசேர்த்தரைப்பிடு செம்பின்மேல்
தோறுமல்லிலைத் தேங்காய்பாலாட்டுடன்
நேறுஞ்சிலைக் கெசப்புடநீறுமே. 95

அனுபானம்.

நீறுமாவிநெய்யிற் பணங்காவிடை
மாறுசேர்த்துண்ணரை மண்டலமுந்தின்
ஒறுங்கூட்டிறைச்சி நெய்யின்பாலன்னம்
ஏறுங்குஷ்டம் பலநோயிறங்குமே. 96

அண்டவாதம் அரோசிகம்.

இறங்குநற்கருங்கோழி யண்டத்துள்ளே
உறங்கும்வெண்கருவை யெடுத்தேயுடன்
மிறங்குகெந்தியில் விட்டரைமூன்றுநாள்
வறங்குதீய்ந்தமுன் வைத்தேயுலர்த்திடே. 97

அனுபானம்.

உலர்த்தியானபின்னோர் பணந்தன்னிடைச்
சலத்திடாக்கதண்டாவி நெய்தன்னிலுண்

பிலத்திடாப்பெரு நோயுமகோதரம்
தலத்திடாச்சகல நோயைக்கண்டிடே. 98

### கியாழமனுபானம்.

கண்டசுக்குக் கடுகுடன்பேய்புடல்
விண்டதேக்கு மிகுகொத்தமல்லியும்
கொண்டநீரில் குறித்துக்குடிப்பீராய்
அண்டவாத மரோசிகந்தீருமே. 99

### தாளகபற்பம்.

தீருங்காளகம் சுத்திசெய்தோர்பலம்
பேரும்பீர்க்கிலிலை யரைத்தேயப்பி
ஓடுஞ்சீலைமண்ணீ ரெண்டுசெய்துடன்
தேருமொன்றரைச் சாண்புடம்நீறுமே. 100
நீறுமாத்தங் கவசம்நிகத்தியே
ஏறுந்தூபமிட்ட யெடுத்தேயதை
ஓறும்பொற்பணம் தூக்கனுபானதுள்
பாறுங்காசம் சயம்பரந்தோடுமே. 101

### இதுவுமது.

ஓடுமண்டைக் கருவெடுத்தோட்டினுள்
ஆடுஞ்சூதங் கழஞ்சிவிட்டப்பனே
சாடும்நல்வெள்ளைச் சாறுசமனிடை
மூடுஞ்சீலைமண் மூவிரண்டொன்றுமே. 102
ஒன்றுமேகுழியோர் கெசமேபுடம்
மன்றுமேதணல் நல்லதோர்பற்பமாய்
என்றுமேயரிசி யிடைதூக்கியே
அன்றுநற்பசு நெய்யுறவாகுமே. 103
ஆகும்தேய்த்தான்விரை அமுக்கிருவேர்
தாகும்பரங்கிச் சக்கைபுளிவிரை
பாகுமேவகைக் கோர்பலந்தூக்கியே
எகுமேயிடித் தேவடிசெய்திடே. 104
செய்யுஞ்சூரணத்திற் பலம்காலிடை
வையுந்தேனதில் மத்தித்தெண்போதுவுண்
செய்யும்ரத்தப் பிரமியம்ஓடிடும்
கொய்யும்நல்முளைக் கீரைப்பருப்புண்ணே. 105

### இரத்தப்பிரமியத்திற்கு கலிக்கம்.

உண்ணலிங்கம் நாபிமிளகோரிடை
தண்ணரைப்பழச் சாற்றினிலோர்தினம்

ஒண்ணவேதிரட்டி யுடனுலர்த்தியே
எண்ணவேபழச் சாற்றிலிழைத்திடே. 106

இதுவுமது.

இழைத்திடுங்கண்ணி லேறியசன்னியு
துழைத்திடுஞ்சிரோ பாரஞ்சுரத்தையும்
முழைத்திடும்வாதப் பித்தமோரைந்தையும்
கழைத்திடும்நற் களிக்கமுங்தேத்திடே. 107

ஏத்திடுஞ்சுக் கிந்துப்புத்திரிபலைப்
போத்திடுவசம் புள்ளிசமுத்திரா
மாத்திடுமிளகு வகையோர்பலஞ்
சாத்திடுவோர் கழஞ்சிடைசாட்டிடே. 108

சாட்டிடாய்பழச் சாற்றினிலாட்டியே
நீட்டிடாயன் னிழலிலுடர்த்துடன்
தீட்டிடாவெள் ளிலைரசத்திலிழைக்
காட்டிடாய்கலிக்க மீதறிந்திடே. 109

அனுபானம்.

அரிந்திடுஞ்சுர மப்பாசிரசில்நோய்
ரரிந்திடுஞ்சளி தனிசிரோபாரமும்
பரிந்திடுமூலைப் பாலிலிழைத்திடு
தெரிந்திடுமிது செய்திடவோடுமே. 110

ஆக்கிராணம்.

ஓடிடுமிள கோமன்சமுத்திரா
வாடிடுமிலுப்பை யரைப்போர்வகை
தேடிடுவோர் கழஞ்சிடைதூக்கியே
நாடிடுவரை நன்றாய்வடித்திடே. 111

இதுவுமது.

வடித்திடுப்பொடி வாங்கோர்பணவிடை
தடித்திடுஞ்சளி தன்சிரோபாரமும்
முடித்திடுநோயிம் மூன்றுந்தெறிந்திட
வடித்திடுமிதுவாக் கிராணங்கார்த்திடே. 112

நெல்லிக்காய் கெந்திபற்பம்.

கார்த்திடும்நெல்லிக் காய்கெந்தியோர்பலம்
ஏர்த்திடுமரைக் கீரைசமனுடன்
சேர்த்திடுமரைத் தோர்தினம்பற்பமாம்
தோர்த்திடுகழஞ்சி யிடைதூக்கிடே. 113

தூக்கிடுமிரு போதரைமண்டலம்
வாக்கிடுங்குருவை மனத்தியானமாய்த்
தூக்கிடுங்குஷ்டந் தப்பாதிறங்கிடும்
போக்கிடும்புளி யுப்புதகையுமே. 114

சகலவியாதிக்கும் இரசபற்பம்.

தகையுமேனியின் சாற்படிரெண்டுடன்
புகையுஞ்சூத மரைப்பலம்போடிரு
வகையுஞ்சேர்த்துடன் வைத்தெரிபாண்டத்துள்
திகையுமெழு காகவறுத்திடே. 115

அனுபானம்.

வறுத்திடும்பற்ப மாகும்பணவிடை
நிறுத்திடும்பசு நெய்யில்மேகம்படு
மிறுத்திடு நீரிழிவுக்குச்சர்க்கரை
வெறுத்திடுஞ்சயத் துக்குவெல்லார்த்திடே. 116

ஆர்த்திடும்வாதத் துக்குவாழைப்பழம்
மார்த்திடும்வென்னியில் மாலைக்கண்ணுக்கும்
பார்த்திடுபாண்டுக்கு மூங்கிற்பட்டைத்தூள்
சேர்த்திடுமெரிப் புக்குவெண்சீனியே. 117

அனுபானம்.

சீனிசன்னிக்கு திருகடுகியாழத்தில்
வானிதேனில் மலஞ்சலஞ்சிக்கினால்
வானிவாழைப்பூச் சாறிடுஞ்சூலைக்கு
கூனிசீதசுரம்போந் திப்பிலிக்கே. 118

பீலிக்கைசொறி குட்டம்பொருந்திடும்
தேலிக்கையான் தகரையின்சாற்றினில்
கேலிக்கையான் தலைநோய்க்கிச்சாறு
மாலிக்கைத்திப் பிலிவிறல்போக்கிடே. 119

போக்கிடும்புலி வேம்புவிளாஞ்சிரா
ஆக்கிடுமோழிஞ்சிவேர் நால்வகை
தோக்கிடும்பெரும் பாண்டத்துள்ளிட்டிதை
தாக்கிடுங்குழி யின்புடம்தானிடே. 120

## திமிர்நோய் புழுக்கு குழித்தயிலம்.

தானியேகன லாரித்தனித்தெடுத்
தேனிடும்பெருஞ் செவ்வரிதாரமும்
பேணிடுமெய்யிற் பூசிடுமூன்றுநாள்
வாணிடுங்கதிர் முன்வந்திருத்திடே. 121

இருத்திடும்பெரு நோய்திமிரும்பிடு
மரித்திடுமிதெல்லாம் வெளிவாங்கிடு
விரித்திடுந்தயி லம்மிதுநேர்த்தியை
வருத்திடுங்குரு வாக்குப்பொய்யல்லவே. 122

## இலிங்க பற்பம்.

அல்லவேயெருக் கம்பாலரைப்படி
வெல்லலிங்கமிடைப்பல மொன்றுதான்
செல்லவேதின மூன்றரைத்தேயுடன்
சல்லவேவில்லைத் தட்டியுலர்த்திடே. 123

உலர்த்திடுகல சத்துளொடுக்கியே
மலர்த்திடுசில்லு மூடிமண்சிலைசெய்
திலர்த்திடுப்பாண்டத் திட்டுமணல்சொரி
பெலர்த்திடுமடுப் பேற்றியெரித்திடே. 124

எரித்திடுஞ்சிவப் பேறுமணலிலே
தரித்திடும்லிங்கந் தானதுபற்பமாம்
விரித்திடும்வியா திக்குப்பணவிடை
தரித்திடுமனு பானமரிந்திடே. 125

### சூத பற்பம்.

அரிந்திடுஞ்சூத மப்பாபலமிடை
சொரிந்திடுங்கொட்டைக் கரந்தைரசமதில்
தெரிந்துவாட்டிடச் சாமத்திரண்டுடன்
விரிந்துமவ்விலை வைத்தரைத்தப்பிடே. 126

தப்பிச்சிலைமண் ணேழுந்தரித்துடன்
ஒப்பிவெய்ய லுலர்த்தியேவந்தபின்
மெப்புக்கொக்குப் புடமிடபற்பமாம்
செப்புவெல்லத் திடுபணஞ்சேர்த்திடே. 127

### அனுபானம்.

சேர்த்திடுமிருபோது மோரேழ்தினம்
கார்த்திடுங்கடும் பத்தியங்கண்டறி
வேர்த்திடுமிள வென்னீரோடன்னமும்
ஆர்த்திடுங்கண்ட மாலையுஞ்சூலையே. 128

### நேத்திரவாய்வுக்குக் கலிக்கம்.

சூலும்வெற்றிலைச் சாத்திட்டுச்சுக்குரைத்
தாலுஞ்சத்தெடுத் தேதரிக்கண்ணினில்
மேலும்வாயு வெளிப்படநீங்கியப்
பாலும்மோடிப் பறந்திடுந்தாக்கிடே. 129

தாக்கிடுஞ்செம்புத் தட்டைக்கவிழ்த்ததில்
பார்த்திடும்பசு வெண்ணெய்ப்பலமதில்
சேர்த்திடும்வைத்திழை செம்பிரமியன்
சார்த்திடுவிட்டிடாய் சமனுட்டியே. 130

ஆட்டிடாயிருந் தாரிருநாழிகைத்
தீட்டிடாய்தீப தூபங்கொடுத்துடன்
கூட்டிடாய்ப்பரணைக் குள்ளடைத்துமை
நாட்டிடாய்ப்பத்து நாளிருபோதிடே. 131

போதிடும்படலம் புழுவெட்டொடு
மீதிடுஞ்சல மிட்டக்குடைச்சலும்

சாதிடும்பறக்குந் தவறுமுறை
யூதிடும்புளி யுப்புப்புகைதள்ளே. 132

பொன்னுங்கண்ணின் மை.

தள்ளும்பொன்னுங் கணிரசங்கற்கண்டு
உள்ளுட்டுறவு செய்துமறைத்துடன்
விள்ளுகம்மாறு வெள்ளிலைச்சார்துளி
கொள்ளுநற்பாணைக் குளேமாட்டிடே. 133

மாட்டுந்தூபமும் வந்தனைசெய்துமை
நாட்டுமண்டலம் நாளிருபோதிடில்
சூட்டுக்குத்தலுஞ் சூலைப்புகைச்சலும்
ஓட்டும்பத்திய மொன்றிலைதின்றிடே. 134

குடோரிசம் கண்படலத்திற்கு.

தின்றுநாசி கரங்குடோரியிலை
மன்றுயீருள்ளி வாங்குமதினிறம்
கன்றிடும்வகைக் கொன்றுக்கழஞ்சிடை
தொன்றிடுஞ்சுற்றித் துணிக்குள்வையவே. 135

வையடாபொட்டணமாகக் கண்ணினீர்
செய்யடாப்பிழிந் தூதிருமூன்றுநாள்
பையடாமுப்படலம் விட்டோடிடும்
மெய்யடாபுளி விட்டுண்ணத்தீருமே. 136

கண்படலத்திற்கு.

தீரும்வெள்ளிலைப் பத்திரிக்காடியில்
சேரும்விட்டரைத் தேயிருநேரமும்
பாரும்நாளேழுப் பாவைமேற்கட்டிடில்
ஏறுங்கண்படல மிழிந்தோடுமே. 137

ஓடும்பத்திய முப்புபுளிதள்ளி
ஆடும்வென்னீரோ டன்னம்புசித்திடில்
நாடுதேரை யனன்மொழியாமிது
தேடுமிம்முறை செய்துகைகண்டதே. 138

### இதுவுமது.

கண்டிடல்விலைக் காணாசம்பலம்
தண்டிடச்செப்புத் தகட்டைக்கவிழ்த்ததில்
விண்டிடப்பசு வெண்ணெய்விட்டோர்பலம்
கொண்டிடப்பீத ரோகணியாட்டிடே. 139

ஆட்டிடாய்க்கழஞ்சி யிடையானபின்
மாட்டிடாய்மேல் மறுசெம்பினுலிழை
நாட்டிடாயொரு நாள்தவறுமலே
மூட்டிடாய்ப்பரணைக் குள்ளும்போற்றிடே. 140

### கண்படலம் சிகப்பு நீரேத்தலுக்கு மை.

போற்றிடுமையிற் பொற்பணந்தானிடை
ஏற்றிடுமிரு நோமுமேழுநாள்
பாற்றிடும்படலஞ் சிகப்புநீரும்
ஊற்றிடுஞ்சூலை யோடிடுஞ்செய்திடே. 141

செய்யடாபுளி சேரும்நாகப்புகை
மெய்யடாயிள வென்னீரோடன்னமும்
ஐயடாயீ தறிந்திடும்பத்தியம்
பொய்யடாயிலை பெண்மையல்தீருமே. 142

### மாலைக்கண்ணுக்கு தும்பை மை.

தீரடாசிறு தும்பையின்சாறது
சோடாபிழிந் தீர்காத்தாலிழை
பாரடாபரிந் தேயிடுங்கண்ணினுள்
மாரடாயந்தி மாலைவிட்டோடுமே. 143

ஆடப்பாபத்திய முன்னறிந்துகொள்
போடப்பாயேழு போதிருநோமும்
சாடப்பாபுளி யுப்புகையுந்தவிர்
நாடப்பாவென்னீ ரன்னமுண்டோடுமே. 144

### புளித்தகண்ணுக்கு வெண்கல மை.

ஓடும்வெண்கல மொன்றுபதங்கம்மை
சாடுஞ்சங்கிலைச் சார்பிழிநாட்டுமே

ஆடுஞ்செப்பிஞ லப்பமையானபின்
போடுவேழுநாள் புளித்தகண்ணுறுமே. 145

ஆறும்பாசிப் பயறுடனுவின்பால்
சேறும்நற்புழுங்க லரிசியின்மா
நேறுஞ்சர்க்கரை நெய்சுக்குச்சீரகம்
சேறுநற்களிக் கிண்டுண்ணப்போகுமே. 146

கண் எழுச்சிக்கு.

இல்லையேகுங்குடற் சிறக்கொண்டைகொய்
தில்லையேகுருதி யெடுத்தேயதை
அல்லையே பகலார்தினமேபிடி
செல்லவேயெழுச்சியும் புண்ணுறுமே. 147

செவிநோய்க்குச் சதுரக்கள்ளி சிட்சை பரிகாரம்.

ஆறுமேசதுரக் கள்ளியைத்தணல்
நேறுமேவதக்கி யிருநோமும்
சாறுமேபிழிந்தாடைச் செவியிநோய்
தீறுமேபத்தியம் புளித்தள்ளிடே. 148

தள்ளடாநல்லுசித மாத்தடி
உள்ளடாவிளையுங் குடையுங்காளான்
மெள்ளடாபலமே யெடுத்துள்ளிடி
தெள்ளடாபலந்தேன் விட்டிழைத்திடே. 149

சந்துவாதத்திற்கு விழுதிக்களி.

எத்திதுவிழுதி யிலையோர்பலம்
செத்திதுபல்லரியிற் கடுகுடன்
கத்திதுயிடித்துக் களிகிண்டியுண்
மத்திதுசந்து வாதமுமில்லையே. 150

இடுப்பின்வாதம்.

இல்லையேபொடுதலை யினிலைபிடி
வல்லையேபனவெட்டு மிளகுடன்
அல்லையேசுக்குவுள்ளி அரைத்தின்ன
இல்லையேயிடுப்பின் வாதந்தானுமே. 151

குடல்வாதம்.

தானுமெக்குருஞ்சியிலை யெண்பலம்
நானும்மேலவணச் சிலம்விட்டுவாய்
பானும்பல்லசையுடன் மேவுவாயுவும்
தேனும்வாய்க்குடல் வாதமுஞ்சுத்துமே. 152

சுத்துமத்துடன் மண்ணெடுநண்டுளை
வெத்துமுட்டையும் வெண்கருசுன்னமும்
சித்துவாமணக் கெண்ணெயிற்காச்சியே
குத்துசுத்துங் குடல்வாதந்தெரிந்ததே. 153

தன்றுவாதம்.

தெரிந்துமஞ்சணத் தீயிலையெண்பலம்
பரிந்துபோட்டது பாண்டத்துநீர்த்துளி
சொரிந்துமாச்சிலை சுத்திக்குருவைமா
வரிந்துப்பிட்டு வேகவைத்துப்பாங்கிடே. 154

பாங்குயெள்ளெண்ணெய்ப் பார்பனைவெட்டொடு
ஆங்குசெய்து நாளாறிருநேரமும்
வாங்குருளையினி வாதத்தெரித்திடு
நீங்கிவுப்புநிறுத்தி நிலைகொளே. 155

கொள்ளுகுப்பைமேனிக் கோவைச்சாறுடன்
விள்ளுடன்முள்ளி மிளகுவசம்பொடு
துள்ளுமேயரைத் தின்றுமேகொடுத்தொடு
தள்ளுமேகமுந் தன்றுவாய்வெட்டுமே. 156

முழங்கால்வாதம்.

எட்டுங்காரத்தொட் டிலைச்சாறுதன்னோடும்
கட்டுஞ்சுக்கானகல் காச்சிடுபூசிமேல்
மட்டுங்கோதை வறுத்தாவிக்கட்டிடில்
விட்டுவோடு முழங்காலின்நோயன்றே. 157

அஷ்டகெண்டவாதம்.

எத்தமான்செவியிலைக் கள்ளிசெந்தணல்
இந்தவாண்டும் வெதுப்பிப்பிழிந்துநீர்

தண்டுவாதத் தடவிமுறுக்கிடில்
கொண்டைவாதங் கெடுங்கெடுங்காத்திடே. 158

கார்த்திருந்திருகு கள்ளியும்
ஏர்த்திடும்வாதத் தணலிட்டுவெதுப்பிடு
வேர்த்திடுமாசம் விட்டுமுறுக்கியே
மார்த்திடுங்கெண்டை வாதம்பின்னெட்டுமே. 159

எட்டுமேதிருகு கள்ளிவேருடன்
வெட்டுமேதண லிட்டுவெதுப்புடன்
கட்டுமேபிசைந்து கடிநோய்நிதம்
மட்டுமேகுதி வாதமுமேங்குமே. 160

குதிரைகால்வாதம்.

ஏங்குவாமணக் கெண்ணெய்தடவியே
தாங்கிநொச்சிலைத் தன்னையவித்தெடு
ஆங்குநாளைங் தடுத்துமேகட்டிடில்
வாங்குமேகுதி வாதமுங்கோரிடே. 161

கோரிடின்னங் கொட்டைக்கிரந்தையுடன்
தூரிடுமேவைத்துக் கட்டுமூன்றுநாள்
பாரிடுங்குதிவாத மகன்றிடும்
தேரிடுமுறை செய்யிதுகண்டதே. 162

கண்டிடுந்திருகு கள்ளிவேருடன்
விண்டிடும்வசம் புள்ளிமிளகொடு
கொண்டிடுமறைத் துக்கொதிசெய்துபின்
வெண்டிடுமெள்ளெண்ணெ யுறவாகவே. 163

சகலவலிக்குத் திருகுள்ளி எண்ணெய்.

ஆகவேகுழப்பி யதைமெய்யினில்
வேகவேதுவளை யிட்டுப்பூசிடில்
போகவேவலி வாதம்புகன்றிடும்
தாகவென்னீ ரோடன்னமுமாகுமே. 164

ஆகுமெள்ளெண்ணெ யாமணக்கெண்ணெயோ
டேகும்வேப்பெண்ணெ யிம்மூன்றுநாற்பலம்
நேகுநொச்சியின்வேர் தழுதாழைவேர்
தாகுவுள்ளி வசம்புமிஞாகிடே. 165

### சுகபேதிக்கு

கிட்டடாவகைக் கோர்பலங்காச்சிடு
தெட்டடாசரீரத்துக்குத் தொக்கடம்
விட்டடாபிசைந்தே யிடுமூன்றுநாள்
மட்டடாசருவாங்கமு மோடுமே. 166

ஒடுஞ்சாரளை யுடன்கிழங்கோர்பலம்
மாடுநிம்பழச்சார் விட்டரைத்துடன்
தேடும்வென்னியிற் சர்க்கறைக்கண்டிடில்
சாடும்பேதியில் தான்விழுந்தப்பாதே. 167

### இதுவுமது.

தப்பாதின்னமுஞ் சாரளையின்தொழுத்
துப்பாதாட்டியே காற்பலங்கொண்டிடில்
அப்பாபாரும் பெருவயறற்றிடும்
ஒப்பாயன்னமு மோருடனுண்டிடே. 168

ஒண்டிடும்பேயின்காய்த் தொட்டிவித்துவும்
வெண்டிடுமிளகு வசம்புசுக்கு
கொண்டிடுஞ்சாரணைக் கிழங்குள்ளிடை
தண்டிடும்வகைக் கோர்பலங்காட்டிடே. 169

### பேதிக்கும் பெருவயிறுக்கும்.

காட்டிடாமணக் கெண்ணெயரைப்படி
கூட்டிடாய்வகை யெல்லாங்கொதித்துவுண்
மாட்டிடாயொரு மண்டலந்துட்டிடை
ஊட்டடாபெரு வயிற்றுமாறுமே. 170

மாரிவசம்பு மிளகுவெள்ளுள்ளியும்
சேர்வரிசெங்கத் தாரியின்வேர்சமன்
ஏரனல்தணை யிட்டிநீராக்கியே
பாரநெய்தனிற் பாங்காக்குழைத்திடே. 171

குழைத்துமூன்றுநாள் கொதித்துமேபூசிடில்
வலித்துநொந்திடு மார்வலிவாதமும்
இளைத்துவாடியே தெங்குநில்லாமலே
களைந்துஓடிடுங் கார்புகைதள்ளிடே. 172

### மார்வலி குன்மபேதிக்கு.

தள்ளுமுக்காவேளை சாரணையின்வேர்
துள்ளுமிளகு சுக்குவெள்ளுள்ளியும்
விள்ளுநீரினில் வென்னீரிலாட்டியே
கொள்ளுமூன்று தினங்குன்மந்தீருமே. 173

### அனுபானம்.

திரும்பத்தியஞ் செப்புவேன்கேளுநீ
பாரும்பெண்மயல் போகமகற்றிடு
வேருசெய் புளியுப்புமிகத்தள்ளி
சேருவென்னீரோ டன்னமுங்கொண்டிடே. 174

கொண்டிடும்வெள்ளாட்டுக் கோமியமுடன்
கண்டிடுமப்படி யொன்றுகடுகவே
வெண்டிடுங்கடுக் காயரைதேரிடை
விண்டிடும்படி செய்யுமீரஞ்சுமே. 175

அஞ்சுமேகுடி யப்பனேபேதியாங்
கொஞ்சுமேபசு மோரன்னங்கொண்டிடில்
அஞ்சுமேகருப் புட்டிபுண்ணுக்குடன்
மிஞ்சுமாறுநா ளுண்ணவும்வேண்டுமே. 176

வேண்டுமேகருவாடுமே மூன்றுநாள்
தீண்டுமேபல மாரதின்மாகமே
ஊண்டுமேபுளி யுப்புமேதூத்திட
தாண்டுமேகெண்டை தப்பாதுதேயுமே. 177

தேயுமேனி செருப்படிகொச்சிலை
தோயுங்காஞ்சுரங் கோரைத்துளசிலை
சாயுங்கையான் தகரைப்பொடுதலை
மேயுஞ்சாணை வெள்ளறுசேர்த்திடே. 178

ஏர்த்திடுங்கடுக் காயுடனிந்துப்பு
மோர்த்திடுமிளகு வசம்புசுக்கு
சேர்த்திடுங்கஞ்சி யுள்ளிதிப்பிலியும்
கார்த்திடும்பெருங் காயமுமாறுமே. 179

ஆருங்கூட்டி யரைத்திடுவாய்சமன்
தேறுங்கெச்சைக்காய் போலேயுருட்டியே

நேருமண்டல மேநிதங்கொண்டிடில்
தீரும்கவுசை செப்புறேன்மெய்யிதே. 180

கவுசை எனும்புருக்கிக்கு நமனுச மெழுகு.

மெய்யடாநெரிஞ்சி பிரமியிலை
வையடாயோர் வகைக்குப்பலமரை
ஐயடாநிம்பழம் போல்திரட்டியே
செய்யடாகற்கண்டு சீனிகூட்டிடே. 181

கூட்டிடவிள நீரிற்குழப்பியே
மீட்டிடுமிள நீரு மிலாவிட்டால்
ஊட்டிடும்பசும் பாலுறவாகவே
கேட்டிடுமெலும் புருக்கிபோங்கார்த்திடே. 182

கார்த்துப்பொற்கடுக்காய் களிப்பாக்குடன்
சேர்த்துரண்டு சமனரைத்தேபலம்
ஈர்த்துமூன்றுநா ளிவ்விதங்கொண்டிடில்
போர்த்துக்கீரிப் புழுப்போகுங்கொண்டிடே. 183

நீரிழிவுக்கு.

கொண்டுகீழ்விளா கோரையிலையுடன்
இண்டுகீழ்க்காயிலை யிரண்டுபலம்
பண்டுவெள்ளாட்டுப் பாலரைமூன்றுநாள்
புண்டுதானே புழுவிழும்பாரிதே. 184

பாருமாவாரம் பட்டைமாம்பட்டையும்
ஏருவேலம்பட்டை யிவைமூன்றுடன்
கூருபாண்டத்து வுள்ளேயமிழ்த்திடு
வேருநற்சலம் விட்டுமேயூறலே. 185

ஊரலானபின் னேருழக்காமதில்
சேரவாங்கு தினமெழுநீரினம்
நேரலான நெருஞ்சிப்பச்சையுடன்
பாரறிந்துமே பாண்டத்துள்நீர்விடே. 186

நீரிட்டுக்குடி நீநிதங்காய்ச்சியே
ஆரிட்டுவுழக்காய் நிதமப்பனே
நேரிட்டுக்குடி நீரிலேயெட்டுநாள்
வீரிட்டுபயந்து விழுந்தொஞ்சுமே. 187

அஞ்சுமாக்குட் ணவாரம்பட்டையும்
மிஞ்சியுண்ணு முசட்டையிலைக்கனி
கொஞ்சியாவின்றன் மோருடனன்னமும்
கெஞ்சிலுப்புப் புளிப்புகைநீங்கிடே. 188

நாவரக்ஷிக்குக் காளான் சூரணம்.

இழைத்திடுயிரு நோமும்நாவினில்
அழைத்திடுஞ்சல மப்பாபெருக்கென
உழைத்திடுநாவ ரக்ஷிவிட்டோடுமே
பிழைத்திடும்பிசகா முறையாமிதே. 189

இரசச் செந்தூரம்.

ஆமிதுப்புது சட்டியடுப்பில்வை
பாமிதுவம்மான் பச்சிலைபோட்டதில்
வேமிதுரச மேயிடுவோர்பலம்
போமிதிவ்விலை போட்டுமேல்மூடிடே. 190

மூடிச்சீலைமண் மூன்றுமேசெய்துடன்
நோடிவெய்யோன் கொடித்திடுமாலையில்
நாடித்தீபார முப்பதுந்தானெரி
ஆடிச்சட்டிமே லப்பாசிவந்ததே. 191

சிவந்தபோதுமே திக்கென்றிறக்கியே
கவந்தசட்டியின் காந்தலுந்தீர்ந்தெடு
துவந்திசெந்தூரத் திற்பனத்தூக்கினெய்
மிவந்தெரிந்துண் மிகப்பிணிதீருமே. 192

நீரிழிவுக்குத் தூறுசூரணம்.

நீர்முளிவிரைத் தோசிடையார்பலம்
வேர்பனையின்வெல் லத்திடையார்பலம்
மார்புண்ணுக்கு வறுத்திட்டிடார்பலம்
சேர்விடித்திடித் தேழ்தினமுண்டிடே. 193

பத்தியம்.

உண்டிடுமிருபோ துறவாகவே
வேண்டிடுங்குருவி மொழிசெய்துடன்
செண்டிடும்நீரிழிவுந் தெறிந்திடும்
கண்டிடும்புகையும் புளிதள்ளிடே. 194

சீதசுரம் குளிர்சுரம் பவுத்திரம் இதற்கு சூரணம்.

தள்ளுநாபி ரசகெந்திவாளமும்
கொள்ளுகாய்சமன் கூட்டிப்பொடித்திடில்
விள்ளும்பொற்பண மேயிடைதூக்கியிட்
டுள்ளிசீனியு மோரிடையுண்டிடே. 195

உண்டிடுமிரு போதுமேமூன்றுநாள்
தெண்டிடுமகா சீதசுரத்தையும்
விண்டிடும்புளிப்பே வெறுத்தேதினம்
கொண்டிடுமிளகு நீர்பருப்புமே. 196

பருப்படாமுருங் கைப்பூகழஞ்சிடை
மருப்படாதிப்பிலி சமன்சேர்த்துடன்
திருப்படாவரைத் தேவிதமூன்றுநாள்
இருப்படாவிள வென்னீரிலீய்ந்திடே. 197

பவுத்திரக்கங்கண சிகைக்ஷ.

ஈய்ந்திடுமிருபோ தொருமூன்றுநாள்
தீய்ந்திடுமே குளிர்சுரமேனிவர்
சேர்ந்திடும்பேய்ச் சுரைக்கீரையிண்டவேர்
காய்ந்திடும்வேருங் கங்கணங்கட்டிடே. 198

கட்டிடுங்கொடிக் கள்ளிதுளிர்பலம்
கொட்டிடுகற் சலத்திலங்கோர்தினம்
விட்டிடுமரைத்தே யிருநேரமும்
மட்டிடுமொரு மண்டலங்கொள்ளிதே. 199

கொள்ளும்போது குறுகிபவுத்திரம்
முள்ளுஞ்சிழ்முளை யடிவேரறுத்திடும்
தள்ளும்போது தவளைக்கட்டற்றிடும்
உள்ளுக்குப்புகையும் புளியுண்டிடே. 200

உண்டிடுங்கொடு வேலியின்வேர்பலம்
செண்டிடுமிடித் தேயிதைச்சீலையில
உண்டிடும்பொட்டணஞ் செய்தெள்ளெண்ணெய
தண்டிடுந்தணல் தாக்கிமேலேத்திடே. 201

ஓதுமண்டல மோரிருநேரமும்
கேதுமேழிற் கொடியபவுத்திரம்

மூடுஞ்சீழ்முளை யடிவேறு தானறும்
மாதுபோம்புளியும் புகைதாத்திடே. 202

தாத்திடாசெந்திரா யிலையார்பலம்
மேத்திடாய்வெள் ளெருக்கிலைத்தொன்னையில்
போய்த்திடாய்வைத்துப் பொட்டணங்கட்டிடில்
சேத்திடாய்வெந்ததை யெடுத்தோங்கிடே. 203

ஓங்கிக்கையாலுழட்டிப் பிசைந்துடன்
தாங்கியோரடைத் தட்டிருநேரமும்
வாங்கியேழ்தின மல்லாத்திக்கட்டிடில்
நீங்கியேயோடும் பவுத்திரமில்லையே. 204

இல்லையேபலம் வாளப்பருப்பெடுத்
தில்லையேபழச் சாற்றிலரைத்துமே
நல்லயேயரை யாப்பிலரைத்துபின்
கல்லையேபத்து லர்த்திடக்கண்டிடே. 205

### பவுத்திரத்திற்கும் அரையாப்புக்கும் மல்லிமூலிகைக்கட்டு.

கண்டிடுஞ்சீலை மடித்திடுங்கட்டின்மே
லண்டுவென்னீரி லடிக்கடிவிட்டிடில்
விண்டுநீராம்மிகக் கரைந்தோடுந்தான்
பண்டுசொல்லுங் குழிமொழிபார்த்திடே. 206

பார்த்திடுமல்லிகை யிலையும்பரிச்
சார்த்திடுஞ்செந் தணலில்வதக்குடன்
நேர்த்திடாமணக் கெண்ணெய்தடவியே
ஆர்த்திடுங்கட்டரை யாப்புச்சுண்டுமே. 207

### அரையாப்புக்குச் சுண்ணப்பத்தும் தாமரையிலைப்பத்தும்.

சுண்டிடுஞ்சிப்பிச் சுண்ணும்புத்தொட்டிடு
வெண்டிருமண்ட வெண்கருவிட்டிழைத்
தெண்டிடும்பசைத் தொத்திடக்கண்டறிந்
தண்டிடுமரை யாப்பிலறைந்திடே. 208

அறைந்திடுமூன்று நாளெடுத்தேயதில்
கறைந்திடுங்கதிர் கண்டபனியென
வரைந்திடுங்குரு வாக்குப்பொய்யாதிது
நிறைந்திடும்புளி நீக்கிடுமுன்னமே. 209

முன்னையுங்குழித் தாமரையின்னிலைத்
தன்னையும்வாயில் மெண்ணடைதட்டியே
பின்னையுமரையாப்பி லிறுக்கிடில்
வெண்ணெய்போல மிகக்கரைந்தாறுமே. 210

கழலைக்கட்டிக்கு கோழிரத்தப்பத்து அண்டப்பத்து.

ஆறுங்கோழி யணைவிலாக்கிருதிங்
கீறும்ரெத்தப் பிடித்தெடுத்தேயடிக்
கூறுஞ்செங்கோட்டைக் குத்திப்பால்தொட்டதில்
ஏறுஞ்சுத்திழி யாமலுகாடிடே. 211

ஆடுஞ்சுண்ணத்தி லண்டத்தின்வெண்கரு
போடும்ரெண்டுபுத் தோட்டிலிழைத்துடன்
சாடுமூன்றுபத் தாக்கரையாப்பறும்
தோடுமல்லா லுடையும்புளிதள்ளே. 212

பேதிகொட்டுநோய்க்கு.

தள்ளடாகரிச் சான்பட்டரைப்பலம்
விள்ளடாவின்பால் விட்டவித்தேயரைத்
துள்ளடாபுளியோ டுறவாய்பிசைக்
கொள்ளடாப்பேதி கொட்டுநோய்தீருமே. 213

அரையாப்புக்கு.

திருமின்னமுஞ் செப்புறனுத்திரி
கீருமேலுநெருப்பைப் பறித்தரை
ஆறுபோதரையாப்பி லிறுக்கிடில்
ஏறுங்கட்டி யிளகிவிட்டோடுமே. 214

(இராஜபுண்ணுக்கும் ரணத்திற்கும் விரமூலாம்.)

ஒண்டிடுவீர னேர்பலங்காவிமண்
கண்டிடுபலங் காவிடைக்கூட்டியே
விண்டிடும்சலம் விட்டரைத்தேதிரட்
டண்டிடுநிழ லாகவுலர்த்திடே. 215

உலர்த்ததையெடுத் தோங்கியராசப்புண்
பிலத்ததேவிப்புருதி பணிச்சைமேல்
சலத்தையேயிழைத் தாங்கிடில்மூன்றுநாள்
மலத்ததேவெந்து வாய்விடும்பார்த்திடே. 216

பார்த்திடாய்முலைப் பாலில்வரைரசம்
கேத்திடாமணக் கெண்ணெய்சரியெடை
வாத்திடாயிவை மத்தித்துப்புஞசின்மேல்
யோத்திடாய்ரணம் போமிதறிந்திடே. 217

ரணங்களுக்கு அன்னக்கட்டு.

அரிந்திடுபுது வன்னமரைத்தெடுத்
தெரிந்திடெண்ணெயுஞ் சேரவிடமப்பிசை
சரிந்திடுமடை தட்டில்மேல்கட்டிடில்
பொரிந்திடும்ராசப் புண்ணழிந்தாறுமே. 218

ஆறுமேகவெடி யரையாப்புப்புண்
பாறுரெத்தப்பருப்ப ணிச்சையொடு
தூருவிப்புருதி தொடைவாழையும்
தீறுங்கண்டமாலை நோயுங்கண்டிடே. 219

பருவுகளுக்குப் பத்து.

கண்டுனற்கருங் கல்லரைத்தேயதில்
அண்டுநல்வெல்லம் அவ்விடத்தூக்கியே
ரெண்டுங்கூட்டி ரணக்கணப்பத்திடில்
பண்டுமீறும் பருவுடைந்தோடுமே. 220

ஒடும்ரத்தஞ்சீ முள்முளையற்றபின்
காடுனல்முருங் கையிலைச்சார்பிழிந்
தோடுமெல்லிய சீலையிலூட்டிமேற்
போடுலர்ந்து பொரிந்திடச்சாடுமே. 221

வெட்டுப் புண்ணுக்கு.

சாடுங்கோடக சாலையிலைபுரித்
தேடும்வேண்டியே தேயிருநேரமும்
மாடுங்கையினல் தாக்கியீரைந்துநாள்
போடுமேல்வெட்டுப் புண்ணரித்தண்டதே. 222

புண்ணுக்கு கொண்ணைக்கட்டு குமரிக்கட்டு
மல்லிகைக்கட்டு.

தண்டதேமைக் கொண்ணைத்தழையித்துடன்
அண்டதேசித் தாமணக்கெண்ணெய்வார்க்

கிண்டதேவதைக்கி யடைத்தட்டிமோர்
கண்டதேப்புண்ணீர் கட்டாரிப்போடுமே. 223

ஓடுங்கற்றாழை யுட்சோறெடுத்துட
நாடுமூவைந்து நாளிருநேரமும்
தேடுவைத்து ரணத்தின்மேற்கட்டிடில்
நீடுபுண்புரை நில்லாரிதெட்டுமே. 224

எட்டமல்லிகை யிலையும்பறித்துமே
இட்டவாமணக் கெண்ணெய்விடுத்துடன்
தொட்டமாய்வதைக்கி யொருதொந்தமாய்க்
கட்டரணங்களுங் கண்டறிந்தோடுமே. 225

ஓடுமவ்விலைச் சார்பிழிந்தொக்கவே
தேடுமெல்லிய சீலதுவைத்துடன்
போடுவெய்ய லுலர்த்திட்டுப்புண்ணின்மேல்
சாடுவந்து தணிந்திடுங்கண்டிடே. 226

குழிப்புண்ணுக்கு கெந்தி காரச்சீலை.

கண்டிடும்நெல்லிக்காய் கெந்தியோர்பலம்
கொண்டிடும்படிக் கொட்டியோர்சட்டியுள்
அண்டிடுஞ்சூத மப்பாகோளுத்திவை
தண்டிடுமறு சட்டியிலேத்திடே. 227

ஏத்திடுங்கடிகை யிரண்டானபின்
பார்த்திடுஞ்சத்துப் பத்துமேசட்டையும்
ஆத்திடுஞ்சீலை யாலேதுணட்டியும்
சேர்த்திடுங்குழிப் புண்போமறுத்திடே. 228

இரணத்திற்கு பூவரசு பத்து.

அறிந்திடும்பூ வரசுபழுப்பெடுத்
தெரிந்திடுவரைத் தேயிருநேரமும்
பறிந்திடுமிரு பத்துதினத்திடில்
பொறிந்திடும்ரணம் போமிதுகண்டிடே. 229

புண்ணுக்கு வீர பிளாஸ்திரி.

கண்டிடும்வெண் மிளகுகழஞ்சிடை
அண்டிடுசட்டியி லடுப்பேற்றியே

கொண்டிடும்வெள்ளைக் குங்கிலியம்பொடி
விண்டிடும்பலமே யரைப்பார்த்திடே. 230

பார்த்திடும்நெய் பலமிரண்டேயதில்
சேர்த்திடுகழஞ் சீழூரத்தூளொடு
கார்த்திடுவெங்கலத்திற் சலந்தூணி
போர்த்திடும்வழி செய்துபிழிந்திடே. 231

பிழிந்தபோது பிசைந்துபிசைந்துடன்
கழிந்தநீரைக் கடத்துபூசத்தியாம்
சுழிந்தகண்டனைச் சுட்டுபொட்டாட்டிட
அழிந்தபுண்ணி வழிந்திடுமாத்துமே. 232

ஆத்துமேமெழுக் காமணக்கெண்ணெயும்
மேத்திடுமருந்து வெள்ளைதூளதுக்
கேத்திருவகைக் கீர்பலந்தூக்குடன்
சேத்திடுஞ்சட்டியில் விட்டெரிசெய்யே. 233

செய்யடாஒருசித் தெளிந்தேவரில்
பையடாயிருந் தாரும்பதத்திலே
வெய்யடாபலம் வீரம்பொடித்ததில்
மையடாகட்டிகை வலித்தேறவே. 234

ஏறவேவலிச் சீலையிலிட்டுடன்
சாரவேரிணந் தன்னிலொருதினம்
மூரவேகரத்துண்ணவோர் கோழையை
ஏறவோவொட் டதிகாரமானதே. 235

லிங்க பிளாஸ்திரி.

ஆனதேமெழுக் காமணக்கெண்ணெயும்
மானதேமத்தித்து வெள்ளைத்தூள்சமன்
போனதேசட்டிப் போட்டடுப்பேத்துடன்
தானதேவைத் துருக்கிவைத்தாத்திடே. 236

ஆத்திவேம்பா டரைப்பலந்தூளொடு
பேத்திலிங்கப் பொடிபலங்காலுடன்
தூத்திபிட்டுச் சுழட்டித்துணியின்மேல்
ஏத்திவிட்டு ரணத்தையகத்திடே. 237

### துருசு பிளாஸ்திரி.

அகத்திடாமணக் கெண்ணெய்மெழுகுடன்
தகத்திடாமறுத்து வெள்ளைத்தூள்சமன்
இகத்திடாசட்டியி லிட்டுப்பில்லவை
மகத்திடாயுருக்கி வடிசெய்திடே. 238

செய்யடாதுருசுப் பொடிக்காற்பலம்
மையடாசொரிந் தாட்டிவலிந்தபின்
துய்யடாவலுச் சீலையிலூட்டிமேல்
மெய்யடாரண மேவிடும்வேண்டிடே. 239

### ஈயசெந்தூரப் பிளாஸ்திரி.

வேண்டுமெள்ளெண்ணெய் விட்டிடுமெண்பலம்
தோண்டிடுமீயச் செந்தூரமிருபலம்
கூண்டிடுங்குங் கிலியமோரெண்பலம்
மீண்டிடீர்பலம் வெண்மெழுக்கேத்திடே. 240

ஏத்திவெரித் தேபலங்காணிடை
ஆத்திடாய்பூர மண்டுவிட்டாட்டிபின்
தேத்திடாய்வலுச் சீலையிலிட்டுடன்
பேத்திடாய்ரணம் போய்விடுஞ்செய்திடே. 241

### கிரந்திக்கு நுணுயெண்ணெய்.

செய்யடாநுணுச் சாறைந்தடாபலம்
மெய்யடாரச மெள்ளெண்ணெயண்டத்தோல்
பையடாபுடம் பற்பம்பணவிடை
செய்யடாகுழப்பி தினங்கொண்டிடே. 242

கொண்டிடுந்தப்படிக் கோரிதைந்துநாள்
திண்டிடுங்கிரந்திப் புண்பிரமியம்
விண்டிடுமறு பத்தியமிப்படி
உண்டிடும்புளி யுப்பைநிறுத்திடே. 243

### கரப்பான்புண்ணுக்கு மிருதார்சிங்கி பிளாஸ்திரி.

நிறுத்திடும்வேப்பெண் ணெய்பலமைந்துடன்
தெறிந்திடுமிருதார் சிங்கிடையீர்பலம்

மறுத்திடுங்கல்வத்தி லுறவாட்டிமேல்
தறித்திடுங்கரப்பான் புண்ணுந்தாண்டுமே. 244

### வங்க பற்பம்.

தாண்டிநீலியின் சார்பலமாறுடன்
வேண்டிநல்மிள கார்பலமேயிடு
தீண்டிநீயரைத் தேவங்கத்துள்ளிடை
பூண்டுசீலைமண் போதுணர்வைத்திடே. 245

### தாளக பற்பம்.

வைத்திடுகெச மேபுடபற்பமாம்
பைத்திடுபொற் பணவிடைநெய்யினில்
சத்திடுமிரு போதரைமண்டலம்
முத்திடுபத்திய மொன்றுமில்லையே. 246

இல்லைநல்மிள கீர்பலந்தாக்குடன்
செல்லநற்கனிச் சிருங்கனிச்சாற்றினில்
வெல்லரைத்து நடுவில்வைத்தாளதம்
கொல்லசெப்புச் சிமிழ்க்குள்பொருத்திடே. 247

பொருத்திடாயிரு சாண்புடபற்பமாம்
கருத்தினாலைங் காணைப்பணிந்திட
நிறுத்திடாய்பொற் பணவிடையேநிதம்
சுறுத்திடாய்திப்பிலி மாவிலிங்கொளே. 248

கொள்ளடாதவங் கோரிருவேழுநாள்
மெள்ளடாசய மீளையிறப்புடன்
உள்ளடாயிரும லுடன்காசம்போம்
மெள்ளடாவெண்ணெயை விட்டுக்காய்த்திடே. 249

### பெண்வசியம்.

காத்திடும்பெரு நாய்ப்பாகல்வித்துடன்
சேத்திடுநல்லா வப்பித்தேசமன்
பார்த்திடும்பேயின் பாகலின்சாற்றினில்
ஏத்திடுமரைத் திங்கிரியங்கூட்டே. 250

கூட்டிடும்பாணைக்குள் பதனஞ்செய்
தீட்டிடுஞ்சுன்னத்தில் வெந்தியமேடை

மூட்டிடுமிரு மூன்றுநாளேந்திடில்
மாட்டிடுபெண் வசமென்றறிந்திடே. 251

### புருஷவசியம்.

அரிந்திடாடொட்டி யரவுந்தல்பித்துடன்
சரிந்திடுங்காய்சரக் கொண்ணேயின்பசை
தெரிந்திடுஞ்சமன் தேன்விட்டரைத்துடன்
பரிந்திடும்மூன்றுந் தோரிடைப்பாலிலே. 252

### அனுபானம்.

பாலும்வாழைப்பழம் பலவஸ்திலும்
மேலுஞ்சாதத்தில் வெள்ளிலேசுன்னத்தில்
நாலுபோது நயந்துள்ளுக்கேத்தொருக்
காலும்விண்டிடான் கைவசந்தேர்ந்திடே. 253

### குஷ்டம்பதினெட்டுக்கும் சூரணம்.

தோடாகா ணகத்திலுரைந்தநா
வோட்டாபட்டை வெய்யலுலர்த்துடன்
பாரடாபொடிக்கா ரெட்டிடைபலம்
மீரடாபல மேயரைக்கொள்ளிதே. 254

### அனுபானம்.

கொள்ளும்வென்னீர் குழைத்திடுநோமும்
தெள்ளுகுஷ்டந் திமிர்பெருநோய்கடி
விள்ளுமேகம் விடுமண்டலத்திலே
தள்ளுமேபுளித்தான் விடுத்திண்டிடே. 255

### சுரஞ் சன்னிக் குளிருக்கு ஆனந்த வயிரவக்குளிகை.

திண்டிடுஞ்சூதம் நாபிமனோசிலேக்
கண்டிடுங்கெந்தி லிங்கம்வெண்காரமும்
பிண்டிடும்வகை வீரஞ்சமனொடு
அண்டிடும்பழச் சாற்றினிலாட்டிடே. 256

ஆட்டுலர்த்தியோ ரானந்தநாதனே
நாட்டிடுமிஞ்சி ரசத்தினில்சன்னிக்கு
கூட்டுமேதேனிற் குளிருஞ்சுரத்துக்குக்
காட்டும்பத்தியங் காணப்பறக்குமே. 257

### சகலவியாதிக்குங்கெந்திகபாடக்குளிகை.

பறக்குங்கெந்தி நெல்லிப்பருப்புச்சுக்கு
சிறக்குமிளகு திப்பிலித்தான்றிக்காய்
விறக்குநாபிக் கடுக்காய்வெண்காரமும்
கறக்குஞ்சூத மரிதாரங்கண்டிடே. 258

கண்டிடொன்று வகைக்குகழஞ்சிடை
திண்டிடுங்கண்ணிச் சிரங்கனிச்சாற்றினில்
உண்டிடாட்டி யுருட்டிப்பயறுபோல்
வெண்டிடும்வெய்ய லாகாதுலர்த்திடே. 259

உலர்த்திநெல்லிச்சா றாட்டிடத்தாகம்போம்
பெலத்தசெய்யினிற் பேதியைக்கட்டிடும்
கலத்திடாட்டுப்பால் கல்லெரிப்போடிடும்
குலத்துமேனியிற் குன்மந்தெரிக்குமே. 260

தெரிக்குமாமணக் கெண்ணெயில்பேதியாம்
தரிக்குமேபழச் சாற்றினில்மோகமாம்
பிரிக்கும்வகையான்ரசம் பித்தம்போக்கிடும்
விரிக்குமேபுளி சார்சுரமாட்டிடே. 261

மாட்டிடுமெருமைத் தயிர்தன்னிலே
நாட்டுண்டொன்பது நாளில்கிராணிபோம்
போட்டிடும்வசப்புப் பொடிதன்னிலே
வாட்டிடும்பிராந்தி வாந்திபோங்கண்டிடே. 262

### கடுக்காய்லேகியம்.

கண்டிடாய்பொற் கடுக்காதுளென்பலம்
வண்டுடாய்பனவெட்டு ரெட்டுப்பலம்
கண்டிடாமணக் கெண்ணெய்சரியிடை
அண்டிடாம லேகியம்போல்பிரட்டிடே. 263

பிரட்டியேமறு பீங்கானில்வைத்திடு
வரட்டுமண்டல மாமருந்துள்ளுக்குத்
திரட்டுவாய்நிதந் தின்றிடரைப்பலம்
மிரட்டுவாதம் வெளிப்படத்தீட்டியே. 264

தீட்டினுட்டினிறைச்சி கவிச்சொடு
பார்த்திடாமெதிப் பாகலின்சாற்றினில்
மார்த்திடாவாயுவு வஸ்துவகற்றியுண்
ணேர்த்திடாநோ யிறங்கும்பின்னேடுமே. 265

ஓடும்வேளை வேருத்தாமணியின்பேர்
மூடுமாவுலிங்கப் பட்டைத்தன் னுடன்
ஓடுநால்வகைக் கோர்பலமேரசம்
தோடுவாங்கி முறித்துச்சூடாத்திடே. 266

மந்தஜன்னிசுரம்.

ஆத்திடாய்ப்பின் னரிசியின்திப்பிலி
கோத்திடாய்மிள கோடுடன்சுக்குடன்
ஏத்திடாய்நவ லோகமிழைத்துடன்
வாத்திடாய்ஜன்னி மாந்தம்போம்பார்த்திடே. 267

பின்னிசுவுமுன்னிசுவு குடைச்சல் சுரஜன்னிக்குவேர.

பாரிதுமுருங்கைப் பட்டையெண்பலம்
சேரிதுவொருசென்னி வெள்ளுள்ளிடை
ஏரிதுபலம்ரெண் டுறவாகவே
தூரிதுவிடித்தோ ரடைத்தட்டிடே. 268

தட்டிப்பின்தலையொட்டிக் கவிழ்த்ததை
ஒட்டிச்சிலையுரமாகச் சுற்றியே
கட்டிப்போடு கடிகையாரைந்துமே
கெட்டிநோயுங் கெடுங்கெடுமுண்டிடே. 269

மன்னியேழுமே மாந்தக்குடைச்சலும்
பின்னிசுமுன்னிசு தனுர்வாயுவும்
சென்னிநோய் சிரோபாரங்குளிர்சுரம்
சன்னிவாதஞ் சயித்தியம்நீங்குமே. 270

நீங்கும்பத்தியம் நெஞ்சினிலுத்தரி
ஒங்கும்வெள்ளாட்டுப் பாலுறவாமதில்
தாங்கும்வேய்விரை சாமைமுன்பாலினில்
பாங்குசெய்துணர் பரிக்கிநோய்தீர்த்திடே. 271

புழுவெட்டுக்கடிக்கும் ஊரலுக்கும் சிப்பித்தயிலம்பூசல்.

தீர்த்துவெண்ணெயின் சிப்பியிரு நூறு
பார்த்துக்கொட்டிப் பெரும்பாண்டத்துள்ளடை
சேர்த்துச்சட்டிவாய் சீலைமண்செய்துடன்
கார்த்துவார்துணைக் கண்ணதுசெய்திடே. 272

செய்யுங்கெந்தி துருசுமிளகொடு
வையுமொன்று வகைக்குப்பலமிடை
கையபொட்டிடு நற்கலசத்தினில்
வெய்யுந்தந்தியால் விட்டுநுழைத்திடே. 273

நுழைத்திடுங் கலசமதில்தீப்புகை
வழைத்திடும்பிசகாமல் மண்சீலைசெய்
விழைத்திடுங் கேசமேபுடமானபின்
குழைத்திடிவொரு குப்பியில்வார்த்திடே. 274

வார்த்திடும்புழுவெட்டுக் கடித்திமிர்
பார்த்திடுமூரல் பத்தரவெட்டிடும்
சேர்த்திடும்பசு நெய்தயிரன்னமும்
ஏர்த்திடும்பாலிவை யன்னமுண்ணுமே. 275

பருவுகளுக்குமருந்து.

பார்த்திடேயிப்படி யொருமூன்றுநாள்
மார்த்திடேபுட்டுவைத் தாவிகட்டுடன்
நேர்த்திடேநாறும் நோய்நெகிழ்ந்தோடிடும்
ஏர்த்திடேபத்திய மில்லைக்காத்திடே. 276

இரசசெந்தூரம்.

காத்திடுமிரதங் கருஞ்சீரகம்
ஏத்திடுநல்மிளகு நற்சீரகம்
கோத்திடுஞ்சுக்கு லிங்கமனோசிலை
மாத்திடுநாபியு மரிதாரமே. 277

தாரப்பாவகைக்கிச் சமனாகவே
நேரப்பாநர்ச் சீரகக்கியாழத்தில்
சேரப்பாவரைத்தீ ரைந்துநாழிகை
மாரப்பாகுகையுள் மருந்தாண்டிடே. 278

தாண்டிடுமிருசாண் குழிவெட்டியே
தோண்டிடுபுகைத்துப் புடம்போட்டுடன்
தாண்டிடுஞ்சீரகப் புகைவீசினுல்
பூண்டிடுபுடம்பின் ஞென்றுபோட்டிடே. 279

போட்டிடுசெந்தூரம் பொர்ப்பணவிடை
நாட்டிடுநர்சீரகக் கியாழத்தில்
நீட்டிடுமிருநேரமோ ரேழுநாள்
ஊட்டிடுமிருமல் சயமோடுமே. 280

ஓடும்வாயுவுப் புகைச்சலிளைப்பறும்
தோடுங்காசமேற் சுவாசமேரேழுவிட்
டாடும்வென்னீரோ டன்னம்புசித்திடில்
போடுமுப்புளி புகைதள்ளிடே. 281

சூதகெந்திதாரசெந்தூரம்.

தள்ளப்பாயிர தம்பலமூன்றுதான்
கொள்ளப்பாகெந்தி கூட்டிவிட்டோர்பலம்
மெள்ளப்பா வரிதாரம்பலமரை
தெள்ளப்பாபொடித்தே குப்பிக்கேத்திடே. 282

ஏத்திடுரசம்பின் பொடியேவிடு
வாய்த்திடுக்குப்பி வாய்த்துணியிட்டடை
சேத்திடுவெழுசீலை மண்செய்துடன்
காத்திடும்பெருஞ் சட்டியில்வைத்திடே. 283

வைத்திடுமணல் வாயளவுஞ்சொரி
மொய்திடுஞ்சட்டி மூடிமண்சீலைசெய்
கைதிடும்புடந் தாழனளொன்றரை
மெய்திடுஞ்செந்தூர மிதுபார்த்திடே. 284

பார்த்திடாதிசத்திச் சுதனைப்பணிந்
தேத்திடாய்வந்தனை செய்தெடுத்துடன்
போத்திடாய்பொற் பணமிடைதாக்கிவிட்
டேத்திடாயனு பானந்தரித்திடே. 285

இதனுள் அனுபானம்.

தரித்திடாரிசித் திப்பிலிசீரகந்
தெரித்திடாச்சுரந் தீர்ந்திடுமூன்றுநாள்

சரித்திடாய்நொச்சி சாற்றினிலிழைத்திடில்
முரித்திடாசன்னி முன்னழிந்தோடுமே. 286

ஓடும்நெரிசினேச் சூளைசக்கரைத்
தோடுநாளேழ் திரட்டிக்குடித்திடில்
சாடும்பித்தந் தலைச்சுழல்வாயுவுங்
கேடுமந்தங் கெடுங்கெடுங்கண்டிடே. 287

கண்டிடாவிநெய்யிற் கலந்தேழுநாள்
கொண்டிடாய்சேத்துமங் குதித்தோடிடும்
வெண்டிடாய்சலம் விட்டிழைமண்டலம்
உண்டிடாய்குட்ட மூரல்தெரிக்குமே. 288

தெரிக்கும்நெற்பொரி தேனெய்யிலேழுநாள்
கரிக்கும்வாந்தி காணுதுபின்னோடும்
குரிக்குஞ்செவ்விட நீர்குடிநீருடன்
எரிக்குஞ்சீனி யிரண்டுடன்சேர்த்திடே. 289

சேர்த்திடாய்தாகந் தீருநாளொன்றினில்
வர்த்திடாயுப்பு புளிப்புகையேவிடு
நேர்த்திடாயிள நீரில்குடித்திடில்
பார்த்திடாப் பயித்தியம்விட்டோடுமே. 290

ஓடுங்கையான் ரசத்திலோரேழுநாளு
சாடுஞ்சுவாசந் தரித்திடாதோடிடும்
ஆடுங்காய மரிசியின் திப்பிலி
சாடுமேயெவச் சாரமும்போட்டிடே. 291

போட்டிடுமிளகு யிருபோதுதான்
மாட்டிடுமழுவை வலிவீக்கமும்
மூட்டிடுயிள வென்னீரோடன்னமுந்
தாட்டிடும்புகைப் புளியுப்புதள்ளிடே. 292

தள்ளப்பாபொடி தன்னிலிட்டேழுநாள்
மெள்ளப்பாண்டு காமாலைவிட்டோடிடும்
வெள்ளபூண்டு தயிலமீரைந்துநாள்
உள்ளவாயுவு மொதிங்கிப்பின்னெட்டுமே. 293

எட்டுவேலஞ் சாறிட்டிழைத்தேழுநாள்
கொட்டிதிம்பல்நோய் குதித்துப்பின்னோடிடும்

திட்டிடுமுசுக்கைச் சாற்றிவிட்டேழுநாள்
முட்டிடும்பித்த முறிந்திடுங்கண்டிடே. 294

கண்டிடாய்கத லிக்கிழங்குச்சலங்
கொண்டிடாய்ப்பெருங் கொள்ளவிநீரதில்
உண்டிடாயிரு போதுமோரேழுநாள்
தொண்டிடாய்வயிற் றுப்பிசந்தீருமே. 295

தீரடாகரும்பின் ரசத்திலிழை
வாரடாவயிர் பேதியாமார்திறம்
வேரடாப்புளியும் புகைவிட்டுடன்
காரடாவென்னீ ரன்னமுங்காட்டிடே. 296

பயித்தியத்திற்கு சிரோஸ்தானகிட்சிகாபரிசனம்.

காட்பொடுட்டுப் பலகலகரையீரைந்து
ஆட்டுநாழி யறுதிங்கள்காடியும்
மாட்டுநிம்பழச் சார்வகையார்பலம்
நாட்டுநாளாற் றடைவிலங்கேத்திடே. 297

ஏத்திருப்பின்னிருக் கிருகையனே
வாத்திடுமுன் மருந்தைநசியமாய்க்
கீத்திடுதலைக் கீறிமருந்ததில்
தீத்திடுநெற்றித் தெரிந்திடே. 298

தெரிந்திடுநூற் றிருபத்திருகுடம்
சொரிந்திடுசலஞ் சுவாசம்விடாமலே
பிரிந்திடுவாதப் பித்தபயித்தியம்
மரிந்திடுமுறையைப் பாகைகண்டதே. 299

மேகநாதக்குளிகை.

கண்டிடப்பாவெண் காரஞ்சிவதைவேர்க்
கொண்டிடப்பா மிளகொடுலிங்கமும்
விண்டிடப்பா விலிங்கம்வசம்பொடு
தொண்டிடப்பா யிந்துப்பெருங்காயமே. 300

காயஞ்சுக்குகாளாஞ்சி வேர்த்திப்பிலி
சாயவகைக்குரூ சானியிருவகை
நேயவைத்து நிறைசமன்சேர்த்திடு
மாயவைத்து நேர்வாளந்தெரிந்திடே. 301

தெரிந்திடாச்சமன் சேர்ந்திருசாமமுஞ்
சரிந்திடாப்பழச் சாற்றிலரைத்தெடு
விரிந்திடாக்குன்றி வீதந்திரட்டியே
எரிந்திடாதேனிழலி லுலர்த்திடே. 302

உலர்த்திடுமேகநாதன் குளிகையாம்
பெலர்த்திடும்வெல்லம் போதத்தீரைந்துநாள்
குலர்த்திடும்பஞ்சகுன்மம் விட்டோடிடும்
நிலர்த்திடும்பத்திய நிதங்காத்திடே. 303

கார்த்திடாய்வெண்ணெயிற் கலந்தேழுநாள்
பார்த்திடாய்சலம் பாண்டுகாமாலையும்
தீர்த்திடாய் சிரணம்பசியுமாம்
போர்த்திடாய்புளியும் புகைதள்ளிடே. 304

தள்ளிடிந்தப் படியீரைந்துநாள்
கொள்ளிடப்பிர மூலமகோதரம்
உள்ளிடச்சுவாச காசம்விட்டோடும்
விள்ளிடிற்புளியும் புகைதள்ளிடே. 305

விட்டிடுஞ்சிரசமீ ரைந்துநாள்
தொட்டிடுமிரு போதுறவாகவே
தட்டிடாப்படர் தாமரையார்ப்பித்தந்
தொட்டிடீருத்திர ரோகஞ்சொரியுமே. 306

சொரியுமேகடி கஞ்சாவேர்தகரையும்
மரியுமேயிவை யைந்துமேமோருடன்
புரியுமேபுகையும் புளிபழைபது
மெரியுமேபத்திய மீதறிந்திடே. 307

அரிந்திடுசக் கரிசியின்திப்பிலி
எரிந்திடுமிளகு யிவைமூன்றினில்
சொரிந்திடுஞ்சலஞ் சுண்டெரித்தேயதில்
தெரிந்திடுங்குளிகை யொன்றுதேய்த்திடே. 308

தேத்திடுயிருபோதின மேழுநாள்
நேத்திடும்வாயி நீர்கொள்ளுமாங்கிஷ
மாத்திடுமுதிரமு மந்தாக்கினி
பாத்திடுவிருமல் பறந்தோடுமே. 309

ஓடும்பத்திய முண்டதுகண்டறி
போடுமுப்புப் புளிபுகைதள்ளிவிட்
டாடும்வென்னீரோ டன்னம்புசித்திடு
நாடுந்தேரைய நல்முறைசெய்திடே. 310

### உஷ்ணத்துக்குலேகியம்.

செய்யப்பாகுறு சீனிநர்ச்சீரகம்
பையப்பா சதகுப்பியுந்திப்பிலி
வெய்யப்பாபெருங் காயம்விளங்கமும்
வையப்பாலவுங்க மிளகேத்திடே. 311

ஏத்திடிர்ச் சித்தரத்தையிடோமமும்
கார்த்திடிர்க்கருஞ் சீரகஞ்சாதிக்காய்
போத்திடிர்வெள்ளைப் பூண்டுவகைசமன்
பாத்திடிர்பொடு பக்குவஞ்செய்திடே. 312

செய்யிதுசமன் சேர்பனவெல்லமும்
பையிதுகொட்டைப் பாக்களவாகவே
மெய்யிதுவிரு போதுமூவேழுநாள்
வையிதுவுஷ்ண வாயுவுந்தீருமே. 313

தீரடாநாய்த் துளசிக்கியாழத்தில்
நேரடாமிளகின் னிடைக்காற்பலஞ்
சேரடாசிறு திப்பிலிக்காற்பலம்
வேரடாவரைத் திவ்விதங்கொண்டிடே. 314

### சிறுநீரிறங்க.

கொண்டிடுமுடக் கொத்தானிடைபலம்
புண்டிடும்வெள்ளைப் பூண்டரைப்பலம்
வெண்டிடுமரைத் திவ்விதமூன்றுநாள்
கண்டிடுஞ்சிறு நீர்க்கட்டிறங்குமே. 315

### குன்மங்களுக்கு லேகியம்.

இறங்குந்தேத்தான் வித்தேயெடுத்தோர்பலம்
பறங்குமாவினின் பால்விட்டரைத்துடன்
நறங்குநங்குழலாள் தொண்டைவேர்ப்பட்டை
வறங்குங்கோஷ்ட மதுரமுஞ்சேர்த்திடே. 316

சேர்த்திடேலங் கிராம்புசன்னிக்கொடால்
மார்த்திடமுர்த வள்ளிக்கிழங்கொடு
தோத்தினல்ல முசுக்கையின்வேருடன்
கேத்திடப்பக் கிழங்குனல்வெல்லமே. 317

வெல்லத்தோடு வகைக்குப்பலமரை
நல்லத்தோடுக் காராம்பசும்பால்படி
எல்லத்தோடுவிழைத் தெரித்தேபத
மல்லத்தோடுப் பசுவிநெய்வார்த்திடே. 318

வார்த்திடுவிருநாழி மாறுதிருந்
தேர்த்திடுவெரித்தே யிருநேரமும்
பார்த்திடுபலமா யிருபத்துநாள்
கார்த்திடுமுறை கைகண்டதோங்கிடே. 319

ஓங்கிடாக்குன்ம முள்ளங்கையுள்ளங்கால்
ஏங்கிடாக்கிலேயில் லெரிகுன்மமுந்
தாங்கிடாதொரு சத்திகுன்மத்தொடு
பாங்கிடாநீங்கும் பத்தியங்கண்டிடே. 320

கருவங்கபற்பம்.

கண்டிடப்பா கருவங்கமார்பலம்
மொண்டிடப்பா வோரோட்டிலுருக்கியே
அண்டிடப்பா வம்மான்பச்சிலேரசந்
தண்டிடப்பாரு சாமம்நாலுறவே. 321

ஊரலானபின் ஞேட்டிலுருக்கியே
சேரலாத்துணி தேய்த்திடுவாய்முகம்
வாரெலாமறுக்கால் வைத்துருக்கியுள்
ஏறலாமோதிப்பட்டைச் சாறேத்திடே. 322

ஏத்திடுசாமமீ ரெண்டுமேவெறுப்
போத்திடுவோமம் போட்டுவறுத்துடன்
மாத்திபர்ப்ப மானபின்தாழையின்
சாத்திடுவிருசாமங் கடைந்திடே. 323

கடைந்திடுமறுக்காலும் வறுத்திடாய்
அடைந்திடுபற்பமா னதுபார்த்துடன்

இடைந்திடுஞ்செம்பருக்கப் பூவேழெட்டுத்
துடைந்துடொன்று சூட்டிவறுத்திடே. 324

வறுக்கில்செந்தூர மாகும்பதத்திலே
நொறுக்கிக்கல்வத்தில் நூரியெடுத்திட
துறுக்கிவைத்ததை யேத்திருநேரமும்
பொரிக்கிப்பொற்பணம் போட்டுநிறுத்திடே. 325

நிறுத்திடாய்கற்கண்டு தேனிலேழுநாள்
அறுத்திடாம் வாதமப்பால்தெரித்திடும்
குறித்திடாவாரையின் கொழுந்தேழுநாள்
நிறுத்திடாய்ப்பிரமியம் விட்டோடுமே. 326

ஓடுஞ்சர்க்கரையி லுள்ளுக்கேழுநாள்
பாடும்பித்தம் பயித்தியமோடிடும்
நாடுவாழைக்கிழங்கு ரசத்திலும்
போடுநாளேள் புரிந்திடுமேகமே. 327

சேத்துமவெள்ளை.க்கு

மேகமாய்வெண்காரங் கழஞ்சிடை
யேகமாய்பொரித்தே பொடித்தேயுடன்
பாகமாயெழுபோது பகுந்துண்ண
வேகமாஞ்சேத்து வெள்ளையுநீங்குமே. 328

சூலைக்கு.

நீங்கும்பேய்க் கொமட்டிவேர்பொடிநிரைத்
தாங்குமேகழஞ்சி யிடைதாக்கியுண்
ணோங்குந்திருகடுகொக்கச் சமன்பொடி
வாங்கும்பஞ்ச லவணமுங்கூட்டிடே. 329

கூட்டிமூன்றுவகைக்கு கழஞ்சிடை
மாட்டுசெந்தூர மப்பாபணவிடைப்
போட்டுமத்தித்தெழு போதுகொண்டிடில்
சூட்டுமேகமும் சூலையுந்தீருமே. 330

தீருமிந்தப்படிக் கொடுத்தேழுநாள்
நேருங்குன்ம நீராமைமகோதரம்
பாருமண்டத்தின் வாதம்பவுத்திர
மீருகல்லடைப்பு மிவைநீங்குமே. 331

நீங்கும்பத்திய நெஞ்சிலுத்தேயரிந்
தேங்குசர்க்கரை தேனொடுகற்கண்டு
பாங்குநெல்லிக்காய் பாரும்புடலங்காய்
ஓங்குமிவ்வகை யுண்ணிங்கைகண்டதே. 332

கண்டிடாய்கவுதாரி வாழைப்பிஞ்சு
உண்டிடாயூர்க்குருவி யுள்ளான்கறி
கொண்டிடாய்க்கருகுக் கிடத்தண்டமும்
விண்டிடாய்பத்தியத் திற்குவெட்டுமே. 333

விக்கலுக்கு.

எட்டுதிப்பிலி யீரைந்துசீரகம்
கட்டுதேனிற்கலந் துண்ணவிக்கலும்
விட்டுப்போகும் விடாவிடிற்பொஸ்தகஞ்
சுட்டுப்போடுநான் தேறனுமல்லவே. 334

சூலைஎரிவுக்கு.

அல்லவேபழ மாறுவதக்கியே
மல்லவேரசம் வாங்கினர்ச்சீரகம்
சொல்லவேபலஞ் சேரமிளகொடு
வெல்லவேவாய் விளங்கமுஞ்சேர்த்திடே. 335

சேர்த்திடுசர்க்கரை சிறுநாகப்பூ
கார்த்திடுவகைக் கொன்கழஞ்சிடை
ஓர்த்திடுகத லிக்கிழங்குரசம்
பார்த்திடுபலம் பாலூரிவிட்டிடே. 336

விட்டிடுமது வெல்லாமரைத்துடன்
தொட்டிடுமிரு போதுமோரெட்டுநாள்
கட்டிடுங்குலை கைபதமெய்யொடு
பட்டிடுமெரிவு படச்சாடுமே. 337

சாடுமேநறுந் தாளிச்சர்க்கரை
யாடுமேபுழுங்கல் லரிசிரகம்
நாடுமேயரை நால்பதஞ்செய்தெடுத்
தோடுமேநெய்யிற் சுட்டுண்ணுளெட்டுமே. 338

எட்டடாபுளியும் புகையேவிடுத்
தட்டடாதிரோ தாயிமயக்கத்தை

வெட்டடாயிள வென்னீரோடன்னமும்
கட்டடாவிது கைமுறைபோற்றிடே. 339

### தலைநோவுக்குத்திரிபுகை.

போர்த்திடுலிங்கம் பூரமரிதாரஞ்
சேர்த்திடுரசஞ் செந்தூரஞ்சாம்பிராணி
கோர்த்திடுந்துப்ப குன்றிமணிமஞ்சள்
கார்த்திடும்பலங் கால்வகையொன்றுமே. 340

ஒன்றிடாட்டிப் பழச்சாற்றிலோர்தின
மூண்டிடாட்டி முலைப்பாலிலோர்தின
தண்டிடாட்டிருச் சாண்சதிர்சீலையில்
கண்டிடாட்டிச் சுருட்டித்திரிசெய்யே. 341

செய்யடாயிரு நேரந்திரிபுகைப்
பைய்யடாபிடி பார்த்துப்பதனமாய்
மெய்யடாதலை நோய்விட்டிறங்கிடும்
உய்யடாபகை முற்றிலுங்காருமே. 342

### மயிர்முளைக்கத்தயிலம்.

காருநாய்கரிச்சான் பட்டையார்பலம்
பாருபெருறையாள் பலம்வெள்ளுள்ளிச்
சேருவாய்பலஞ் சேர்த்துநறுக்கியே
ஏருவாய்காழி யென்னெண்ணெயூற்றிடே. 343

ஊர்த்திடுங்கதி ரோன்புடமேனிதம்
போர்த்திடுமிரு போதுமோரேழுநாள்
சேர்த்திடுமயிர் சேரமுளைத்திடு
சோர்த்திடும்பத்திய மில்லைக்கார்த்திடே. 344

### க்ஷயத்துக்கு கர்ப்பூரக்குளிகை.

ஆர்த்திடும்பச்சைக் கர்ப்பூரஞ்சீரகம்
கோர்த்திடுங்கலை கொம்புகோரோசனை
சார்த்திடுங்கந்தஞ் சாம்பிறாணியிவ்வகை
சேர்த்திடும்வகைக்குக் கழஞ்சிவிட்டே. 345

விட்டிடும்பேய்ப் புடலும்பேய்ப்பீர்க்கையு
மூட்டிடும்கெரிஞ்சி நீர்முள்ளிவிரை

நெட்டிடுவிள நீர்விட்டுக்காச்சியே
தொட்டிடுமறைத்து மெழுகாக்கிடே. 346

ஆக்கிக்குன்றி வோலாகக்குளிகையும்
நீக்கிநல்ல நிழலுலர்த்தியே
நோக்கிநாளிரு போதுமூவைந்துநாள்
தாக்கிருமல் சயம்விழச்சாடுமே. 347

சாடுமேமுருக் கிலையின்சாரீர்பலம்
போடுநல்மிளகுப் பொடிக்காற்பலம்
மூடுநற்பசு மோர்பலம்ரெண்டொடு
நாடுவிப்படி நாள்மூன்றுதோற்றிடே. 348

மேற்சுவாசத்துக்கு.

தோர்த்திடுப்புதுச் சொர்நெல்லிக்காயொடு
சேர்த்திடுநல் மிளகொடுதிப்பிலி
மார்த்திடுகடுகு வகைக்குச்சமன்
ஏர்த்திடுப்பசு மோரில்விட்டாட்டிடே. 349

ஆட்டடாமூன்று நாளடுத்தேநடு
நாட்டடாதவறு தென்குருமுறை
சூட்டடாமேல் சுவாசம்விட்டோடிடும்
போட்டடாபுளியும் புகைதள்ளிடே. 350

மேகத்திற்கு லேகியம்.

தள்ளப்பாவால்மிள கிடையோர்பலம்
விள்ளப்பாதற் கசகசாயீர்பல
மெள்ளப்பாவறுப் பாமிதமாயரைத்
துள்ளப்பாவடி செய்துடன்வாங்கிடே. 351

வாங்கிஞலிரண்டு பலமாவின்பால்
தாங்கிஞற்பலஞ் சர்க்கரைபாகுசெய்
தோங்குமுன்பொடித் தூளதைத்தூவியே
நீங்குமொன்றறை நெய்பலஞ்சேர்த்திடே. 352

சேர்த்திடுலேகியம் போற்றிரட்டியே
கார்த்திடுங்கொட்டைப் பாக்களவாகவே
போர்த்திடுமிரு போதுமீரைந்துநாள்
பார்த்திடுமேகம் பற்றாத்தீருமே. 353

## இரத்தச்சீழ்வயிற்றுக் கடுப்புபெரும்பாடு நீர்ச்சுருக்குக்கியாழம்.

தீரடாயிளந் தென்னையின்பாளையைப்
பூரடாமாடல் போக்கிமலரிடிச
சாரடாவொண் ணழக்குச்சமன் தயிர்
நோடாபழம் நீர்பலமேத்திடே. 354

ஏர்த்திடாய்தின மூன்றிருநோமுஞ்
சேர்த்திடாய்ரெத்தஞ் சீழ்வயிற்றுக்கடுப்பு
பார்த்திடாய்பெரும் பாடுடநீர்சுருக்
கார்த்திடாய்ப்புளி யரகாதறிக்திடே. 355

## மேகத்துக்குவெள்ளறுகு கியாழம்.

அரிந்திடாய்வெள்ள று கிடையோர்பலம்
பரிந்திடாமலே பாலுழக்காமதில்
தெரிந்திடாயரைத் தேயிருநோமு
முரிந்திடாக்கொள்ளு மூவேழுநாளிதே. 356

நாளடாகடும் பத்தியமார்பலம்
வேளடாப்பசுவின் பாலோடன்னமுண்
டாளடாமேகந் தப்பாதொழிந்திடு
மாளடாவென்னீ ருப்பும்புளித்தள்ளே. 357

## சாலேசுரத்துக்குநேத்திராஞ்சனத்தயிலம்.

தள்ளிலந்தையின் சாறதிலோர்படி
எள்ளினர்ச்சுயம் பெண்ணெயிலோர்படி
விள்ளின்பொர்ச் செவ்விளநீரிலோர்படி
அள்ளிமூன்று குழம்படும்போற்றிடே. 358

ஏர்த்திடுமேயெரித் திடுசாமமும்
பார்த்திடுமெழுகு பதமேவடி
மார்த்திடுங்குங்கு மப்பூகோரோசனை
கார்த்திடுஞ்சாதிக்கா யேலங்கொண்டிடே. 359

கொண்டிடுமிளகு சாதிபத்திரி
கண்டிடுவகைக் கொன் றுகழஞ்சிடை
தொண்டிடுவறுத்தே பொடிசெய்திடாய்
அண்டிடுபுதனுஞ் சனியாடிடே. 360

## சிரோஸ்தான உசிலத்தூளறப்பு.

ஆடிடுசிலந் தூளறப்பிடு
தேடிடுவிரு திங்களிந்தப்படி
சாவிடும்விழி சலேசிரந்தனேக்
கூடிடுநற்குரு மொழிசெய்திடே. 361

## (இரணம்சில்விஷம் வண்டுபூரான் செய்யான் வாயுவு) குடல்பிரட்டுக்கு வன்னிரசம்.

செம்யடாவன்னிச் சாருழக்குப்பிழிந்
தொய்யடாநாகத் தூர்பலங்காலதில்
வெய்யடாவரைத் திவ்விருநோமும்
பையடாகொடுப் பாய்றிணமாறுமே. 362

ஆறுஞ்சில்விஷ மப்புவண்டாங்கடி
ஊறுபூரனெடுத்த செய்யான்கடி
கூறும்வாயுவு குடல்பிரட்டில்வகைத்
தீருமுப்புச்சேர்த் தன்னமுமுண்டிடே. 363

## கண் கால் எரிச்சல் வாந்தி பித்தம் வீக்கம் எரிகுன்மத்திற்கு வாழைப்பழ சர்ப்பத்து.

உண்டிடாய்ப்பழ மோயிருநூறது
வண்டிடாயிதடுப் பனிலொடுவை
சுண்டிடாக்கை சுழட்டிவதக்குடன்
விண்டிடாய்ரசமே பிழிந்தேத்திடே. 364

ஏர்த்துச்சீனி யிடைபலமைந்துநால்
பார்த்துப்பாகு பதம்பிடித்தேயுடன்
மார்த்துச்சீரகமா நல்மிளகுடன்
சார்த்துவோர்வகை தீனபலமாறுமே. 365

ஆறுசுக்கோ டரிசியின்திப்பிலி
பாறுதாளிசபத்திரி கோஷடமோ
டேறுஞ்சாதிக்கா யிவ்வகையொன்றுக்கு
வேறுதூக்கு விறகரோடெட்டுமே. 366

எட்டடாவறுத்தே யிடிசூரணங்
கொட்டடாமுன் குழம்பினிற்சாத்திட

கெட்டடாபசுநெய் பலமாறதில்
விட்டடாலேகியமிது பார்த்திடே. 367

பார்த்திடுக்கொட்டைப் பாக்களவாகவே
போர்த்திடுவிருபோ தொருமண்டலம்
நீர்த்திடுங்கண்ணில் நீருவருகலும்
தோர்த்திடுமெரிச்ச லதுவாங்குமே. 368

வாங்கும்வாந்தியுவாய் நீர்ச்சொரிதலும்
வீங்குபித்தமிகுந் தெரிகுன்மமும்
நீங்குநர்ப்புளினேச மகத்தியே
பாங்குசெய்நோய் பறக்குமரிந்திட்டே. 369

மேக நீர்ச்சுறுக்கு கண்புகை பித்தம் நமைச்சல்
வாய்நாறலுக்கு எண்ணெய்.

அரிந்திடாமணக் கெண்ணெயொருபடி
தெரிந்திடாய் விழுதியிலைமாணிக்கம்
பருந்திடாய் செருப்படைகீழாநெல்லி
கருந்திடாய்ச்சிந்தி கைத்தாழைகோரிடே. 370

கோரடாபழங்கோவை நல்லீருள்ளிச்
சாரடாவகைக்குத் தானரைப்படி
வேரடாபசுவின் பாலரைப்படி
நேரடாவிளநீர் படிசேர்த்திடே. 371

சேர்த்திடாய்நல் மிளகொடுசீரகம்
பார்த்திடாய்வகைக்குப் பலமைந்துநான்
தோர்த்திடாயரைத் தொன்றாய்க்குழப்புடன்
மார்த்திடாயடுப்பில் வைத்தெரித்திடே. 372

எரித்திடுமோரிருபிலிக் கட்டையாய்
குரித்திடுமெழுகு பதமேவடித்
திரித்திடுமண்டலந் தினமேபலம்
நெரித்திடுமேகநீர் சுருக்கண்டிடே. 373

கண்டிடாயிருகண் புகைபித்தமு
மண்டிடாமெய்யனத்தல் நமைச்சலும்
விண்டிடாவாயில் வீசியநாறல்போந்
தெண்டிடாய்பத்திய மில்லைக்காத்திடே. 374

### குடைச்சலுக்குச் சிகாமணிச்சூரணம்.

கார்த்திடாயறுகம் வேரிலெண்பலம்
மோர்த்திடாய்முதிர் வேம்பின்தோலெண்பலஞ்
சார்த்திடாய்துய்ய சங்கம்வேரெண்பலம்
பார்த்திடாய்சித்தி பாலினிற்செய்திடே. 375

செய்யடாகதிர் சேரவுலர்த்தியே
வையடாசுக்கு வால்மிளகோமமும்
வெய்யடாவாய்விளங்கம் நற்சீரகம்
பையடாபறங்கிப் பட்டைகூட்டிடே. 376

கூட்டிடுதிப்பிலி குருசானியு
மூட்டிடுமிளகு பொடிரேகணி
காட்டிடுபூலாக் காரமரத்தையுங்
கேட்டிடுவகைக்குப் பலஞ்சேரவே. 377

சோரடாசிருதேக் கருஞ்சீரக
மாரடாலவுங்கம் லவுங்கப்பட்டை
பாரடாசாதிபத்திரி சாதிக்காய்
கோரடாவேலங் கோஷ்டமுங்கண்டிடே. 378

கண்டிடாயோர் வகைக்குக்கழஞ்சிடைத்
தெண்டிடாநர்ச் சிகாமணிச்சூரணங்
கொண்டிடாய்சமன் கூட்டுவெண்சர்க்கரை
உண்டிடாய்ப்பலமோர் தினம்வாங்கிடே. 379

வாங்கிடுமிருபோ தொருமண்டலம்
ஓங்கிடும்வாய்வோடொத்தக் குடைச்சல்போம்
தேங்கிடும்பசி தீபனங்கண்டிடும்
பாங்கிடுமில்லை பத்தியம்நீங்கிடே. 380

### சுகஜன்னிக்கு.

நீங்குநல்முதலை நெய்பலமரைக்
காங்குமாயக்கரண்டியி லுருக்கியே
யாங்குசாண்மோ ரங்குலங்கட்டிட
வோங்குஞ்சூட்டுட னுச்சியில்தாக்கிட. 381

தாக்கும்போது சயித்தியசன்னியுந்
தோக்குவேர்வை சுகசன்னிவாதமும்

போக்குமென்னப் புகல்வதுதேரையன்
வாக்குப்பொய்த்திடா வாங்கிடப்பார்த்திடே. 382

### பூமணிக்குளிகை.

பார்த்திடுமிதுப்பை மலரூகணி
தோர்த்திடுவாளஞ் சுத்திவகைபலங்
கார்த்திடுவறுத்துக் கருசிஞங்கணிச்
சார்த்திடுவேழு சாமம்விட்டாட்டிடே. 383

ஆட்டிடாமெழு காமைக்கான்றனேச்
சாட்டிடாய்வந்தனே தவருநிழற்
காட்டிடாய்சுண்டக் காயொருபூமணிக்
கூட்டிடாய்சங்கங் குப்பிஞ்சிகாட்டிடே. 384

நாடும்வேளே ரசமேனிச்சாரதில்
ஆடுமிவ்வகை யைந்துநாட்கொண்டிடில்
ஓடுங்குன்மவாய் வொக்கவேசூலேபோம்
போடுமுப்புப் புளிபுகைவிண்டிடே. 385

### பெருவியாதிக்கு திமிருக்கு நீலகண்டாமணித் தயிலம்.

விண்டிடப்பா விலாரியின் தூரது
கண்டிடப்பாகதிர் முன்னுலர்த்திபின்
கொண்டிடப்பாகுழற் பெரும்பாண்டத்துள்
அண்டிடப்பாவறு துளேமூடிடே. 386

மூடிச்சீலேமண் மூன்றதுசெய்துட
நோடிதூர்தனி யுள்ளிர்க்கலசம்வைத்
தேடிசந்துவாய் சீலேமண்செய்குழி
ஆடித்தீயிட்டரை யளவோங்கிடே. 387

ஓங்கிடாயுத்ததி யுள்ளார்பாண்டத்தை
தீங்கிவைத்தெடு நீலகண்டாமணி
வாங்கிசட்டியில் வைத்தடுப்பேற்றியே
பாங்குசர்க்கரைப் பாகுசெய்தார்த்திடே. 388

ஆர்த்திடாய்முத லாகிக்கணேசனேப்
போர்த்திடாய்ப் பலம்போதிருகோமும்
ஏர்த்திடாய்மண்டல மிரண்டிப்படி
தீர்த்திடாய்பெரு நோய்திமிரோடுமே. 389

ஓடுமாவிநெய்யுத்த பால்சர்க்கரை
தேடுவெள்ளாட்டிறைச் சிறையின்வற்றலாங்
கூடும்பாசிப்பயர் குறைவைவிரால்
ஆடுவுப்புப் புளியாமரிந்திடே. 390

மேகம் கறுப்பு வெளுப்பு ஊறலுக்குச் சஞ்சீவி லேகியம்.

அரிந்திடாய்ச்சிவனார் வேம்பறுகம்வேர்ப்
பரிந்திடாய்ச்சமன் பாண்டத்தில்
முரிந்திடாய்ச்சட்டி மூடுதுவாரமேழ்
தெரிந்திடாய்ச்சந்துச் சீலைமண்ணேத்திடே. 391

ஏர்த்திடாய்த்தூ ரிருக்ககலசம்வை
போர்த்திடாவாய்ப் பொருந்தமண்சீலைசெய்
சார்த்திடாய்க்கெசந் தான்புடமாறிடில்
கார்த்திடாயைங்கானைத் தூதித்திடே. 392

எடுத்தசீனியே சமன்பாருசெய்
விடுத்திடுவாள் மிளகுகசகசா
கொடுத்திடுமிளகு சுக்குசாதிக்காய்
அடுத்திடுஞ்சித்த ரத்தையுங்கண்டிடே. 393

கண்டிடுந்தான்றிக் காயகருஞ்சீரகம்
கொண்டிடுமோடி கோட்டநர்ச்சீரகம்
அண்டிடுலவுங்கம் லவுங்கப்பட்டை
விண்டிடுமதுர வேலந்தாக்கிடே. 394

தாக்குபொற்கடுக்காய் சாதிபத்திரி
தேக்குதாளிச பத்திரிரோகணி
தூக்குவோர்வகை சூட்டிக்கழஞ்சிடை
நோக்குதுளாய் நொருக்கியிடித்திடே. 395

இடித்திடுமிமை யேகவடித்தெடு
பிடித்திடும்பரகிற் போட்டுறவாகவே
மடித்திடும்பல மாறுவிட்டாவிநெய்
குடித்திடுக்கிளறிக் குடுத்தேத்திடே. 396

தேர்த்திடாதி வைதியாறிறக்கியே
சார்த்திடாய்மேக சஞ்சீவிலேகியம்

பார்த்திடாய்க்கொட்டைப் பாக்களவாகவே
நேத்திடாயிரு நேரமரிந்திடே. 397

அரிந்திடுமண்டல மகலாமலே
விரிந்திடுமேக வெள்ளைக்கறுப்பொடு
சொரிந்திடுமுதல் சொல்லாதொழிந்திடும்
தெரிந்திடுமொழித் தேரையன்கண்டிடே. 398

கண்டிடாய்முருங்கைப் பிஞ்சுசிறுபயர்
பண்டிடாப்பசும் பால்தயிர்நெய்யுடன்
கொண்டிடாய்நர்க் குறவைவிரால்முசல்
உண்டிடாய்ப்புளி யுப்பதுவேத்திடே. 399

அசுவகெந்திச் சூரணம்.

வேர்த்தமுக்குரு வேரிரெட்டுபல
மேர்த்தசுக்குயிடையுமே ரெண்பலங்
கார்த்மோடிடைக்கண்டு கொள்ளார்பலம்
பார்த்துநல்மிளகு பலமாறிடே. 400

ஆறுவோமம் அரிசியின்திப்பிலி
சேருபொர்க்கடுக்காய் சிறுதேக்குடன்
பாருதாளிசபத்திரி தான்றிக்காய்
மாருரோகணி வாய்விளங்கூட்டிடே. 401

கூட்டுநர்க்கடுகு கருஞ்சீரகம்
பூட்டுமல்லிகார்போகம் பர்ப்பாடகம்
நாட்டுச்சீரகம் நற்பரங்கிப்பட்டை
காட்டுவோர்வகைக்குப் பலங்கார்த்திடே. 402

கார்த்திடுலவுங்கம் லவுங்கப்பட்டை
சேர்த்திடுபெருஞ் சீரகம்கோஷ்டமும்
பார்த்திடுசாபத்திரி சாதிக்காய்
சார்த்திடுகுரு சானியரிந்திடே. 403

அரிந்திடாய்நல் லரத்தைமதூமும்
வரிந்திடாய்மஞ்சள் வால்மிளகேலமுந்
தெரிந்திடாய்வகைக்குச் சேர்கழஞ்சிடை
கரிந்திடாமல் கடுகவறுத்திடே. 404

வறுத்திட ரசுவகெந்திசூரணம்
நிறுத்திடீர்சீனி ரேகிச்சமனிடு
பொருத்திடீர்பலம் போதொருமண்டலம்
மொருத்திடீர்வாயுவு மோடுமிதுண்டிடே. 405

### கபாடமாத்திரை.

துண்டிடாய்ப்பரங்கிச் சுக்குகசகசா
வண்டிடாய்லவுங்க மால்மழுதளிர்
அண்டிடாய்புளி மாதளையிலெடு
செண்டிடாய்ப்பூவக்திப் பட்டைச்சேரவே. 406

சேரதிவிடையஞ் சிறுநாகப்பூ
நேர்வகைக்கு நிறுத்திடுவாய்சமன்
பாரதென்னைவிடும் பாளைரசத்தினில்
ஏர்கடிகைபீ ரேழுவொன்றாட்டிடே. 407

ஆட்டிடாய்மயனம்போ லரைத்தெடு
கூட்டிடாய்ச்சிறு குன்றிபோல்செய்கிழல்
காட்டிடாய்பேதி கட்டுங்குளிகையாக்
தேட்டிடாமொழித் தேரையன்கண்டிடே. 408

### பிள்ளைபெற்றவளுக்குச் சீழுதிரங்கட்டினுல் லேகியம்.

கண்டிடக்கதலிச் சருகைச்சுட்டு
அண்டிடப்பனை வட்டுரொட்டிப்பிசை
பண்டிடப்பாக்கள வொருமூன்றுநா
ளுண்டிடச்சீ ழுதிரம்விட்டோடுமே. 409

### வச்சிரக்கியாழம்.

ஓடிவேயிலை யொக்கக்கியாழம்வைத்
தேடுமூன்று தினமுங்கொடுத்திடி
லாடிச்சீழு மழுக்குமுதிரமும்
நாடிக்கீழில் நழுவிடும்பார்த்திடே. 410

### வச்சிரவல்லிச் சூரணம்.

பார்த்திடாய்ப்பிரண் டைத்தூர்பலமரைத்
தோர்த்திடாயிரண் டங்குலங்கொய்துடன்

வார்த்திடாவின்பால் மாருதரைப்படி
போர்த்திடாயடுப்புத் தாவிகாட்டிடே. 411

காட்டிடுகதிர் காணவுலர்த்தியே
நாட்டுசுக்குட நர்ப்பரங்கிப்பட்டை
காட்டிடுமிளகு கருஞ்சீரக
மூட்டிடுமதுரம் பொடிசேரவே. 412

சேரடாசிறு தேக்குநர்ச்சீரக
மாரடாமல்லி வால்மிளகேலமும்
நேரடாரோகணி லவுங்கப்பட்டை
வேரடவாய்விளங்கமுங் கண்டிடே. 413

கண்டுபொர்க்கடுக் காயொடுதான்றிக்காய்
அண்டுசித்தரத்தை பேராத்தையும்
பண்டுதாளிசப் பத்திரிகோஷ்டமும்
விண்டுவோர்பலம் வெவ்வேறுதாக்கிடே. 414

தாக்குகிரும்பு சதிர்குருசானியும்
தோக்குசாதிக்காய் தொந்தமாம்பத்திரி
நோக்குசோம்பு கோரோசனையமுக்கரு
நீக்குவோர்வகை நேர்கழஞ்சொன்றிடே. 415

ஒன்றிடாய்வகை யொக்கவுலர்த்திடி
லன்றிடாய்வச்சிர வல்லிச்சூரணம்
அன்றிடாய்சீனியந் திடைகூட்டியே
பொன்றிடாவிருபோது மருந்திடே. 416

அறிந்திடும்பல மாகுந்தினம்
தெரிந்திடுமண்டலத்திற் பொருமலும்
வருந்திடுமூலவாயுவு குடைச்சலும்
விருந்திடுமூஷ்ண வாயுவுந்தோற்றிடே. 417

விஷத்திற்கு நசியம்.

தேர்த்தும்தும்பைத் துளசிமிளகுடன்
பேர்த்துமெண்ணுப் பிறட்டிநசியமுண்
டோர்த்துப்போதி லிரங்கும்பல்லின்விஷம்
பார்த்துமுப்புப்புளி பத்தறத்தள்ளே. 418

### பல்விஷத்துக்கு எலிவிஷத்துக்கு.

தள்ளுதும்பையின் சாறுரன்றுழக்குடன்
எள்ளுமெண்ணெ யேகச்சமன்கூட்டியே
பொள்ளும்போது குடித்துப்பல்விஷம்
விள்ளுபத்தியம் வெந்நீரன்னந்தாக்கே. 419

தாக்குமேனியின் சாறுரன்றுழக்குடன்
தூக்குயெள்ளெண்ணெய் சூழச்சமன்விடு
தேக்குமூன்று தினத்திலெலிவிஷம்
போக்குமுப்புப் புளிபுகைமாற்றிடே. 420

மாத்துச்சீரகமாரி ரெண்டுபலம்
எத்துவால்விளங் கேலமிளகொடு
சேத்துமோடி தேக்குசுக்குதிப்பிலி
பார்த்துதாளிசபத்திரி கொண்டிடே. 421

கொண்டிடாய்வகைக் கோர்பலமேமறுத்
தெண்டிடாயிடித் தேவடிசெய்துடன்
கண்டிடாய்ப்பேரீச்சங் கனிவித்தெடு
தண்டிடாய்ப்பலமா றெட்டுதாக்கிடே. 422

தாக்குமுன்பொடு தன்னைவிட்டுப்பிசை
நீக்குவேர்பலம் நேரிருநேரமும்
தோக்குமண்டலத்துள் விரைவாதமும்
போக்குபாதப்பொருமல் விட்டோடுமே. 423

ஓடும்பத்திய முண்டுண்டுகந்தறி
சாடும்வாயுவஸ் தாகாதகத்துடன்
போடுமுப்புப் புளியிவைகூட்டியே
ஆடும்வெக்நீரன்ன முண்ணக்காரமே. 424

### வீரியவிர்த்திக்கு ஒணான்லேகியம்.

காரகர்ச்சாதிக்காய் லவுங்கம்மலா
நேரறிந்தபிளியதின் வித்துடன்
மாரன்புஷ்பம் வகைக்குக்கழஞ்சிடை
பாரச்சூதம்பணவிடை யொண்டதே. 425

ஒண்டப்பாட்டியோ ணுன்குடல்தோலெடுத்
தண்டப்பாவைத் தறுப்புவாய்தைத்துடன்

விண்டப்பாவிநெய் விட்டுப்பதத்தினில்
கண்டப்பாபொரித்துக் கரத்தெடுத்திடே. 426

எடுத்துடன்மேலும் பொல்லாமகத்துடன்
தொடுத்திடுகல்வத்துள் வைத்தரைத்தெடு
கொடுத்திடுசிறு குன்றிபோல்நெய்யினில்
அடுத்திடுவிந்தகலா திருக்குமே. 427

இருக்குங்கிராணி யிரங்கா தருவையோ
ஒருக்குமல்குலிலுண துலக்கையாய்
பொதிக்கும்போகம் பொதியும்வென்னீர்விடில்
வெதுக்குமாதர்விடா ளிதுவுண்டிடே. 428

வீரியவிர்த்திக்கு ஊர்க்குருவிலேகியம்.

உண்டிடாயூர்க் குருவிக்குடலெடுத்
தண்டிடாய்லவுங்களு சாதிக்கானபின்
விண்டிடாய்வகைக்கு விராகணரைக்
கண்டிடாய்மகன் கைமலர்சேர்த்திடே. 429

சேர்த்திடுகழஞ்சி யிடைக்காலது
ஏர்த்திடுமிவையெல்லா மரைத்துடன்
கோர்த்திடுகுருவிக் குள்ளேவைத்துவாய்
போர்த்திடுநெய்யிற் போட்டுப்பொரித்திடே. 430

பொரித்தெலும்பையும் போக்கிமெழுகென
குறித்தரைத்தொரு குன்றிபோல்வாங்கியுண்
நிருத்தநாளிருநேரமு வேழுநாள்
விருத்தமன்மத வீரியங்கண்டிடே. 431

உந்திவேர்க்குளிசம்.

கண்டிடாயிளங் கன்னிதலைச்சுதன்
உண்டிடாதிரு வுந்தியின்வேரது
கொண்டிடாநர்க் குளிசந்துபங்கொடுத்
தண்டிடாயிடை தன்னிலிறுக்கிடே. 432

இருக்கும்பெண்களை யீரைந்துநாழிகை
ஒருக்கும்பூண்கட் டுலக்கையதாக்கிடும்
பெருக்கும்விந்துப் பிசகாதிவ்வேர்க்கது
பொருக்குங்காமம் பொழிம்பின்னேரவே. 433

மன்மதக்குழம்பு.

ஏர்நிலப்பனையின் கிழங்கோர்பலம்
வேர்தண்ணீர் விட்டான்கிழங்கோர்பலம்
தேர்நெரிஞ்சிவேர் சேர்த்திட்டொருபலம்
பாரைத்தாவிநன் பாலுழக்கூட்டிடே. 434

கூட்டுமான குழம்புகொதித்துடன்
மூட்டுனித்த மூனோந்துகுடித்திடில
காட்டுவீரியங் கைகண்டதிம்முறை
மாட்டுலக்கையாமல் குளிர்கண்டிடே. 435

பாஷாணபற்பம்.

கண்டுநாகம் வெண்காரங்கருவங்கம்
தண்டுமூன்றுஞ் சமன்வகையோர்பலம்
பண்டுபோட்டொரு பாரியசட்டியில்
ஒண்டுதீயிட் டுருக்கிப்பிரித்திடே. 436

பிரித்திடுவெடியுப்பு பொடிசெய்து
நிறுத்திடுபலம் நேரொருமூன்றுநாள்
குறித்திடுசிறுகக் கொடுத்தெருக்கங்கோல்
வறுத்திடுசெட்டி மாத்ததேழரிந்திடே. 437

அரிந்திடும்வெள்ளை நெரித்தொருநெல்லிடை
பரிந்திடும்வெள்ளைப் பாஷாணமோர்பலம்
விரிந்திடுபற்ப மேலுங்கீழெட்டெரி
பொரிந்திடுங்கட்டிப் போகாதுநீறுமே. 438

நீறும்வெள்ளை நெரித்தொருநெல்லிடை
தேறுந்தேனிவிஞ்சிச் திரிகியாழத்தில்
மாறுஞ்சன்னியு வாயுகுளிர்சுரம்
தீரும்பத்தியம் சேரபுளித்தள்ளே. 439

தந்தவாயுவுக்கு உப்புச்சூரணம்.

தள்ளடாவுப்பு தானீரைந்துபலங்
கொள்ளடாசெங் கொட்டைப்பலம்ரெண்டதில்
கள்ளடாவெருக்கன் பழுப்பைம்பது
துள்ளடாயிடித் தோட்டில்வறுத்திடே. 440

வறுத்திடுசாம மைந்திரத்தூளதாம்
நெறித்திடுமிரு நேரமரைப்பலங்
குறித்திடுநிதங் கோரிடீரைந்துநாள்
உரித்திடுபல்நோ யோடிடுங்கண்டிடே. 441

கண்டிடாயடைக் காயவாயிலிட்டுடன்
பண்டிடாய்வெள்ளிலையி லோர்பாச்சியை
விண்டிடாய்சுருட்டி மேலேமெல்லிடில்
சுண்டிடாயீர்ச் சுரப்புருமாத்திடே. 442

தந்தவாயுவுக்கு காட்டாமணக்கன்பால்.

மாத்துகாட்டாமணக் கொடிபாலெடுத்
தூத்துமுக்கழஞ் சூட்டுள்ளங்கையில்
ஏத்துநன்று யிழைத்திருநேரமுஞ்
சாத்துதந்தநோய் தான்பறந்தோடுமே. 443

ஓடும்பட்டையுந் தொராப்பட்டை
ஜாடுரெண்டுஞ் சமனிடைத்தட்டியே
நாடுமண்டலம் நாளிருநேரமும்
போடுவீரரைப் புண்ணுருநாட்டிடே. 444

சளிகோழைக்குப் பிண்டாசம்.

நாட்டிடும்பிரண்டை நறுக்கொண்டுதான்
வாட்டிடும்பிழிந் தாங்குரசந்தனை
போட்டிடுமிருபோது மோரைந்துநாள்
கூட்டிடுஞ்சளி கோழைவிட்டோடுமே. 445

சகல வியாதிக்கு குளிகை.

ஓடுத்தாமணி யூமத்தைசங்குப்பி
நாடும்பிரமருக்காச்சி நல்வேளையுஞ்
சாடுவாத மடக்கிவெண்சாரணை
ஆடும்வெள்ளை யுறுகுடன்கார்த்திடே. 446

கார்த்திடாய்த்தும்பை கள்ளியெருக்குடன்
நேர்த்திடாய்ப்பழ மிவ்வகையொன்றுக்கு
மார்த்திடாய்சமன் வாங்கிடுநீபலம்
போர்த்திடாம்மஞ்சள் பூண்டுசுக்காட்டிடே. 447

காட்டிச்சீரகம் கார்போகரிசியும்
நாட்டுதிப்பிலி நல்மிளகுப்பையு
மாட்டுக்காயம் வாளங்கடுக்காயொடு
மூட்டிச்சித்திர மூலமும் அண்டிடே. 448

அண்டுங்கத்தூரி மஞ்சன்ருஷ்டமூடன்
வெண்டுஞ்சென்னல் வித்துகருஞ்சீரகம்
உண்டும்வெண்கடு மொட்டியமுக்கிருய்
கண்டுகொள்கைக் காற்பலமாட்டிடே. 449

ஆட்டிதூளுசெய் தப்பாவடித்தெடு
கூட்டிமுன்ரசங் குத்தேழுசாமமும்
காட்டிமைபோல் கதித்திட்டரைத்துடன்
வாட்டிகெந்தி மநோசிலேசூட்டிடே. 450

சூட்டுத்தாளகஞ் சூதம்வெண்காரமும்
கூட்டுலிங்கங் கெவுரிவெண்ணுபியுங்
காட்டுவேர்வகைக்கிப் பலங்காலிடை
நாட்டுதும்பை ரசத்திலரைத்திடே. 451

அரைத்துசாமமே மூட்டிவலிந்துடன்
தெரைத்துநர்க்கருசிஞங் கண்ணிச்சாற்றினில்
விரைத்துசாம சாமமேழ்வீசியரைத்துபின்
பரைத்துபார்க்கான் பாரதுலர்த்திடே. 452

உலர்த்திச்சஞ்சீவி யோர்பலஞ்சாற்றினில்
பிலத்தியாயிழை பின்னேயின்காயென
சலத்தியாய்த்தணல் தாக்கிக்கொடுத்திட
நிலத்தியாயிரு நேரமுந்தாக்கிடே. 453

தாக்குநேரேழ் தரிக்கனுவாயுவுங்
கூக்குவகைப்பதங் குத்தல்குடைச்சலும்
போக்குமேக வாய்வுப்பிடிப்போடிடுங்
காக்கும்பத்தியங் கண்டிதங்கார்த்திடே. 454

காசத்துக்கு அனுபானம்.

கார்த்துச்சங்குப்பி கால்பலச்சாற்றினில்
சேத்துரைத்தெடு சுண்டையின்காயென

ஏர்த்துநாளேழிரு போதிந்தப்படி
பார்த்துக்காசம் பறந்திடுங்கண்டிடே. 455

சீதசுரத்துக்கு அனுபானம்.

கண்டிடப்பாக தண்டுத்தேன்விட்டிழைச்
செண்டிடப்பாத் தேத்தவித்தென்தொட
அண்டிடப்பா வாரிருநேரமுந்
திண்டிடப்பாசுரந் தெரித்தோடுமே. 456

இதுவுமது.

ஓடும்வேளையி லூற்றசரத்தினில்
தோடுரைத்தெடு சுண்டையின்காயென
போடுநாளேழு போதிருநேரமுஞ்
சாடுஞ்சீத சுரந்தன்னைக்கட்டுமே. 457

ஜன்னி சயத்தியத்திற்கு.

கட்டுமாவுலிங்கை முருங்கைப்பட்டை
குட்டுபாதிரி கொங்கையின்பால்பலம்
விட்டுத்தேனுடு வெள்ளிலைச்சார்சமன்
தட்டுயின்றசத்தால் ரசம்வாங்கிடே. 458

வாங்கியிந்தப்படி மாறுதைந்துநாள்
ஓங்கிழைத்திடுவோ ரிருநேரமுந்
தாங்கிநின்றதோர் ஜன்னிசயித்தியம்
தேங்கிடாமல் தெரித்திடுஞ்செய்திடே. 459

குன்மத்திற்கு.

செய்யடாவாழைச் சாற்றினிலேழுநாள்
வையடாயிழைவாங் கிருநேரமும்
பையடாகொள்ளு பத்தியங்கண்டிதம்
மெய்யடாகுன்ம மீறுதுகட்டிடே. 460

கட்டிடுங்கடுக்காய் பிஞ்சியின்மலர்
தொட்டிடுஞ்சூரத்துச் சிறுநாகப்பூ
விட்டிடுஞ்சோம்பு வீதங்கழஞ்சிடை
நெட்டிடும்பசு நெய்யிலேதோர்த்திடே. 461

தோர்த்திடாய்வறுத்துப் பொடிசெய்துடன்
கார்த்திடாய்வெண் கர்க்கண்டுகழஞ்சிநாள்
ஏர்த்திடாய்யரைத் திவ்விதமேழுநாள்
சேர்த்திடாயுதிரஞ் சீதசாடுமே. 462

சாடுவோமந்த னிப்புரசம்விரை
ஓடும்வேப்பையிர்க்குத் தப்பிரண்டையும்
போடுநால்வகை போட்டுச்சமனிடை
ஆடுநீருமரைப்படிக் கண்டிடே. 463

கண்டிடவேரிகாச்சி நாலொன்றுதான்
சுண்டிடவிறுத்துக் குடிமூன்றுநாள்
உண்டிடப்பூச்சி யுள்ளதுகட்டுடன்
விண்டுபந்தாய் விழுமிதரிந்திடே. 464

அரிந்திடும்பேதி யாகக்கொடுத்திடு
சரிந்திடும்பூச்சி தங்காதினத்துடன்
பரிந்திடும்பின்னி பந்துபந்தாய்விழும்
திரிந்திடும்பத்திய மில்லைத்தோத்திடே. 465

தாம்பூரபற்பம்.

தோத்திதாம்பூர தட்டுவெண்சாரணைச்
சாத்திலேழ்தினந் தாநூறியானபின்
நேத்திச்சூட்டிலோ ரேழ்விசைகாச்சித்தோய்த்
தாத்திவெள்வங்கத்தால் குகைசெய்திடே. 466

செய்யுமூசையிற் சேர்முன்மருந்தடை
பெய்யுஞ்சாறு பிழிந்ததின்மேல்விடு
வைவுஞ்சீலைமண் வாகேழுசெய்துடன்
முய்யுஞ்சீலை முழத்தளஞ்சுற்றிடே. 467

சுற்றும்பந்ததில் நூவாமணக்கெண்ணெய்
மெற்றுநன்றாய் மிகச்சுடரேத்ததில்
பற்றுமாறிடில் வாத்தெடுபற்பமா
முற்றுதீப தூபமும்கொடுத்திடே. 468

கொடுத்திடாய்பற்பங் குன்றிடைதூக்கியே
விடுத்திடாவிநெய் விட்டிருநோமும்

அடுத்திடாய்மண்டல மரைகொண்டிடில்
எடுத்திடாய்வீரிய மாங்தெரித்திடே. 469

பக்கசூலைசுரவாதத்திற்கு.

கண்டிடுள்ளி கனத்தயிலத்திழைத்
துண்டிடுபக்க சூலைவிட்டோடிடுங்
கொண்டிடுங்தேனிற் கூட்டிடிர்மூன்றுநாள்
மண்டிடுஞ்சுர வாதம்போமுட்டிடே. 470

ஜன்னிக்கு.

மூட்டுகொச்சிப்பட்டை முருங்கப்பட்டை
காட்டுமாவுலிங்கப் பட்டைவெள்ளியில்
ஆட்டுச்சார்பிழிங் தாறுசுரசத்தில்
கூட்டுசன்னி குதித்தெழுங்கண்டிடே. 471

பித்தத்துக்கு.

கொண்டிடுங்கையான் குத்திதன்சார்பலம்
பண்டிடும்பொர்ப் பணவிடைபற்பமாம்
உண்டிடுமண்டல மிருகோமுங்
கண்டிடும்பித்தங் காணுதுபார்த்திடே. 472

தமரகவாயுவுக்கு.

பார்த்திடாய்ப்பரங்கிப் பட்டைசங்கம்வேர்
சேர்த்திடாய்மிளகு சுக்குதிப்பிலி
ஏர்த்திடாய்வகைக்குக் கழஞ்சிச்சலங்
கார்த்திடாயுழக் காரொன்ருய்க்காச்சியே. 473

காச்சிடாயிரு கோங்கியாழத்தில்
பாச்சிடாய்பொற் பணவிடைபற்பமா
மாச்சிடாயரை மண்டலங்கொண்டிடில்
மூச்சிடாவாயுவு முன்னழிந்தோடுமே. 474

திமிருக்கு கிரந்தி ஊரல் குஷ்டம் அரிகிரந்திக்கு.

ஓடும்நீரடியோ ரத்திசாணமாம்
ஆடுமேலோட கத்திருப்பருப்பெடுத்
தேடுவுள்தயிலத்திற்க் கழஞ்சிடை
ஓடுபற்பமும்பொர்ப் பணந்துக்கிடே. 475

தூக்குமண்டலங் தோய்க்கிருநேரமும்
தூக்குசீனிநெய் தூபதீபங்கொடு
நோக்குமீண்டிடில் நோய்விதங்கண்டறித்
தாக்குமெய்த்திமிர் தானழிந்தோடுமே. 476

ஓடும்வாயுவோ டொத்தவியாதியுங்
கேடுமேகக்கிரந்திப் புண்ணூறல்போம்
வாடுங்குட்ட மரிக்கிரந்திவிடும்
தேடுமிம்முறை தேவியைப்பூசியே. 477

மகோதரத்திற்கு.

பூசிகோனீரில் பொற்பணத்தின்னிடை
வீசிநாளேழ் விடிந்துடனீந்திடில்
பாசிபோலப்பா பரிந்திடும்பேதியா
மாசில்லாமல் மகோதரம்நீங்குமே. 478

பாண்டுவிரைவாதத்திற்கு.

நீங்கும்வெள்ளாட்டு நீர்பிடித்தேழுநாள்
பாங்குபற்பம் பணவிடையேத்திடில்
வீங்கும்பாண்டு விரைவாதமோடிடும்
ஓங்கும்பத்திய மொன்றிலைமூட்டிடே. 479

சாரதிராவகத்தில் இலிங்கபற்பம்.

மூட்டிடுச்சார மூவிரண்டார்பலங்
காட்டிடுநாலாங் காச்சலுப்பார்பலம்
மாட்டிடுங்குடுவைக்கு ளறைத்தமைச்
சூட்டிடுவாலை திராவகங்காத்தெடே. 480

கார்த்துச்சாதிலிங்கம் பலமொன்றதி
தூர்த்துத்திராவக முள்ளமுந்தும்படி
ஏர்த்துச்சாமமிரவி முன்வைத்தெடு
போர்த்துவாலையைப் பூசனைச்செய்திடே. 481

செய்யடாவோரைந்து வாளிதன்புடம்
வையடாபற்பமாகும் புசித்தெடு
மெய்யடாபொர்ப்பண விடைதூக்கியுள்
ஐயடாசீனியா மென்றரிந்திடே.

## பித்தபாண்டு பயித்தியமூர்ச்சை.

அருந்திடுமிருநோ மீரைந்துநாள்
பரிந்திடும்பித்தபாண்டு பயித்திய
மூரிந்திடும்வாந்தி மூர்ச்சைவிட்டோடிடும்
தெரிந்திடும்முறை செய்திடத்தீருமே. 483

தீரும்பற்றதின மிருநோமுஞ்
சேருங்குன்றிடைத் தேனீரைந்துநாள்
நேருவாதமுன்னில்லா தொழிந்திடும்
பாரும்பத்தியம் பாங்கில்லைத்தோர்த்திடே. 484

தோர்த்திடாய்ப்பற்பக் தூக்கியோர்குன்றிடை
பார்த்திடாய்முலைப்பா லிஞ்சிவெல்லத்து
வேர்த்திடாய்மூன்று நாளிருநோமுஞ்
சார்ந்திடாய்சுரம் சன்னிவிட்டோடுமே. 485

ஓடும்வெள்ளுள்ளி யுட்டயிலத்தினிற்
கூடும்பற்பமுங் குன்றிடைசேத்துமத்
தாடுகாளேழுடுத் திருநோமுஞ்
சூடும்வாயுவுஞ்சூலை போம்பார்த்திடே. 486

பார்த்திடாய்வேம்பு பட்டையரைப்பலங்
கார்த்திடாய்திரிகடுகு டரைப்பலம்
வார்த்திடாய்ச்சல மாறுதரைப்படி
சேர்த்திடாயெரித்தெட் டொன்றுய்வாங்கிடே. 487

வாங்கிநீரைவடியடி செய்துடன்
தாங்குபற்பந்தனி லொருகுன்றிடை
ஆங்குசேத்துவரு ளிருநோமும்
நீங்குநோய்வகை நேரறிந்திடே. 488

ஆடுமேதருவாய் வந்திரவாயுவுங்
கூடுகுன்மங்குடைச்சல் வயிற்றுநோய்
ஓடுங்கால்கைநோ யுத்தமேகப்படி
வாடும்பாரீசவாய்வு போமுண்டிடே. 489

உண்டிடாட்டு நீரோழுழக்காமதில்
பண்டிடாய்லிங்க பற்பமோர்குன்றிடை
அண்டிடாய்தின மாரிருநோமுங்
கொண்டிடாய்மகோதரம் விட்டோடுமே. 490

ஓடுங்கோவுநீரோ ருழக்காமதில்
கூடும்பற்பமோர் குன்றிடைசேர்த்துடன்
நாடுமூன்றிருநா ளிருநேரமும்
வாடுநீங்கும் பெருவயிர்கண்டிடே. 491

கண்டிடுங்கொடிக் கள்ளிக்கழஞ்சிடை
கொண்டிடுமிளகுள்ளி சமனரைத்
திண்டிடும்பர்ப்பஞ் சேருருகுன்றிடை
அண்டிடுமண்டல மொன்றுநீட்டிடே. 492

நீட்டிடாயிரு நேரமுமிப்படி
கூட்டிடாய்கருங் குட்டம்பவுத்திர
மூட்டிடாய்மே மூறல்கிரந்திப்புண்
மாட்டிடாய்வெள்ளை வாங்குமரிந்திடே. 493

அரிந்திடாய்சுக்கரத்தை வெண்சங்கம்வேர்
தெரிந்திடாய்க்கருஞ் சீரகந்திப்பிலி
பரிந்திடாய்பறங்கிப் பட்டையோமமும்
விரிந்திடாய்மோடி வாய்விளங்கூட்டிடே. 494

கூட்டிடச்சிரகங் கோட்டமதுரமும்
காட்டுக்கிரும்புக்கடுக்காய் முத்தான்றிக்காய்
மூட்டுமக்கிரா முக்கிருதேக்கொடு
வாட்டுவொன்று வகைப்பலமாக்கிடே. 495

மாக்குபொன்னிறமாய் வறுத்தேயிடில்
தேக்குமெல்லிய சீலேவடித்தெடுத்
தாக்குஞ்சர்க்கரைத் தான்சமன்பாகுசெய்
தேக்குமுன்பொடி தூவித் தேன்வார்த்திடே. 496

வார்த்திடாநெய் வகைக்குப்பலமிரண்
டேர்த்திடாய்க்கிண் டிரைக்கிடுலேகியம்
யார்த்திடாலிங்க பர்ப்பமுங்காற்பலங்
கார்த்திடாய்சுண்டைக் காயளவோங்கிடே. 497

ஓங்கிடுமிருநேரமோர் மண்டலம்
வாங்கிடுவாதவாயுவு மார்நோய்கள்
தீங்கிடும்பெருநோய் திமிர்வாயுவும்
நீங்கிடும்முறை நேரறிந்தேத்திடே. 498

## சகலவீக்கத்திற்குப் பத்து.

ஏத்திடாய்ப்புத்திடிமண் பழையன்னம்
ஆத்திடாய்ச்சமன் மைபோலரைத்தெடு
காத்திடாய்நீராகாரம் விட்டுக்குழைப்
பாத்திடாய்கொதிப் பாகெனத்தோக்கிடே. 499

தோக்குநாளேழ்துடங் திருநேரமும்
தாக்குவீக்கத்தரியா விட்டோடிடும்
போக்குவாய்வுவஸ்து புகையும்புளி
நீக்கும்பத்தியம் நேர்கண்டறிந்திடே. 500

## மலஞ்சலஞ்சிக்கினல் எண்ணெயித்திரி.

அரிந்திடாய்சூடக மிகுந்தாதலால்
சரிந்திடாது மலஜலந்தீய்ந்திடும்
தெரிந்திடாயிழைச் சீலைத்திரித்துடன்
நெரிந்திடாமணக் கெண்ணெயுளூட்டிடே. 501

ஊட்டிடாபாசனத்துள் நீர்துவாரமும்
காட்டிடாதே கடிகையீரைந்தது
போட்டிடாய்ச்சலம் போக்குமலத்தையும்
ஆட்டிடாய்வாயுவு வஸ்துதள்ளோடுமே. 502

## கள்ளிக்காக்கை எண்ணெய்.

ஒடுஞ்செண்பக முட்குடல்ரெக்கையும்
பாடுசெய்து பரிந்துரலிட்டே
சாடுமையெனத் தானிடித்தேயிதில்
ஆடுமுத்தெண்ணெயாம் படிசேர்த்திடே. 503

சேர்த்துப்பத்தஞ் செருப்படைச்சார்படி
சார்த்துவந்தாத் தாமரைச்சார்படி
கார்த்துறுய்யக் கட்டுக்கொடிச்சார்படி
பார்த்துவெள் ளுறுகுப்படிசாறிடே. 504

சாறிடைவிவை தானுறவாகவே
நேரடாயிரு நெல்லியின்தோலிடைப்
பாரடார்பலம் பஞ்சனத்தட்டியுள்
ஏரடாவடுப் பேற்றியெரித்திடே. 505

எரித்திடுபதமே யிருத்தேயுடன்
குரித்திடுபலங் கொள்ளரைமண்டலம்
வருத்திடுமேக வாயுவுஞ்சூலேபோம்
நிறுத்திடுப்புளி நேருண்ணரித்திடே. 506

கெந்திரசாயனம்.

அரிந்திடாய்க்கெந்தியார் பலஞ்சுத்திசெய்
யெரிக்கிடாதெள் ளெண்ணெயீரைந்துபலம்
தெரிந்திடாதரைத் தேபிழைச்சீலேயில்
சரிந்திடாதப்பிதான் திரித்தோர்த்திடே. 507

தோர்த்திதீபச் சுடர்த்தயிலம்பிடித்
தார்த்திச்சீரகந் தாளீசபத்திரி
போர்த்திதாகையின் பூலவுங்கப்பட்டை
நேர்த்தியேலம் செரித்திப்பசீந்திடே. 508

வரிந்திடுவகைக்குப் பலந்தாணீரை
சரிந்திடுலவங்கம் ஜாதிக்காய்யொடு
வுருந்திடுவோர் வகைக்கூப்பலமரை
தெரிந்திடுவறுத்தே பொடித்தோங்கிடே. 509

ஓங்குஞ்சூரணமுத் தயிலத்தொடு
வாங்குஞ்சாமமரைத்து ரசாயனம்
பாங்குசுண்டைப்பழ மிருநோமுந்
தாங்குமண்டலந்தா ணரைக்கொள்ளுமே. 510

கொள்ளுங்கைகால் குதித்தோல்வெடித்தலும்
விள்ளுங்கூந்தல் மிகுந்துதிர்புண்புரைத்
தெள்ளுவேகத்திமிர் குடைவாயுவுந்
தள்ளுநோயிவை தான்விடும்பாரிதே. 511

வாந்திவிக்கல் இரும்பலுக்கு.

பார்வருத்திப் பருப்பொடுசீரகம்
ஏர்மதுரமேரடேலம் நெல்லுப்பொரி
சேரரிசியின் திப்பிலிகெந்தமுங்
கார்வகைக்கிடை காற்பலந்தோர்த்திடே. 512

தேர்த்திடும்பொடி தூளிர்கழஞ்சிடை
சார்த்திடுப்பழச்சாறு தேன்சர்க்கரை

போர்த்திடுமிருபோது மோரேழுநாள்
ஏர்த்திடுவந் திருமலும்பேருமே. 513

பேருங்கிராணியும் பித்தமரோகம்
வாருஞ்சுக்கு மயக்கொடுவிக்கலும்
பாருநாவிற் பசைத்தலுந்தாகமும்
தீருங்கற்கமிது செய்துபார்த்திடே. 514

மாதவிடாய்வாராதவளுக்குமருந்து.

பார்த்துவேலிப் பருத்திக்கொழுந்தில்
மார்த்துநாலைந்து வைமிளகைந்துநால்
சேர்த்துக்கட்டித் திரட்டியரைத்துடன்
நேர்த்துநாளே ழிருபோதுமுண்டிடே. 515

உண்டுகெர்ப்பத்தி லுள்ளதுவாயுவுங்
கண்டுவோடிக் கழண்டுநீருவிழும்
யுண்டுவுப்புப் புளிபுகைதள்ளிவிட்
டண்டுவென்னீரோ டன்னமுமூட்டிடே. 516

மூட்டுநீர்வெடி முத்தின்பருப்பொடு
நாட்டுமாவாரை நல்லபஞ்சாங்கமும்
சாட்டுநிம்பழச் சாற்றிலரைத்துடன்
கூட்டுமிப்படிக் கோரித்துவைத்துமே. 517

வைத்துமூவேழு நாளிருநேரமும்
பத்துப்பொட்டிடில் பாரியமெய்தனில்
கத்தும்வண்டு கடிப்படர்தாமரை
மத்துச்சில்விஷம் வாங்கும்பொரியுமே. 518

பொரியுநற்றுவரைப் பருப்போடுதீ
எரியுமேவறுத் திடைக்கிடைவிட்டரைக்
குறியும்பத்திடில் கோத்துவீரைந்துநாள்
தெரியுந்தாடை வயித்தியமெட்டுமே. 519

சுரக்கியாழம்.

எட்டுப்போடு தலையிலையோட்டினில்
மட்டுநன்றாய் வதக்குவேப்பெண்ணெயில்
கட்டுநாளேழ் கனத்தவீக்கம்பதைத்
திட்டுவாடிச் சயித்தியந்தீருமே. 520

திரும்பேய்ப்புடல் சீந்திபர்ப்பாடகம்
நேருமாடாதொடை நிலவேம்பொடு
பாருங்கடாஞ்சிப் பட்டைவகைப்பலங்
காருஞ்சுக்குக் கழஞ்சிடைபார்த்திடே. 521

பார்த்துப்போட்டிடு பலமரைதூக்கிவிட்
டேர்த்துநாழிரெண் டெட்டொன்ருய்க்காச்சியே
வார்த்துநன்ருய் வடித்திருநேரமும்
போர்த்துமார்தினம் போஞ்சுரங்கொண்டிடே. 522

கொண்டிடுசெவியங் கொடிவேலியும்
வெண்டிடுநில வேம்புமுக்காவேளை
கண்டிடுவிஷ்ணு காந்திடுவெண்சீந்திலும்
பண்டிடும்வகைக்குப் பலத்தொட்டிடே. 523

தொட்டிடித்துடன் தூக்குப்பலமரை
விட்டிடீர்சலமே யிருநாழிசேர்த்
திட்டிடீரெரித் தெட்டொன்ருய்க்காச்சியே
நெட்டிடீரிரு நேரமோராறுமே. 524

ஆறுபோதகலா மலருந்திடில்
மாறுதாபசுரம் பறந்தோடிடும்
போருமுப்பு புகைபுளிவிட்டிடு
ஏருவாய்ப்பொசி தீரன்னமுண்டிடே. 525

வீக்கத்திற்கு பிரமிக்கட்டு.

உண்டுபிரமியோ டொக்கவேகாடிவார்த்
தண்டுவெரிய சட்டியடுப்பில்வைத்
தொண்டுசெய்து சுருளவதக்குடன்
கொண்டுகட்டுகுதித்தப் பொன்ஞென்றுமே. 526

இருமல்சயத்திற்கு கியாழம்.

ஒன்றுபூனைக்காஞ்சோ ரிலையோர்பலம்
வென்றுமாவிதெய் விட்டுச்சமனிடை
அன்றுதீயா யளியவதக்குடன்
நன்றுமாரைந்து நாளதுபோர்த்திடே. 527

போர்த்திடாயிரு போதுமிந்தப்படி
ஏர்த்தடாய்க்குத் திருமலசயத்துடன்

பார்த்திடாயிலை பந்தரவோடிடுங்
கார்த்திடாய்பத்திய மில்லைகண்டிடே. 528

கண்டிடாய்முசுக்கை யிலையோர்பலங்
கொண்டிடாநெய்யைக் கூட்டிச்சமனிடை
சுண்டிடாய்நற் சுருளவதக்குடன்
திண்டிடாரைந் தினமிதுயேர்த்திடே. 529

ஏர்த்துவிந்தப் படியிருநேரமு
மார்த்துங்குற் றிருமல்சயமீளையுஞ்
சேர்த்துநில்லா திகைத்துவிட்டோடிடும்
பார்த்துநோயறிந்து பத்தியங்கண்டிடே. 530

குன்மத்திற்குச் சூரணம்.

கண்டிடுமுளகாய் கனியெண்பலம்
உண்டிடுங்கனி யுப்புச்சமனிடை
அண்டிடுவறுத்தாட் யெள்ளுப்பொரிக்
கொண்டுடெண்பலங் கூட்டிடிற்பாங்கிடே. 531

பாங்கிடாய்க்கொட்டைப் பாக்களவாகவே
வாங்கிடாய்ப்பனே வெட்டுடாதேனதில்
நீங்கிடாவிருநேர மூவேழுநாள்
ஓங்கிடாய்குன்மமோடுங் கைகண்டதே. 532

அர்த்தனாரீசுரக்குளிகை.

கண்டுகெந்தி வெண்காரம்நாபிரசம்
கொண்டுவோரிடைக் கூட்டுடுவண்ணெச்சிச்சா
ரெண்டுசாமமரைத்துத் திரட்டுடன்
மூண்டுசீலைமுடிந்தது போர்த்திடே. 533

போர்த்துச்சட்டியில் போடுமறைப்படி
சேர்த்துமுன் மருந்திட்டுமேலுப்பிடு
மார்த்துமூடுமறு சட்டிசீலைமண்
சார்த்துவீரிரு சாமமெரித்திடே. 534

எரித்துமத்தைதயிலைச் சாற்றிலாட்டுடன்
விரித்துகொச்சி மிளகளவாகவே
நிறுத்துருட்டி நிழலிலுலர்த்தியே
குறித்து ஆத்தங் குளத்தடிகண்டிடே. 535

கண்டுதுர்க்கைக் கணேசனைப்பூசைசெய்
தண்டுதூபங்கொடுத் தடுத்தேபணி
வெண்டுமாத்தான மெய்க்குளிகையிதைக்
கொண்டுதர்க்கமுங் கூறிடிளேத்திடே. 536

எத்திடாய்முலைப்பா லிழைத்தோர்பிறந்
தோத்திடாய்நசியஞ் சுரம்பாதிபோ
மாத்திடாய்நசியம் மறுபக்கமும்
பாத்திடாய்ச்சுரமீ பந்திவிட்டோடுமே. 537

பித்தம்காதடைப்புக்குத்தயிலம்.

வேறு.

கையாந்தகரைநெல்லிக்காய் கறுத்ததுளசிச்சாற்நாழி
மையாயெண்ணெய்வை யொழக்குமருவுமாவின்பால்நாழி
செய்யுங்கண்டங்கத்திரியுஞ் சேரவிடித்துத்தலைமுழுக
ஐயம்பித்தங்காசும்போ மடர்ந்தகாதும் வெளியாமே. 538

வங்குபடலத்திற்கு வேறு.

உண்ணுமாவின்பாலோர் படிதன்னிலே
வெண்ணுதூதுவளை பழமீர்பலம்
கொண்ணுபோட்டுக் கொதித்துவடித்தபின்
நண்ணுவோர்பலம் நற்பசுநெய்யுமே. 539

நெய்யடாதகரைச் சார்நிறைபலம்
பையடாயெரித் திப்படிமூன்றுநாள்
நையடாயிடித்தே யிருநேரமும்
துய்யடாவசனத்தைத் துலைத்திடே. 540

துலைத்திடாய்மூ துரிஞ்சியின்பட்டையை
அலைத்திடாமலரைத் திடுவென்னியில்
மலைத்திடாயிருவாய் விடுமூன்றுநாள்
திலைத்திடாதிறப்பு நீங்குப்பில்லையே. 541

இல்லையேயரிதார மெருக்கிலை
வெல்லையேபிரண்டைச் சார்விட்டேயரை
அல்லவேபகலு மெடித்தேயிடுந்
தில்லையேவங்குதீர்ந் திடப்பார்த்திடே. 542

## நீரிழிவுக்கு.

பார்த்திடாவிநற்பா லுழக்காமதில்
சார்த்திடாய்சத்திச் சாரணைவேர்பலம்
சேர்த்திடாயரைத் திவ்விதமூன் றுநாள்
ஏர்த்திடாரத்த நீரிழிவுவோடுமே. 543

## படர்தாமரைக் கீழ்வாயுவுக்கு.

ஓடுமேபத்திய மென்றுகந்தரி
போடுமேகம்புளி புகைதள்ளிவிட்
டாடிமேவென்னீ ரன்னமுங்கொண்டிடச்
சாடுமேபடர்ந் தாமரைத்தீருமே. 544

தீரவிட்டெரிதென்னம் வேர்காற்பலம்
நேரவிடுத்திடு நீர்ப்படிரெண்டது
கார்கசைந்திடு கட்டியால்வட்டுடன்
சேர்விடுத்திடுமஞ்சள் வெள்ளுள்ளியே. 545

உள்ளிகல்மிளகோர் வகையோர்பலம்
துள்ளிடாமல் பொடித்ததிலுள்ளிடு
கொள்ளிவாயிலைக் கொத்ததிருத்துடன்
தள்ளிடாய்முறை தாக்குடன்தீறுமே. 546

தீறுமிந்தப் படியிருநேரமும்
மாறுபோதக லாமலரிந்திறல்
மீறுங்காலுப் பிடிப்புவிட்டோடிடும்
மோறுமுப்பு புளிபுகைதள்ளிடே. 547

## பிளவைக்கு மேற்கட்டு.

தள்ளிக்குப்பைக் கீரைவேர்வசம்போடு
உள்ளவெள்ளெண்ணெ யோடுரவாகவே
விள்ளிடாமலெரித்துவடித்துடன்
தெள்ளிடும்பிளவை தீரப்பூசிடே. 548

பூசியேயிவைவிட் டாவிவைத்தெடு
வாசிசெய்மிசை விட்டாவிக்கட்டிடில்
மாசிடாமுளை மாரிவிழுந்திடும்
வீசிடெட்டு விடத்தேரிலையுமே. 549

இலையுமேயுசிலங் கருங்காலிலை
குலையுமேசட்டிக்குள் வைத்தெரித்திடும்
கலையுமேகக் கரும்பொடிக்காத்திடாய்
அலையுமேம்பிளவை நிணங்தீருமே. 550

அடிதள்ளினல் பூசமருந்து.

தீரப்பா எருதின் கழுத்தின்ரணம்
ஊரப்பாமூன் பொடிமேலிட்டாத்திடு
சேரப்பாகரங் தொட்டாசுருங்கிலை
தாரப்பாவுள் ளொட்டித்தழையுமே. 551

தழையும்வெள்ளுள்ளித் தன்னுள்மிளகுசேர்
திழையுமெல்லிய சீலையிலூட்டியே
குழையுமல்குலில் கூச்சமிலாதிட்டு
எழையும்வாழைப்பூ வேத்திவேற்கட்டிடே. 552

கட்டிடாவின்பால் கண்டிசரைப்படி
வெட்டடார்பலங் வெள்ளுள்ளியின்பருப்
பிட்டடாவொறு தேறுதானுள்ளுக்கு
மட்டடாநீயும் வைத்திடச்செய்திடே. 553

செய்யப்பாவேழு போதிருநேரமும்
உய்யப்பாபுகை முன்விட்டிடுபுளி
முய்யப்பாவடி மீறுதுள்ளோட்டிடும்
மெய்யப்பாசாமையின் சாதங்கொண்டிடே. 554

கொண்டிடும்ரசங் கெந்தமுமோர்பலம்
திண்டிடுமகத்திக் கொழுந்தார்பலம்
வெண்டிடுமாதளம்பழம் வில்வப்பழஞ்
சுண்டிடுமரைத் துள்ளுக்குயேற்றிடே. 555

உள்ளுக்கு மருந்து.

ஏத்தப்பாயெழு போதிருநேரமு
சாத்தப்பாவடி தள்ளினுள்ளோடிடும்
மாத்தப்பாபுகை மச்சமறச்சியை
பாத்தப்பாயிச்சா பத்தியங்கொண்டிடே. 556

மலசலங்கட்டினால் மருந்து வேறு.

மங்காதகுழன் மடவீர்சொல்லக்கேளீர்
வாயுவினால்சிற்றின்ப மதிகமானால்
தாங்கிநின்றவிருவாயுங் கட்டிக்கொள்ளுந்
தாரணியில்மானிடர்கள் சகிக்கமாட்டார்
வெண்காரஞ்சவுக்காரஞ் சீனக்காரம்
வெண்மதியாமிந்துப்பு வெதுப்பிக்கொண்டு
சிங்காரவிளநீரில் கொள்வீராகில்
சிக்காதுமலசலங்கள் திண்ணந்தானே. 557

கண்ணில் நீர்வடிதலுக்குமை வேறு.

பாடினேன்கண்ணில் நீர்வடிந்துதானால்
நாடினேன்கரு வேலனிலைதன்னைச்
சூடினேன்காசுக் கட்டியுடனாகக்
கூடியேயிவை யெல்லாம்பொடித்திடே. 558

பொடித்துமே கரண்டியிலேவேணதும்
அடுத்துமேசீனக் காரமுங்கூட்டியே
தொடுத்தநெற்பொரி கோர்சகனாகவே
விடுத்தமாவரைக் குச்சியாற்கிண்டிடே. 559

கிண்டியேநேத்திரஞ் சுற்றிப்பூசிடு
விண்டுமேபுளி யிலையைவேகவைத்து
கொண்டிடுங்கண்ணில் வேதுவாய்கட்டிடும்
அண்டிடுஞ்சிவப் பேறுகண்மாறுமே. 560

கண் வலிக்கெல்லாம்.

காளாய்கண்ணில் வலிவந்தபேருக்கு
சூளாய்புண்ணாக் கிலையின் துளசியை
வீளாய்கோளங் கட்டிசமனாகவே
பாளாய்பழம் புளிப்பாகாய்க்கரைத்திடே. 561

கரைத்துக்கண்ணிலே காலைமாலைபோட
முறைதப்பாமலே நாலுநாள்முழுகிவா
குறைதப்பாபுளியுப்பு புகைதள்ளு
நிறைதப்பாகண்வலி நீங்கிப்போகுமே. 562

### தந்தவியாதிக்கு.

கூறுந்தந்தவியாதிக் கொருமுறை
வீறுமயத்தின் ராவடந்தன்னையே
நீறும்பீங்கானில் போட்டுக்காயும்
தூறுந்தான்றி மாசக்காயுஞ்சேர்த்திடே. 563

சேர்த்துசீனங் கொறுக்காய்புளியுடன்
பார்த்துமேதுருசு காசுகட்டியும்
ஆர்த்துமேகணக்காய் சமனுகவே
போர்த்துமேரும்படிச் சாரறைத்திடே. 564

அரைத்துமேபொடி பல்வலிபுரியவே
கரைத்தபல்ரோகங் காட்டுனிற்புக்கிடும்
உரைத்தபல்புழு வுடலைவிட்டேகிடும்
இரைத்தநூலிது தேரையனுண்மையே. 565

### பல புழுச்சாக.

போகுமின்னமொரு முறைசெப்புவேன்
நாகுமேனெனி நூலைபலம்வாங்கி
நீகும்நெல்லிக்காநீர் சமன்தன்னுடன்
ஆகும்பச்சரிசி யிடைகாட்டிடே. 566

காட்டுமேமந்திர நசிமசியென
தீட்டுநூறுமுறையுடன் தீட்சையை
பூட்டுருவவரப்பல் புழுசெத்திடும்
மீட்டுதேரையன் சொல்லிது வுண்மையே. 567

### வாய்ப்புண்ணுக்கு எண்ணெய்.

கேளும்வாயில் கெடியானபுண்வந்தால்
நாளுமாமணக்கெண்ணெ யொருநாழி
வீளுஞ்சாயகஞ்சார் விட்டுப்பிசரியே
சூளுநீர்ப்பூண்டு கஸ்தூரிசேர்த்திடே. 568

சேர்த்துச்சீரகம் சீராய்ப்பொடுத்திட்டு
பார்த்துயெண்ணெய்ப் பதத்தில்வடித்தெடு
ஊர்த்துவுச்சிக்கரண்டி வீதங்கொள்ள
போர்த்துவாய்ப்புண்ணும் பொருமலுமோடுமே. 566

சகல ரணங்களுக்குக் களிம்பு.

செப்புவேன்களிம் பொன்றுமுறையுடன்
ஒப்பும்விளங்கமு மிங்கியும்பூரமும்
தப்பும்வெள்ளையின் குங்கிலியஞ்சமன்
கப்புமாகிக்கடுக்காயுந் தான்றியே. 570

தான்றிகூட்டித் தனிப்பசுநெய்யினால்
ஒன்றியேமுரை சாமமரைத்திடில்
தோன்றுநீரிலத் துவளவலசியே
கான்றுசூலை ரணத்தினில்தீருமே. 571

மகாவிக்கலுக்கு.

விளம்புவிக்கலுக்கோர் முறைசொலுவாய்
தளம்புஞ்சாம்பிராணித் தனிக்காடிசுத்தியாம்
குளம்புஞ்சுங்கானில் குணமாய்ப்பிடித்திட
பிளம்புவிக்கலும் பஞ்சுபோலோடுமே. 572

மயக்கத்துக்கு கலிக்கம்.

சொல்லுஞ்சுக்கு மிளகுகிராம்புடன்
வெள்ளுந்துவரைப் பருப்புகால்கூட்டியே
சொல்லுமேனிச் சார்தன்னிலாட்டியே
வில்லுங்கண்ணினில் வீசியேபோட்டிடே. 573

போடசன்னிமுதற் பசாசுவேகும்
நீடதேமயக்கம் விஷம்வோடிடும்
ஓடவேகபாலத்தின் சூடுகளும்
கூடகண்டம்விட்டகன் முருமன்பரே. 574

முருகசன்னிக்கு எண்ணெய்.

கூறுஞ்சன்னிக் குறிப்பாகும்எண்ணெயை
வீறுந்தேங்காயின் நெய்படிநாழிலே
தூறுமோமம்வசம்பு வெள்ளைப்பூண்டு
மாறுங்குப்பை மரத்தின்பெருங்காயம். 575

காயம்விராகன் கருஞ்சமனாகவே
தாயமாவிலின் தாவும்லிங்கப்பட்டை

நேயம்நொச்சியின் பெருமரப்பட்டையும்
உபாயமாய்ப்பொடித் தெண்ணெயிற்காச்சிடே. 576

சோகைகாமாலைக்கு நீர்க்கட்டுக்கு தியாழம்.

ஆருங்கீழ்க்காயின் நெல்லிநீர்முள்ளியும்
வாகும்கோவைத் தண்டுடன்வீழிவேரும்
பாகும்பூவரசன் பட்டைதொட்டிவேர்
சாகும்சிறுபூளை தொட்டியுஞ்சேர்த்திடே. 577

சேர்த்துத்தூளுடன் நெருஞ்சிபிதுகீரை
ஊர்த்துவூஞ்சலின் நிரைவகைப்பட்டையும்
பார்த்துக்கடுப்பாய் பருத்தரோகணியும்
ஆர்த்துச்சீரங் கருஞ்சீரங்கூட்டிடே. 578

கூட்டியொன்று விடுத்துமேதோண்டியே
ஆட்டியாறு பாகமாகநீயெடு
கூட்டிபாகமொரு படிதண்ணீரில்
மூட்டிக்காய்ச்சி பிழிந்துவடிகட்டே. 579

கட்டியாறுநாள் காலையிலுண்ணிட
மட்டுமேயுப்பு மங்கையேதள்ளிடு
விட்டுவோடுமதிர்க் கோவைபாண்டுவும்
கெட்டுவோடு மகோதரம்பீலியே. 580

பீலிரோகம் பொருமலிளைப்புகள்
கீலிசோகையின் காமாலைவீக்கமும்
நீலிகண்ணினில் தண்ணீர்வடிதலும்
சோலிவிட்டுமே சொல்லாதுவோடுமே. 581

புருஷர்கள் மதனகோலாகலரசமணிமாத்திரை வேறு.

மண்டலத்தினிலுள்ளவற்கொரு மகிமையாகியமுறைமைகேள்
மதனகோலாகலரசமணிமாத்திரைக் குணநேர்த்தியை
மாசில்லாதபேரீச்சங்காய்தனை வாங்குவாய்தசபலமதாய்
மாதேகேளதின்வித்தெடுத்திடு மத்தவித்துளடைத்திடு. 582

கெண்டைநூலதைசுத்திகோதுமை மாவைபாலரைத்திடு
கெட்டியாய்க்கவசித்துமே சிட்டிப்பால்படிரண்டதினிலே

கேளதின்கவசத்தைநீக்கியே வித்தகத்திகல்வத்தில்வை
கெட்டியாய்வரவுலையில் வைத்தெறிசுண்டமட்டுமவித்திடு. 583

அண்டர்கோளகையான சூதமுமத்தகெந்திகிராம்பவின்
அந்தமாகியசாதிபத்திரி யிரண்டுபணவிடை
அத்திதிப்பிலிநாகமுமானந்த மூலியரைப்பலம்
அச்சமாகியபச்சைபூரமு மிசுப்புகோலுமேகுங்குமம். 584

கண்டுபல்கரைசுத்திசெய்திடு காசுமூன்றிடையாகவே
காய்முருங்கையின்பூவும் பிஞ்சியுங்கண்டுரண்டுபலத்துடன்
காலனாருரைக்காய்ந்தபாலினால் கட்டிசட்டியின்திட்டமாய்
கருதியேயுரையுமொருமையாய் கனகாசமாங்குளிகையே. 585

கொண்டிவாவொருமண்டலமுடன் கோதுசர்க்கரைதேனிலே
கோவுபாலமுதுண்டு பூவிலுறங்குவாயதுவோரிடம்
கொடியவன்பிணிநடுநடுங்கி குத்துவாதமுஞ்சத்தியும்
கொதித்தசூடுகதித்தசூடு சூலைந்துவோடிக்குளிர்ச்சியாம். 586

பண்டுகோதுடல்வாலையாகிற் திக்குமன்மதனாகுவீர்
பங்கமானதோரங்கலிங்கம் பருத்தயானைத்துதிக்கையாம்
பாரிலேவெகுபுதுமையிதப்பா பண்புராசர்களதிகுவீர்
பரிசைஷபாரிதுநால்வகைசாதிப் பாவைமாரையும்வெல்லலாம். 587

விண்டுரைப்பதுபத்தியத்தை விருப்பமாயதைக்கேளுநீ
விண்டுகத்திரிகிண்டுகருணை வெள்ளெளிவெள்ளாட்டுடன்
விளமுருங்கையின்பூவும்பிஞ்சியும் விளாங்கனியெலுமிச்சநெய்
விலாங்குகாடையடைக்கலங்குருவி வுடும்புமுயல்களைவிரும்பலாம்.

சுண்டுகறிகள்வுண்டுமாதரை யண்டிடாதொருமண்டலம்
துன்பமற்றுடலின்பபோக சுகத்தைநாளும்விரும்பலாம்
துதிபெருந்தமிழறிவருந்திடு தூயபண்டிதர்சுகமுற
தோய்ந்தபொருளாய்பாதபூசிதர் சொல்முறையிதுவுண்மையே. 589

## பித்தவெடிப்புக்கு வேறு.

பாரும்பித்த வெடிவந்துநேர்ந்ததால்
ஈரும்மருதுயிலையையரைத்துமே
கூருநற்பசும் பாலில்கலக்கியே
சோருமுண்டபின் சுகமாய்க்குடித்திடே. 590

நீரில்ரத்தங்கண்டால்.

பாடும்நீரினில் ரத்தம்விழுந்திடில்
கூடும்பச்சரிசியி னறுபலம்
சாடும்விராலி யிலையின் துளிர்கூட்டி
நாடுமூன்றுநாள் நயந்துகொடுத்திடே. 591

முழங்கால்வாதம்.

செப்புவேன்முழங்காலின் வாதங்கண்டால்
ஒப்பும்விழிப் புண்ணாக்குடனுவாரை
தப்பும்வெள்ளுள்ளி தாக்கும்விளக்கெண்ணெய்
ஒப்புமூன்றுமே வேதிட்டுக்கட்டிடே. 592

இரணங்களுக்குப்புகை.

விளம்புமின்னமொரு முறைகேட்டிடு
தளம்புமேகொழுஞ்சியின் வேர்தன்னிலே
குளம்புலிங்கமுங் கூடக்கால்சேர்த்துமே
விளம்புஞ்சுங்கானில் வைத்துப்புகையிடே. 593

இட்டுமேபுகை யிணங்கசுவாசத்தில்
கட்டுமூன்றுநாளார் வேளைதான்கொள்ளு
புட்டுமேபாலுஞ் சோறுமேயுண்டிடு
கெட்டுவோடும் ரணங்களின்ரோகமே. 594

தீருமேககரப்பன் வகையெல்லாம்
பாருங்கண்ணோடை கண்வலியானதும்
வீருஞ்சூலையறையாப்பு புத்துகள்
கூரும்பிளவைகொடிய ரோகம்போமே. 595

ஸ்திரீவசியம்.

மாடமுட்டை மனோசிலைக்காந்தமும்
நீரிலொட்டிய நின்றுசிணுங்கியும்
ஆடையொட்டிய வப்பனுங்கூட்டினல்
பாடையேரினும் பட்சமறவளே. 596

வாயுவுகுத்தலுக்குக் கியாழம்.

பாரும்வாயுவு பகுத்தவாயுவுகண்டால்
தேரும்வேலி தெருப்பானசுக்குடன்

வீரும்பரங்கிப்பட்டைக் கிழங்குடன்
நாருஞ்சரியெடைநாழி ஜலம்வாறே. 597

வார்த்துயெட்டொன்ருய் வாகக்கியாழஞ்செய்
போர்த்துமேயிருவேளை குடித்திட
ஆர்த்தும்பத்திய முப்புபுளியாகா
பார்த்துவிந்தக் கியாழமருந்திடே. 598

### சகலகிரந்திக்கு எண்ணெய்.

கூறும்பூசினிக்காய் சாருழக்கதாம்
தேறுங்கற்ருழை நெல்லிக்காய்சாறுடன்
வீறும்வல்லரை வில்வங்கொடுப்பையும்
சீறும்யாதொண்டை நீர்ப்பூண்டுசேர்த்திடே. 599

சேர்த்துப்பர்ச்சாணை வாட்டித்தண்ணீருடன்
பார்த்துச்சங்கோடு நீர்ப்பூலாபாளையும்
கோர்த்துயானை நெருஞ்சின்விழுதும்
ஏர்த்தறுகன்வேர் சார்படியொன்றதே. 600

ஒன்றுசாறுவர மூலியெல்லாமே
மன்றுநேர்மையாய் நிறுத்துபிழிந்துகொண்டு
அன்றடுப்பினி றேற்றிப்பதமதாய்
கன்றுபாலும் பசுநெய்யுங்கூட்டிடே. 601

கூட்டியாமணக் கெண்ணெய்சமனெடை
தீட்டுமேபசு பாலுமேகூட்டிடு
ஊட்டுமேகடை சாக்குவகையெல்லாம்
நீட்டுமேயிடையாக நிறுத்திடே. 602

நிறுத்துமேயசுவ கெந்திசர்க்கரை
பொறுத்துஞ்சித்திர மூலம்நிலக்குமிழ்
வறுத்ததுத்தியின்வேர் பூமிசர்க்கரை
கறுத்தநீர்வெறுப்பு சமன்சேர்த்திடே. 603

சேர்த்துஎண்ணெயில் போட்டுச்சரக்கையும்
பார்த்துப்பத்திரி சாதிக்காய்தன்னுடன்
ஆர்த்துமேலவுங்க மதிமதுரமாம்
ஏர்த்துமாஞ்சிலின் சோம்பொடுவேலமே. 064

ஏலம்வெந்தியம் திரிகடுசீரகம்
மூலமஞ்சள் முதிர்ந்தபலாதியும்
தாலம்ரோசனை தாக்குங்கஸ்தூரியும்
கோலம்வாலின் மிளகுகசகசா. 605

மிளகுபூரங் கடுக்காய்சிறுநாவல்
களகுமல்லிகைத் தாளிசப்பத்திரி
புளகுகார்போகம் லவுங்கமுஞ்சீனியும்
அளகுமுத்தக்காசு நெய்யுஞ்சேர்த்திடே. 606

சேர்த்துக்காய்ச்சி மெழுகயிரக்கியே
போர்த்துமே கடுவொன்றினிலூற்றியே
கார்த்துமே கணபதியைப்பூசித்துமே
ஆர்த்துமேகாண்டி யொன்றுகொண்டிடே. 607

கொள்ளும்போது கிரந்திமதுமேகம்
புள்ளியேகருஞ் செங்கிரந்திப்புண்ணு
விள்ளுமேக மிருபத்தொன்றுமே
தெள்ளியோடுந் தேரையன்முறையிதே. 608

சகலமேகங்களுக்கு எண்ணெய்.

உரைக்குமேக மிருபதுந்தீரவே
திரைக்கமான விளக்கெண்ணெயிளநீரும்
உரைக்குமாவின்பா லூற்றகாடியுடன்
இரைக்கும்பொன்னுங்கணி மூலிசேர்த்திடே. 609

சேர்த்துவாதொண்டை வல்லவறுகன்வேர்
போர்த்துக்கள்ளியை வார்த்துமேநீர்பழு
ஏர்த்துவெந்தயஞ் சீரகம்நாகப்பூ
கார்த்துயேலங் கிராம்புசாதிக்காயே. 610

ஜாதியான வதிமதுரமுடன்
ஆதியாய்கூகைநீருஞ் சீனமுடன்
பாதியான சாக்குப்பருந்துமே
வாதியாகமெழுகா யிரக்கிடே. 611

இரக்கிமண்டல மிருவேளைகொண்டிட
உரக்குமண்டலம் வாய்நாற்றந்தீர்ந்திடும்

இரக்கும்ரோகங்கள் மேகங்களானதும்
பரக்குமென்று பகர்ந்தனர்தேரையன். 612

எலிகடிக்கு.

செப்புவேன் பதினெட்டுயெலிகடி
ஒப்புமேகரும் பூனைமலமதை
தப்புமேகழற் சிக்காயளவுடன்
அப்புமேகருப்பன் கட்டிச்சேர்த்திடே. 613

சேர்த்துமேயுள்ளிக் காயளவுண்டிட
பார்த்துப்பத்தியம் பண்புடனுப்பாகா
ஏர்த்துமேழா நாளினங்கஸ்தானஞ்செய்ய
கார்த்துமேயெலி விஷக்கடிதீருமே. 614

வண்டுகடிக்கு மருந்து.

தீரும்வண்டு கடிவந்தபேருக்கு
மாரும்வெள்ளாட்டுப் பால்தினையரிசியும்
வீருமாடாதோடை மூலிச்சாறுடன்
கூறுமொன்றுகக் கூட்டிக்கலந்துண்ணே. 615

உண்ணும்பத்தியம் வெள்ளாட்டுப்பாலுண்ணு
திண்ணுமேழாநாள் சிரசில்நீரைவார்
கண்ணும்நீலிவேர் கடியவசம்புடன்
வண்ணுமேற்பூச வண்டுகடிபோமே. 616

போகுமேவிஷப் பாண்டுமேகங்களும்
ஏகுமாந்தரைப் புண்கள்ரிணமாறும்
சாகும்பூரான் கடிவிஷந்தீரும்
வேகுமருந்து வியாதிவிட்டோடுமே. 617

பெருச்சாளிகடிக்கு.

செப்புமேபெருச் சாளிகடிகட்கு
ஒப்புங்கொல்லன் கோவைமூலந்தன்னுடன்
கொப்புமபிற்பீலி கோவைபிரண்டையும்
அப்புமேபுகை அழகாய்பிடித்திடே. 618

பிடித்திடபெருச் சாளிவிஷங்களும்
குடித்திடஅறுகன் வேர்கிஷாயங்கள்

கடித்திடப்பாம்பு விரியன்விஷங்களும்
கொடுத்திடசுடல் குடிவிட்டுஓடுமே. 619

### சகலவிஷங்களுக்கு.

செப்பும்தோஷ சகலவிஷங்கட்கு
ஒப்பும்எட்டிப் பழந்தன்னைவாங்கியே
துப்பும்வேப்பெண்ணெய்ச் சரிசமன்கூட்டியே
கப்புமெழுகுபோல் காச்சிவடித்திடே. 620

வடித்துமேசெப்பில் வரகாகமூடியே
துடித்தவிஷங்கள் தீண்டினபேருக்கு
வெடித்ததூதளங் காயளவாகவே
கடித்துபோதுண்ண நல்விஷந்தீருமே. 621

### விஷநசியம்.

ஞூரித்திடுமேவிஷ நசியமொன்று
நிரித்திடுமேநீல துரிசைவாங்கி
தரித்துமேநீரையாகத் துணியில்வை
பொரித்துமேவிஷம் நசியம்பொருத்திடே. 622

### சிறுபாம்புகடிக்கு.

ஓடுமேசிறுபாம்பு கடித்தோர்க்கு
நீடுமேகுரிஞ்சான் வேரைவாங்கியே
ஆடும்வென்னீரி லரைத்துவுருட்டியே
நீடுமண்டல மிருவேளையுண்டிடே. 623

### குஷ்டத்திற்குமருந்து.

கூறுங்குஷ்டநோய் குடிகொண்டபேர்கட்கு
வாறும்செவ்வ லரிவேர்சமூலமாய்
தூறுடனேகுழித் தயிலம்வாங்கி
பாறுகுப்பிக்குள் பதனங்கள்செய்திடே. 624

செய்யுமெண்ணெய் சிறக்கதண்ணீரிலே
எய்யுமேதுளிக் குத்திக்கலக்கியே
பையமூன்றுநாள் காலைமாலையுண்ண
நையுங்குஷ்டங்கள் நடுங்கியேயோடுமே. 625

ஓடும்பத்தியம் வுப்புபுளியாகா
நீடும்பருப்பு நீள்சமனைகவே
கூடுமேழினில் குணமாய்ப்புளிசேரு
ஓடும்குஷ்டநோ யுண்மைபொய்யல்லவே. 626

மருந்துமுறிவு.

கொள்ளுமாந்தர் குணமாய்மருந்திடில்
எள்ளுமெண்ணெயிட்டு முழுகச்சொல்லு
விள்ளுமோருமுட னன்னந்தான்கொடு
கொள்ளுந்தேங்காயின் பாலையெடுத்திடே. 627

எடுத்துபாலையிடை சமன்சர்க்கரை
விடுத்தமுருங்கை விளங்கரும்பாலைச்சார்
அடுத்தவாவிநெய் ஆழாக்குடன்சேர்த்து
கொடுத்துபேதியில் குணமாயருந்திடே. 628

அருந்தும்போது அரிவையர்மருந்துகள்
திருந்துமுன்னறு வேளையில்தான்விழும்
குருந்துதானங்கள் குணமாகச்செய்திடில்
பொருந்துமே மருந்தீடுமுறியுமே. 629

நஞ்சுண்டவர்க்கு கெர்ப்பமழிக்கவும்.

கொள்ளும்நஞ்சுகுடி கொண்டபேர்கட்கு
அள்ளும்நீலியின் பட்டைவேர்தன்னையே
விள்ளும்சோதகஞ் சமூலமிடித்துமே
கொள்ளுமுன்னீரினில் கியாழமருந்திடே. 630

அருந்துமேயிரு வேளையோர்மண்டலம்
பொருந்துங்கற்பம் பொருமியேகீழ்விழும்
செருந்துங்கஞ்சி கருப்புக்கட்டியுடன்
முரிந்துமேயிரு வேளைகொடுத்திடே. 631

கொடுத்திடவுதிர மிகவுங்கண்டால்
அடுத்தவேம்பினின் பட்டையிடித்துமே
கடுத்துமோருட னெழிலாய்ப்பிசைந்துமே
கொடுத்திடவுதிரமுந் தானீங்குமே. 632

### விதவையைக்கூட பிள்ளையில்லாதிருக்க.

கூடுங்கன்னி விதவையைக்கூடினால்
தோடும்பிள்ளை யில்லாமலிருக்கவே
தாடுமூன்றுநாள் தழுவியணைந்திடில்
பேடும்பிள்ளை பெறுவதுமில்லையே. 633

பூட்டுமூலம் பொருமல்ரோகந்தீர
ஆட்டுத்தூதுவளை கருணைமூலம்
மூட்டுநல்லாரை முதியபிரண்டையும்
காட்டுக்கருணை கடியவருகன்வேர். 634

வேரும்நீர்ப்பூண்டு விளங்குங்கிழங்குடன்
தூருமேசமன் துகளபிடித்துமே
கூருஞ்சூரணங் குரிக்குந்தேனிற்கொள்ள
ஆறுமூல மகன்றுதான்வோடுமே. 635

### வேறு பித்தக்கியாழம்.

புகலுஞ்சந்தனம்பற்கடகம் பூசுஞ்சந்தனம்விலாமிச்சந்
திகலும்வேர்க்கொம்புசித்தா முட்டிதேர்ந்தசுக்குசரிகூராய்
இகலுமோதம்வொவ்வொன்று யிசையுந்தண்ணீர்நாழிவிட்டு
பகலுங்காய்ச்சிக்குடிப்பீராய் பகரும்பித்தம்பறக்குமென்றே. 636

### வேறு வாதசுரக்கியாழம்.

தூதுவளையின் பூராவாடாதோடை
சொன்னசங்கன்வேர் சமனாய்விழிகூட்டி
மாதுவளர்த்திப்பிலியும் பற்பாடகம்
வழுதலையுங்காலியுடன் சமன்சேர்கொண்டு
வேதுவிடநீர்நாழி யெட்டொன்றாக்கி
இதனுடனேதேன்கூட்டி யிசைத்தேயுண்ணு
மீதுபாரீர்சுரமும் வாதசுரமும்
மேகத்திற்சேர்ந்த சுரமகன்றுபோமே. 637

### வேறு சேத்துமசுரத்துக்கு.

ஆடாதோடைசிறுதேக்கு யடர்வாகையான்தகரைச்சங்கு
தோடாவேறுயெறும்பில்லை சுக்குச்சேர்ந்தசமன்மிளகு
வாடாநீர்வார்த்தெட்டொன்றாய் வறுத்தந்தேனுமுடன்கூட்டி
போடாநீறுங்கொள்வீராய் போற்றுஞ்சேத்மசுரம்போமே. 638

வேறு வயிற்றுநோவுக்கு.

நிலக்குமிழ்வேர் சிறுத்தேக்குதேவதாரம்
நிலவேம்புபற்கடகங் கடுக்காய்சுக்கு
துலக்கமொடு முத்தமிடும்வசம்புநோய்
சொன்னநீரிருநாழி சுவரக்காய்ச்சி
கலக்கமில்லாதேன் கூட்டுக்கியாழங்கொள்ள
கலந்துழக்குமருந்து கொள்ளக்கடியவையம்
விலக்கரியவயிற்று நோயிளப்புத்தீரும்
வேதமுனிதாமுரைத்தார் விளம்புங்காலே. 639

வேறு பித்தசுரம்.

இடித்துஅத்திப்பட்டையுடனிசையுங் கதலிப்பழம்பிசைந்து
வடித்தநீறும்நெல்லிக்காய் வறுத்துஞ்சாறுதேன்கூட்டி
பிடித்துவறுத்துச்சீரகமும் பிரியமுடன்சர்க்கரைகலந்து
குடித்தபோதேபித்தசுரம் பேசாதோடிப்போய்விடுமே. 640

வேறு மூலரோகத்திற்கு.

போகுமேமூல ரோகமுந்தான்தீர
ஆகுந்துதுவளை வேர்சமூலமும்
தாகும்நல்லாரைப் பிரண்டைக்கருணையும்
வாக்குமூலமருகன் சமூலமே. 641

மூலப்பூண்டு கிழங்குடன்மூலியும்
தாலமாயுரலிட்டுத் துளாவியே
கோலமாசினிசர்க்கரை சேர்த்துமே
சீலமாந்தேனில் சிறப்புடன்கொண்டிடே. 642

கொண்டிடுகை கடிப்பிரமாணமும்
உண்டிடவேயிரு வேளைமண்டலம்
அண்டியாது அறுவகைமூலமும்
திண்டுமேனியுட விட்டுநீங்குமே. 643

கிரந்திஅரையாப்புக்கு எண்ணெய்.

செப்புமெண்ணெய் தெளிவுடன்மாந்தர்க்கு
ஒப்பஞ்சங்கோடு சங்கங்குப்பியுடன்

வெப்புநோச்சிவெள்ளறு குடன்வன்னியும்
கப்புங்கிரந்தியின் நாயகங்காரமே. 644

சுரங்களுக்கு.

காரமட்டுங்கனங் குழல்செப்புவாய்
வாரமட்டும்மனமுலே மாதுகேள்
பேரமட்டியுஞ் சுக்குங்குடித்ததால்
ஊரைவிட்டுமே யோடுஞ்சுரங்களே. 645

வில்வப்பத்திரிவேர் சிறுமட்டியும்
வல்லசுக்குவளம் பெறக்காய்ச்சியே
நல்லதேனில் நயந்துகுடித்திட
கொல்லவந்தசத் திருகுறுகுமே. 646

வே று.

காடையிலேதான்நிற்கனுகில் கருத்ததோஷம்போமென்றூர்
தேடிரழிஞ்சில்வேர்மஞ்சள் தோடோரென்றுவிருபலமாம்
நாடிரடுமரிச்சாற்றரைத்து நற்காடியிலேதான்கழுவில்
பாடிர்வேனத்தோடிமுயோம் பதனம்பண்ணிக்கொள்வீரே. 647

கொள்ளேகொண்ணெய்வேர் மஞ்சங்கூட்டுமிதனையொருபலமாய்
கள்ளேகுமரிச்சாறரைத்துக் கழுவியெடுக்கிற்கரைதோஷம்
துள்ளேகொடுவேல்கடாய் மூலிச்சுகமாமிதனையொருபலமாய்
அள்ளேயரைத்துக்கழுவீரா யக்கினிதோஷம்போமென்றூர். 648

போமேமஞ்சள்மதுமத்தைவேர் புகழும்பலந்தானொருபலமாம்
தாமேயரைத்துக்கழுகுவிராய் தக்ககாடிதான்கூட்டும்
சேமேமஞ்சள்தோஷமும்போம் செய்யக்கடுக்காய்தான்றிநெல்லி
ஆமேமஞ்சளிதினுலுமடவாய்க் கூட்டுபலம்நாலே. 649

பலந்தான்கூட்டியதையெடுத்துப் பழங்குகாடிதனிற்கழுவி
பிலந்தானுண்டாம்விஷதோஷமும் பிறகுதிரியின்கடுமூன்றும்
கலந்தேபலந்தான்மூன்றுகொள்ளும் கடுகக்கூட்டிகழுவுவிராய்
தலந்தானரியுஞ்சடாய்மூலங் தக்கதோஷம்போமென்றூர். 650

கணுவுக்கொருக்காய்பலமிரண்டு கடியமஞ்சள்பொடிபலமாம்
அணுவுங்காடிதனிக்கழுலாரை தோஷம்போமெனவே

மிணுவுநன்ருர்பற்கடகமேவுஞ் சுக்குப்பலஞ்சேர்த்து
சணுவுஞ்சகலதோஷமும்போம் சாற்றுநாலுநாட்கொள்ளே. 651

கொள்ளேயிஞ்சிச்சாறுடனே கூட்டுநார்த்தம்பழச்சாறு
உள்ளேதேனுமுரிகூட்டியுதாங் கொடுவேல்பலமுக்கால்
அள்ளேகியாழமதுவாக்கிறவே பிசகுதன்பதத்தில்
கிள்ளேயிந்தப்பொடிதூவிக் கிளறிப்பாகுபதத்தினிற்கே. 652

இரக்கிபிதுருமாரியபின்னெடுத்தே பொடியுமொருபலமாய்
குருக்கும்பொடியைப்பாகுதனில் குழப்பிதினந்தான்கொள்வீராய்
பிறக்குங்குன்மம்பெருவயிறு பிறவீர்கோர்வைபாண்டுரோகம்
உறக்கும்பித்தம்பாண்டுரோகம் வூஷ்ணங்குன்மமாறிடுமே. 653

மாறுமூலரோகமுடன் வருந்துங்கிராணிகாலே
மீறும்பீனிசிதுமுதலாய் மேவுஞ்சகலவியாதிகளும்
தேறும்படியேபத்தியமாந் தீரும்வியாதிசொன்னேம்போம்
பாருன்சிவனுருரைத்தமொழி பரிவாயுரைத்தார்பார்மீதில். 654

புளியுங்காயும்காடியுமாம் புகழுங்கையான்தகரையுடன்
குளியும்வங்கம்பத்திரியும் குப்பமேனிமுருக்கிலேயுந்
தெளியும்பிரண்டைநொச்சிலேயு சேர்ந்தகிட்டம்பலநூறு
எளிசேர்காடிதன்னே யூறப்போடுமூன்றேநாள். 655

ஊரியெடுத்தபின்பிறவுழக்கு மீயப்பொடியுடனே
சேருங்கடுக்காயரைப்பொடியுஞ் சேர்த்தேபலந்தானஞ்சுகொள்ளும்
நாருங்கோமியநாலுலு நல்லசர்க்கரைபலம்நாலு
மீருமேலமில்வுங்கமிக்க யிந்துசாதிக்காய். 656

மிக்ககரத்தைச்சோலமேவுங் கடுகுரோசனியும்
தக்கசிவதைதேவதாரஞ்சரிசேர் கோஷ்டமரமஞ்சள்
ஒக்ககரிவேப்பிலேயுடனே யுத்ததிரியின்பாலேயதும்
தொக்குந்திரியின்கடுகுடனே சொல்லும்பலந்தாநாலாமே. 657

வெள்ளுள்ளிசுக்குப்பெருங்காய மிக்கயிந்துநசியமதாம்
கொள்ளுஞ்சுக்குந்திப்பிலிவெல்லங் கூட்டிமுலேப்பால்நசியமிட
தெள்ளுநறுநெய்விந்துவுடன் சேர்த்தேயொன்ருய்நசியமிட
விள்ளுமிந்ததிப்பிலியும் வென்னீர்தன்னில்நசியமிடேன். 658

குக்கில்பசுவின்கொம்புடனே கூறுமாட்டுகொம்புருகில்
மிக்கநறுசெய்தான்கூட்டி மிகவேபுகையுங்கொள்வீரே
தக்ககிராம்புமஞ்சளிலே சரிசேரறக்குமரோசினையும்
சிக்கேநாடிநிற்கும்நஷ்டம் சிறக்கவேதான்தெரிந்துவெடே. 659

எடுத்தேமருந்துரெண்டாக்கி யிட்டுக்காய்ச்சிக்குடிப்பீரால்
தொடுத்தகாசசுவாசமுடன் சொல்லுஞ்சன்னிசூலேவாதம்
அடுத்தவியாதியிவைமாறு மருந்துமவிழ்தங்கொள்வீரால்
விடுத்தோமின்னம்நீர்கேளு மிஞ்சும்வியாதிமெல்லியனே. 660

மெல்லியாளேநாயுருவி விரையைத்தேடித்தேனதனில்
அல்லலறவேநீர்குழப்பி யந்திசந்திகொள்வீராய்
வல்லயமூக்குருவேரை வளரும்பசும்பால்தனிற்கொள்ளும்
நல்லதிப்பிலிதான்கூட்டு நறுநெய்யதனைக்கொள்வீரே. 661

கொள்ளுந்தயிலமுழுகிவரக் கூடும்விக்கல்மிகவெடுந்து
துள்ளுஞ்சுவாசங்கடினமென்றால் சுகமாமெண்ணெய்தீர்த்துவிடும்
விள்ளும்வேதுமிகப்பிடிக்க விரும்பும்புகைதானுட்கொள்ள
புள்ளும்விழாவிலேநருக்கிப் பொருந்தமுடிந்துமுகந்துகொள்ளே. 662

குளுந்ததண்ணீர்நெஞ்சுலிடக் குக்கில்புகையைத்தான்குடிக்க
அழுந்துக்காலில்சூடுசுட ஆனநசியம்நாசிலிட
எழுந்துகரும்புதான்திண்ண யிளகுநறுநெய்தான்குடிக்க
விழுந்துவாராயெழுந்துநிற்கும் விக்கல்வியாதிமாறிடுமே. 663

## பிரமேகம் நீர்க்கடுப்புக்கு.

தீராதபிரமேகம் நீர்க்கடுப்பு
 தீருதற்குமருந்துசொல்வேன் செண்பகப்பூ
வார்சேருங்கூவளேவேர் நிலப்பனேவேர்
 வளர்கிழங்குவதிமதுரங் கிராம்புதானுங்
கூர்சேருமிலவமரத்தின் பிசினுங்
 கொண்டுதண்ணீர்நாழி யுரிவிரைவாய்வார்த்து
தார்சேருமுரியவே வடித்துக்காச்சி
 தாழைவீழிச்சார்பிழிந்து தயவாய்க்கொள்ளே. 664

## வே று.

கொள்வீரிந்தச்சாறுதனிற் கூடும்வெல்லந்தான்கரைத்து
உள்ளேயேடுதான்கட்டி யுதவும்பனியிலேவைத்து

விள்ளேவிழுவேதுகுடிக்க விரும்பும்பிரமேகங்கடுப்பு
தள்ளேயிதனையுட்கொள்ளு தணியுஞ்சிவனார்தன்னாணை. 565

ஆலம்விழுதுயிருதூணி யானசெப்புநெருஞ்சியின்வேர்
தாலம்புகழும்நாணலுடன் தரும்பூர்ப்பாதிரியிலையும்
ஏலமிகருமதிமதுர மிளகுமாதுவழம்வேரும்
கோலம்பெறவேயதின்பிஞ்சுங் கொழுந்தும்பூவுமின்கொழுந்தே. 666

கொழுந்தேகொண்டுவரைத்துக்காச்சி குடிக்கிலிதற்குப்பத்தியங்கேள்
எழுந்தபசும்பால்நெய்போட்டு விதுவுங்காய்ச்சிசாய்பொழுதில்
அழுந்துபசும்பால்குடிப்பீராய் யானவெக்கைப்பிரமியம்போம்
விழுந்தயாராமெழுந்திருக்கும் விமலாணைமெய்யிதுவே. 667

கருப்புக்கட்டிபச்சரிசி காணுநறுவசிக்கொழுந்து
பெருக்கவொருபிடிகொண்டு பேணியரைத்துவெண்ணெயிட்டு
சுருக்கமுடனேகளிகிண்டி துகழ்சேரெள்ளுப்பொடிதூவி
விருப்பமுடனேயெண்ணெய்தனில் மிகவேதேய்த்துத்தின்பீரே. 668

தின்னும்போதுபல்கடுப்பு செய்யவூமைக்கடுப்புடனே
உண்ணுஞ்சுக்கிலவூன்மயமும் வுடனேவயிற்றிற்கடுப்புவிடும்
எண்ணும்பிரமேகம்நீரிழிவுயிதுவும்பலதுமிகத்தீரும்
நண்ணும்பெரியமாமுனியும் நவின்றாரிதனைநவின்றாரே. 669

பொன்னாங்காணியிற்கொழுந்து பெரியமாதுவளம்விரையும்
மின்னேபயறுவிலுப்பைப்பூ மேவுங்குருவிக்கரும்புடனே
சொன்னோங்கூட்டிகாய்ச்சிவடித் துலங்குமேவாதியுண்டையரை
நன்றாய்க்குடிக்கநீர்க்கடுப்பு நாடும்பிரமியமாறிடுமே. 670

சங்கம்வேருகரும்புடனே தன்னாமணக்கின்புல்கிழங்கும்
அங்குசொன்னோமுத்தக்காசு ஆலம்விழுதுவதிமதுரம்
பங்கப்படாதசுக்குடனே பாதிரிப்பூதான்கூட்டி
எங்குமுதிக்குங்கரும்புடனே யிவைகளெல்லாஞ்சரிகூட்டே. 671

கூட்டப்பாவிருநாழி குலவுந்தண்ணீரொருநாழி
மீட்டோவார்த்துமூவுழக்காய் மிகவேகாய்ச்சிவடித்தெடுத்து
நாட்டுச்சீனியென்போடு நன்றாய்க்குடிக்கில்நாளேழும்
தீட்டுநீரிற்கடுப்புவிடுஞ் சிவநாரணையுண்மையிதே. 672

சங்கம்வேர்நாயின்பாலில் தனியேகுடிக்கப்பிணிபோகும்
பொங்குமாவின்பாலதனிற் புகழ்சேர்பாலைவேர்குடிக்க

மங்கையரேபசுவின்பாலில் வளருதிப்பிலிவேர்குடியும்
செங்கண்மாலேபசும்பாலில் செய்யுநெருஞ்சிவேர்குடியும். 673

மாலேவிந்தமருந்துகட்கு வளரும்பனவெட்டுடன்கூட்டு
தாலேபச்சைநெல்லிக்காய் தக்கதேத்தாவிரையுடனே
காலேநரிக்கிச்செவ்விளநீர் கடிதாயூறப்போட்டுவைத்து
தூலேயிருத்துதண்ணீரில் தொத்தாங்கரைக்குமருந்துசொல்வேன்.

சொல்வீர்கருப்புக்கட்டியுடன் துய்யகலேயின்கொம்பிழைத்து
நல்வீரரைத்துக்குடிப்பீராய் நாடும்பிரமியம்நீர்கடுப்பு
கல்வீர்கண்டுயோடிவிடுங் கானவுடம்புதேறிவரும்
அல்வீர்சிவனர்தன்னுணே யாரும்பிரமியமாறிடுமே. 675

வாழுமதுரைசுட்டெலும்பு மறுகாற்பாசுதந்தமுமாம்
சூழும்வெள்ளிசிலேயுமாந் தூளாயொக்கபொடிசெய்து
காளும்நதுநெய்தனிற்கொள்ள நல்கடுப்புப்பிரமியம்போம்
கோளுமன்னேதேனுகிக் கொள்ளுஞ்சுக்கிலபிரமியம்போம். 676

பருத்திவிரையிற்பருப்புடனே பகருமென்றுநுனிமஞ்சள்
பெருக்கத்தனியேவெச்சோடு புறகுகாட்டிப்பொடிசெய்து
இருக்குஞ்சட்டிதனிலெண்ணெய் வினிதாவார்த்துக்கோழிமுட்டை
மருக்கோல்சரக்குப்பொடிதூவி வாழாகட்டுவடுப்பேற்றே. 677

பேற்றுதேங்காய்பால்வார்த்து பிறகுதீயாமல்வருத்து
காற்றுபடாமற்காயத்திற் கட்டிவைத்துநாற்கழஞ்சி
பாற்றுதின்னநீர்க்கடுப்பு பகரும்பிரமியங்கிரிசமெல்லாம்
சேற்றுவிதுகளோடிவிடுஞ் சிவனராணையுண்மையிதே. 678

வில்வாதிலேகியம்.

வில்வாதிலேகியந்தன்னே மிக்கமினிதாய்சொல்லக்
சொல்வோமோமதிரிக்கடுகு சீறுக்கிராம்பூதிரிமாலே
மல்வாந்திப்பிலியின்மூலம் வளருங்கோஷடங்கொத்தமல்லி
நல்வாஞ்சீரம்நாகப்பூ நவிலுமிலங்கப்பத்திரியே. 679

நாறுஞ்சரக்குவொருபலமாம் நவிலுங்கொடிவேல்பலமிரண்டு
தேறுமிதனேயிடித்தெடுத்துத் தெளிவாய்ச்சூரணம்பண்ணி
மீறும்வில்வப்பத்திரிவேர் மிகவேபலமுமுப்பதுவாய்
கூறும்படியேவிடுத்தெடுத்துக் கொண்டுதூணிநீர்வாரே. 680

கொண்டே தூணிநீரதனைக் குருணியாகக்காய்ச்சிவடித்
துண்டசர்க்கரைக்கியாழத்திற் பலமுமொக்கவேகரைத்து
சென்டோசெப்பக்காண்டிகொண்டு துழாவிக்காச்சித்தன்பதமாய்
நன்ருய்சூரணப்பொடியை நல்லபாகித்தூழாவுவதே. 681

தூவிக்கிண்டித்தீயாமல் துழாவிநாழிநெய்விட்டு
தாவும்லேகியபதத்திற்குச் சரியாய்தினமுக்கழஞ்கொள்ள
மேவும்பாண்டுரோகமுடன் மிக்கயிளகாமாலைமுதல்
கூவுஞ்சோகைதாபதமந்தக் குலவும்விக்கல்மாறிடுமே. 682

மாறும்பயித்தியவாராது வலமாஞ்சுத்தியும்நன்ருகும்
கூறுமுடம்புவூசல்போம் கொள்ளுமதிசாரமும்போகும்
நாறுமுடம்புமனம்விக்கும் நல்லமெய்யிர்ச்சுரந்தீரும்
தேறுமருந்துதின்பீராய் சிவஞானமாற்றிடுமே. 683

வாதமடக்கிப்பெருநொச்சிமா யிலங்கைகாத்தோடி
சேதமணுகாச்சாணவேர் செய்யரவிர்வேரிலையுடனே
நாதமுள்ளோராயிலிபம் நல்லபட்டைவிராலியின்வேர்
தூதமெருக்கமிலையுடனே துகளுஞ்சிவனார்வேம்பழிஞ்சி. 684

கொள்ளுங்கொத்தான்கொண்ணையின்வேர் கொள்ளுந்திராய்வேர்கோ
வையிலை, கொள்ளும்புங்கவேரிலையாங் கூட்டுந்திலகம்பட்டதனை
விள்ளும்வேலிப்பருத்தியின்வேர் மேவுங்குரிஞ்சிபிளிநடலை
தெள்ளுங்குரோட்டைகிழங்குபண்டி சேருங்கோவைக்கிழங்குடனே.

துள்ளுங்கோவைக்கிழங்கு துகளுமுருங்கைகள்ளியின்வேர்
கள்ளமொதிந்துமொழிமாதே கருதுங்கோவையிலையுடனே
கொள்ளேவெவ்வேரொவ்வொன்று கூட்டும்பலமொன்றரையாக
துள்ளேநொச்சிவேரிலையைத் தூளாயிடித்துக்கூட்டிடுரே. 686

சிரியகுருஞ்சிசெம்மணத்தி சேருங்காட்டுமல்லிகையும்
அரியும்நல்லநல்மிளகு ஆளமயிலின்குருந்தின்வேர்
குரியாமூமத்திலைவேருங் கூறும்விழிகளப்பனைவேர்
பரியும்தன்னுரிவையெல்லாம் பதராதிடித்தோரளவுகொள்ளே. 687

கொள்ளேமுந்தியிடித்துவைத்தக் கூறுமருந்துயிருகூறும்
உள்ளேயிதனையொன்ருக்கி யுதகமரைக்கால்பத்துவிட்டு
துள்ளேவெச்செனவுபண்ணி சொல்லுமேழுநாளூரி
கள்ளேபொதிந்தமொழிமாதே காச்சிமூன்றுகூர்க்கேளே. 688

தேடும்வேப்புமாமணக்குத் தெரிந்தயெண்ணெய்சரிச்சரியாய்
கூடும்படியேயொன்ருக்கிக் குலவுங்கியாழந்தனிலூற்றி
நாடுஞ்சுரக்கிக்கர்க்கடகம் நற்சீரகமுங்கடுக்காயும்
வாடுங்கருஞ்சீர்வசம்புள்ளி வளருமுழுவால்மிளகுசுக்கே. 689

இளகியயிந்துப்பூவு மிலவங்கந்தான்குங்கிலியம்
அளகியசதையின்குப்பை யானகடுகுரோசணேயும்
பளகியபிஞரியுந்தான் பகருஞ்சாதிக்காயுடனே
களிரும்வெளுத்தப்பிசின்கழற்சி கருதும்பருப்புத்தேடீரே. 690

தேடுங்காரம்பூர்வசுவாஞ் செய்யக்கடுகுநேர்வாளம்
கூடும்வபினும்ஒவ்வொன்றைக் கொள்ளுஞ்சரக்கோரார்கழஞ்சி
நாடுஞ்சரக்கெல்லாமிடித்து நல்குங்கியாழந்தனிலிட்டு
கோடுமுதலேயேயொருநாள்வை கொள்ளுமறுநாளரையீரே. 691

அரைத்துக்கரையீர்க்கியாழத்தி லன்பாயேழுநாளூறி
உரைத்துயெண்ணெமிளகுபதம் வுடனேகாய்ச்சிவடித்தெடுத்து
சிரத்திப்பூசிமூன்றுநாள் சென்றபிறகுமுழுகுவீராய்
பெருத்தஎண்ணெய்தின்பீராம் பிடிப்புந்திமிரும்வாதமும்போம். ()

அபானவாயுவின் குணம்.

மங்கைதனக்குத்திருமதலே வயத்திலிருந்துவளர்நாளில்
திங்கள்மூன்றுநாலஞ்சாய் சேருந்திங்களீரஞ்சில்
பொங்குமுகாந்தனில்வரசூ பொருமிப்பரந்துதிரண்டேரும்
அங்குசொன்னேமடிவயிற்றி லடக்குமபானவாய்வதுவே. 693

அடருமாசந்தாகமுடன் யானவெங்காயுள்ளுகொள்ளும்
துடருமோதங்களஞ்சியஞ்சூ துய்யவுள்ளிப்பூடுபத்து
படருமுப்புக்கரைத்தெடுத்துப் பகருஞ்சரக்குத்தனிவார்த்து
தடருமுலேயாய்க்காய்ச்சிறக்கித் தரைத்துமாவாய்கொள்ளீரே. 694

கொள்ளும்பச்சைத்தேனதனில் குலவும்வெருகடிபிரமானம்
உள்ளேகொள்ளுமென்னேர முதாரமதனில்வாய்வகலும்
கள்ளேபொதிந்தமொழிமாதே காஞ்சதண்ணீர்பருமாரும்
எள்ளேயாலுங்குளிந்தநீரை யெடுத்துபாருமாவென்றும். 695

அண்டவாத உப்பலுக்கு.

அண்டவாதபலவாதம் அணலில்வாதமதுதனக்கு
துண்டமதுசேர்நுதலாளே சொன்னேஞ்சித்தாமணக்கெண்ணெய்

கொண்டகழஞ்சியிருநாழி கோதுதள்ளிமணியெடுத்து
செண்டுஞ்சித்தவரைக்கிழங்கு சேனமூலிகொடுவேலி. 696

கொடியமருந்துயரைத்தெடுத்துக் கொள்ளீர்பாக்கினளவாக
கடியகலாம்பூர்கார்வரிசி கருதும்வெளுத்தப்பிசின்வசம்பு
படியில்வளருமெள்ளுள்ளிப் பசுருங்கருஞ்சீர்தேவதாரம்
வடிசேர்சிவந்தசந்தனமும் வமரும்வெளுத்தப்பிரான்தேடேன். 697

தேடாய்சரக்குவோரெண்டு சிறப்பாய்க்கொள்ளீரிருகழஞ்சு
நாடாயரைத்துயெண்ணெய்தனில் நல்குங்கியாழந்தனில்விட்டு
ஈடாயெரித்துமெழுகுபத மிறக்கிக்கரண்டிகாலமேதான்
கோடாமுலையேகொள்வீராய்க் குடிபோமண்டவாதமுமே. 698

வேறு.

வல்லதொருமாவிலங்கை யிலைவேர்பட்டை
வளபலமுமிருதேக்கு வருத்துக்கூட்டு
நல்லதொருகீழ்வேர்தான் பலமேமூன்று
நயமுடையவேலிநற் பருத்தியின்வேர்
சொல்லவேபலமூன்று பெருங்குருந்து
துய்யதொருசிவதையுட னுருவாய்வேரும்
இலலமுருகொடுவேலிக் கரண்டிநொச்சி
இயல்வாதமடக்கிய மூக்கராவேர்தேடே. 699

தேடியவேரோ ரெண்டுபலமுமூன்று
சிதக்கவேகொத்திபிடித் தோணதாக்கி
நாடியதோர்புனல் விட்டுப்பாதியாக
நயமுடனேகாச்சியிதைக் கியாழமாக்கி
கூடியதோர்பெருங்காயந் திப்பிலியும்
குணமுடைய வெண்பிசினிக்கடுகுதானும்
பாடியதோர்வசம்பு சுக்குமிளகுவுள்ளி
பகர்கோஷ்டமரத்தைக் கார்புகாவரிசி. 700

வேறு.

அரியகடுகுரோசனையு மாவாலிலுளுவையுடன்
பிரியுங்கருஞ்சீர்நற்சீரம் போதவெவ்வேரொருபிடியாம்
தெரியுஞ்சரக்கெல்லாமரைத்துச் சேருங்கியாழந்தனில்வார்த்துச்
சரியாய்வேப்பினெண்ணெய்விட்டு தக்கபதமாய்வடியீரே. 701

வடித்தேயெண்ணெய்சிரசில் வைத்துவளருமெய்யில்தான்பூசி
குடிப்பீர்மூன்றுகாசிடைதான் குத்துப்பிரவிச்சுட்டுகுத்து
துடிக்குங்கைகால்முடங்கியதுஞ் சொல்லுஞ்சன்னிபற்கிட்டு
நொடிக்குளிதுகள்தான்தீரும் நுகருமாவிலிங்கையெண்ணெய். 702

வேறு.

திருந்தியதோர்மாவிலிங்கை வேரின்பட்டை
செப்புமொருமரப்பட்டை சித்திரமூலம்
பொருந்தியதோர் முருங்கைவேரிதுகள்நாலும்
பொட்டெனவேவெவ்வேறு பலம்பத்தாக்கி
வரும்படியேதரித்திடித்து மிடாவிற்போட்டு
வாழ்மரைக்கால்நாலுகுண்டு வார்த்தேதண்ணீர்
தகும்படியேகாய்ச்சி யொருமரக்காலாக்கி
தக்கதொருவேப்பெண்ணெய் சரியாம்நாழி. 703

வேறு.

நாழியெண்ணெய்தான்விட்டு நல்லமருந்துகொடுவேலி
தூழிநொச்சியாமுரியுந் துய்யகுதிரைவாலியொடு
வாழுங்கரண்டைசிவதையுடன் வளருமுத்தமோரெண்டு
ஆழும்விளாங்காய்தன்னளவு யரைத்துக்கரைகியாழத்தில். 704

கியாழத்திற்பொன்மெழுகு காச்சிவடித்துக்கோதுதள்ளி
கயாழந்தள்ளித்தான்விட்டுக் கடையின்மருந்துகர்க்கடகம்
வியாழமானவிலவங்கமேவும் வசம்புசதகுப்பை
தயாசுக்குமாஞ்சிலொடுதக்க பச்சைச்சோளமுடன். 705

தக்கதிப்பிலிசிறுதேக்கு சரியாய்மிளகுசித்தரத்தை
தொக்கவிந்துவாலுளுவை சுகமாங்கடுக்காய்குரோசானி
மிக்கவுள்ளிவோரெண்டுமேவுங் கழஞ்சிதான்கொண்டு
வக்கமாகவரைத்தெடுத்து வார்க்குங்கியாழந்தனில்வாரேன். 706

வாராய்நல்லசந்தணந்தான் வழங்கும்பலந்தானென்றுகொள்ளு
சீராய்வேம்புவெள்ளெண்ணெய் சிறக்கவெவ்வோர்சரிசரியாய்
நோய்விட்டுக்காச்சியதை நிதமுமுழுகிசுடற்பூச
தீராய்விதங்கள்பிரமியங்கள் தீருமரணவலிவாதம். 707

வாதசன்னியுட்குத்து வருந்துங்கைகால்முடங்கியதும்
பேதமாகபற்கிட்டுப்பிறக்குந் தொகுதிவாதமுடன்

காதவழிதான்விட்டோடுங் கடியயெண்ணெய்பூசிடுகில்
நாதநாணையுண்மைசொன்னேம் நல்லமாவிலிங்கையெண்ணெய். 708

நல்லசூதஞ்சீனப்பாஙாளும் நரர்தான்திண்ணவதை
வல்லதத்தியமுறிந்துவருத்த முண்டாயுடம்பெங்கும்
அல்லலறவேதான்கட்டியடுத்தே முடங்கிடந்தவர்க்கு
செல்லுமருந்துபரிபாகாஞ் செய்யுங்குணங்கேள்தேன்மொழியே.

மொழியுஞ்சூதம்நாலரையா முன்னம்விராகனிடைதானுல்
பொழியுமியமமுப்பதுவாம் போதப்பணவிடைதானுகும்
தெளியும்பொன்னினரிதாரஞ் சேர்ந்தேபணவிடைபதிமூன்ரும்
களியுங்கருத்தகுங்கிலியங் கனத்தபணவிடையொன்பதுவாம். 710

கனத்தகடுகுபணவிடையேழ் கடியமிளகுபனிரெண்டு
எனத்தவெருக்கங்கரிதானு மிதுவும்விரானிடையரையாம்
தனத்தவீயந்தானுருக்கி தக்கவிதரமதினில்விட்டு
பணத்தவம்மிதனில்வைத்து பாளையிலைச்சார்விட்டரையீர். 711

விட்டேமிளகுபதமரைத்து மிகஃவயேழுவுண்டைசெய்து
தொட்டபுகைதான்விடுமுந்தி துலையாயெட்டுநாளெண்ண
கட்டும்பூசினியினுடகாய்தான் கறிக்குகூட்டியிடு
நட்டமில்லாப்பூசனிக்காய் நல்லசாறுவுச்சியிலே. 712

உச்சியுள்ளங்கால்மட்டு மொக்கத்துவாலைதான்போடும்
வசசேயொன்பதுநாளைக்கு வாகாயடுப்பில்தானிறுத்து
நிச்சையமாய்க்குழிகெல்லி நேராய்புளியம்பொருக்கிட்டு
மெச்சந்தணலையுண்டாக்கி மேவுமுண்டைபாதியிட. 713

பாதியுண்டைதான்போட்டு பகரும்புகையைவிடுவீரே
நீதியுடனேயந்தபடிநேரா யேழுநாள்புகையும்
கோதுசொரியுங்குழலாளே கொள்ளும்பூசினிக்காயை
ஓதும்புளிக்கருணைமுருங்கைவுற்ற வழுதலைக்கத்திரியே. 714

கத்தரிக்காய்புளியரணை கடியகீரைதான்புளியாம்
தித்தந்திராவும்புளிச்சாரம் நேராமோருமீருள்ளி
சுத்தப்படவேதான்கூட்டுந் துய்யநீர்சோருண்பீரே
அத்தநாளையொன்பதுநாளான தண்ணியில்வையும். 715

வையுமேழுநாளைக்கு வாகாய்த்தண்ணீர்தன்னிலேதான்
தொய்யுமெட்டாநாளுடம்பு தேர்த்தமாகவாறிவிடும்
நையுமொன்பதாநாளில் நல்லாமணக்குயெண்ணெய்விடு
பையமுழுகிவருவீராய்ப் பகருமாறுமாதமட்டும். 716

ஆறுமாதம்நல்லெண்ணெ யானகுளமீனுகாது
கூறுந்தாமதான்கக்க கொள்ளீர்பொன்னுங்காணிச்சார்
பூறுமுச்சியுள்ளங்கா லொக்கத்துவாலைதான்போடும்
சேருநாசாமரைக்கொத்து திறமாயுள்ளேகொள்வீரே. 717

உள்ளேசாகந்தான்குடித்து யுறத்தவாட்டுத்தோலதனில்
மெள்ளவெயிலில்தானிருக்க விரும்புமுதராங்கக்கிவிழும்
கொள்ளுமிரண்டுநாள்துவாலை குணமாய்ப்போகுங்குறிப்புடனே
துள்ளுஞ்சாகவுட்கொள்ளச் சொன்னேங்கேளுந்தோகையரே. 718

மண்டைவியாதியின்குணத்தை மானேயின்னந்தான்கேளாய்
கண்டபடியோவிக்கருதிக் காலுஞ்சொரியநோகாது
மூண்டமதிசேர்முகம்நோகு மூளைசுவருமயிர்திரையும்
செண்டே தலைக்குள்ளேதான் சிறுகச்சத்தமாயிருக்கும். 719

இருக்குமுகத்திலேநரம்பு யெதிர்த்தேதெறிக்குமுச்சிடிக்கும்
பெருக்கும்நாவுதான்வரளும் பேசொண்ணாதுதல்கடுக்கும்
தொருக்கும்பிடரிதான்கடுந்து தூயநாசிற்றமர்விழுந்து
பருத்திக்கொட்டைதிரித்தாப்போல் பார்க்கவிழுஞ்சலந்தெரிக்கும்.

விழுமேரெத்தம்நாவாலே மிகவும்நாரிநெஞ்சுகள்நோம்
எழுமேயுடலும்வரண்டுவரு மெங்குஞ்சிருக்ககடுப்புண்டாம்
கொழுமேயிதற்குமருந்திதென்ன கூறக்கேளுங்கோதையரே
கழுமேகருவேல்பட்டையுடன் கையான்தகரைகார்பூளை. 721

காரேபூளைதன்சாறெடுத்துக் கடையின்மருந்துயிலவங்கம்
பேரேயேலமதிமதுரம் பெருகுங்கோஷ்டஞ்செண்பகப்பூ
சேரேயரத்தைசாதிக்காய் சிறந்ததான்றிசிறுதேக்கும்
ஊரேசாஸ்திரவேதிரண்டு முறைக்குநாட்களஞ்சிக்கொள்ளே. 722

கொள்ளேசரக்குதானரைத்துக் கூறுமெண்ணெய்நாழி
உள்ளேகூட்டிக்காச்சியிதை யுச்சிதனிலேவைப்பீராய்
எள்ளேநாசிக்கிரட்சையிட விலைச்சார்கூட்டிதானெரித்து
பிள்ளேநாசிதன்னிலிட பெருகும்வியாதிமாறிடுமே. 723

### கைகாலெரிவுக்கு எண்ணெய்.

சீதேசெங்கழுநீர்சீந்தித் தண்டு சிறக்கவொவ்வோர்பலமிரண்டு
மாதேயிடித்துவிருநாழி வளருந்தண்ணீர் தனிற்காய்ச்சி
பேதைநறுநெய்நல்லெண்ணெய் பெருகுங்கியாழந்தனிவிட்டு
கோதேமதுரங்கோஷ்டமொடு குலவுமாஞ்சில்வில்வங்கம். 724

குலவுமேலங்குரோசிலையுங் கொடியமஞ்சள்நறும்பிசினும்
இலகுநெல்லிசந்தனமும் விலாமிச்சைவேரிருவேலி
அலருமிவையோரிருகழஞ்சி யரைத்துவடித்தெடுத்து
உலகுள்ளோர்கள் தான்பொருந்தி யுள்ளுங்கழஞ்சிகொள்வீரே. 725

கையாந்தகரையொடு கருதுமிளநீராவின்பால்
மெய்யாஞ்சீந்திற்றண்டுடனே மேவுஞ்சாறுவிருநாழி
தொய்யாயெண்ணெயிருநாழி சுகமாங்கோஷ்டங்கைச்சோலம்
பொய்யாமதுரஞ்சந்தனமும் பொருந்துநாகம்பூவேலம். 726

பொருந்துங்கிராம்புசெண்பகப்பூ போதவளருமுத்தமுடன்
திருந்துமேதாரைவளையுஞ் சேரவரைத்துக்கரைந்துவடித்
தருந்தான்முழுகிவருவீராய் தலையில்வாச்சிகண்ணேவு
இருந்தயெரிப்பெல்லாந்தீரும் ரெட்டிணுதியெண்ணெயிதே. 727

### துத்தமை கண்ணுக்குமை.

துத்தந்துரிசிவெங்கலத்திற் றுய்யகடுக்காயுப்புடனே
உத்ததிப்பிலிசெம்மிளம்பாக்குதவு மருந்துவெழுகழஞ்சு
தத்தேசிப்பழஞ்சாற்றால் தனியேயேழுமருந்தரைத்து
மெத்தச்சீவிதனித்தடவி விரும்புங்நிழலில்தானுலர்த்தே. 728

விரும்பும்புளிதான்விளாத்தியிலை மேவும்வெப்பூப்பிவலிதான்
பொருந்துங்கையான்சாரணையும் போதமுருக்குத்தேள்கொடுக்கு
சுருங்குமிசங்குஇவ்விலைகள் சுருக்காய்வெவ்வேர்தான்கூட்டி
திருந்ததுவைத்துவெவ்வேறாய் சிலையதனிலூட்டீரே. 729

### வேறு.

ஊட்டியசிலைதன்னை யுலர்த்தியேதிரிதிரித்து
தாட்டிமையாகமையுஞ் சத்துடன்பத்திவச்சூக்
கூட்டியேபசுவெண்ணெயில் குழைத்துநீர்சிமிளிற்சேர்த்து
நாட்டினில்விழிதன்நோய்க்கு நலம்பெறப்போடுவீரே. 730

போடுவீர்துத்தந்தீமைபுரி கண்ணிலிடமைத்தடிப்பு
ஓடும்நீரிற்பாச்சலுட னுதவும்படலமாணிப்பூ
கோடுமுலையேபுனுவெட்டுக் கொள்ளும்புகைச்சல்காசமெல்லாம்
வாடுமறுநாட்சென்றேபிறகு வருந்துமந்தரகாசமிதே. 731

வேறு.

மந்தரகாசம் மகிழ்பித்தகாசம்
அந்தரநீலகாசம் அவிசுக்கிலகாசம்
குந்தமும்விழிகள் குருடுமாறுமேன்
அந்தமாமுனிவ ரருள்புரிசெய்தநதே. 732

வேறு.

சேமத்தாவியபூப்படலத் திமிரக்காசமுவைதனக்கு
ஆமைத்தோடுமுதளைபல் லதனிற்பற்றிக்கொம்புடனே
சாமைமுயர்கோடிலைப்பல்லுஞ் சங்குசுட்டநீறுடனே
தீமைபுரியாயாளிபிச்சு திருந்தசெங்கத்தாரிபட்டை. 733

நாமத்தாகியவெள்ளிபுலி நல்லசேற்கள்செஞ்சலும்பூ
வாமத்தாகியதேத்தாங்கொட்டை வளறுத்துத்தந்துத்துடனே
தேமத்தாளிபகைப்புளிகள் தியங்கும்நிம்பச்சாற்றுலே
சேமத்தரைத்தவுண்டைதனைச் செலுத்தீர்காடித்தெளிவோடே.

மானேகுழந்தையதுதனக்கு வாளுங்கனத்திற்சுரமுண்டாம்
தேனேநாக்குத்தானுலர்ந்து செய்யுங்குணங்கேள்நீர்வாங்கும்
தானேமுனிவர்தங்களுக்குச் சரீரமதனில்பிணியதனைக்
கோனேபோற்றியுரைத்தோமே கூறுங்கேளுங்கோதையரே. 735

கூறுஞ்சிலக்கண்மதுதனக்கு குளிருங்கைகால்வயிரழியும்
ஊறுமுடம்புதான்சாயு மூத்தயரைக்குமேலாக
வேறுதரகமிகவுண்டா மிகுந்தேவருத்தமிகுதியாம்
ஆறுங்கரித்தசிவனாணை யானகுணங்களுரைத்தோமே. 736

உரைத்தோம்ரெத்தக்கணமதுக்கு வொக்கவயிற்றிலனலுண்டாம்
திரைந்தநேத்திரவாய்வுசேர்ந்து தீராச்சூடுமிகவுண்டாம்
வரைத்தநாக்குத்தான்பூற்கும் வயிறுகழியுங்கனவட்டமிடும்
புரைத்தேவயிறுதான்கடுத்து போதரெத்தந்தான்கழியும். 737

சுழிக்குங்கண்கால்தான்குளிருஞ் சுழியச்சுழிய தான்வாங்கும்
வழிக்குநாக்குபூத்திருக்கும் வயிறுசுழியும்வட்டமிடும்
கொழிக்குங்குழந்தைதங்களுக்குக் கூறுங்குணங்கள்குணமாக
தெளிக்குஞ்சிவனார்தன்னாணை சொன்னேன்குணங்களிதுவாமே.

வயிறுபோகும்வாயாலெடுக்கும் வயிறுபேதமாய்நிற்கும்
வயிறுவலிக்குங்கைகால் வந்தபோராமல்வலிக்கும்
வயிறுவலித்துத்துணுக்கிட்டு வந்துமுழுதுகுகால்கைகள்
வயிறுபோகுங்கைகால்கள் வளைத்தவில்லுபோலாமே. 739

வில்லுபோலேவலியுண்டா மிகவேகைகால்குளுந்திருக்கும்
பல்லுக்கிட்டுஞ்சூடெழும்பும் பாதிநேரங்குளிர்ந்திருக்கும்
சொல்லுமூக்குகண்ணதுக்கு சேர்ந்தவுடம்புநான்காயும்
வல்லமூக்குமுண்டாகு மஞ்சள்போலேறியிரங்கும். 740

அக்காற்றுக்குவாய்புண்ணு மளகாம்நாக்குப்பூத்திருக்கும்
மொக்கவயிற்றிலனலுண்டா முடல்கள்முழுதுஞ்சுரமுண்டா
மிக்குமிந்தவியாதிகட்கு மீளும்படியேமருந்துசெய்யில்
நிக்கும்படியேமுனிவோரும் நிகழ்த்தியுரைத்தாருலகோர்க்கே. 741

கோவையதுவேர்முசுமுசுக்கை கொள்ளுமம்மான்பச்சரிசி
தாவுபடகம்வல்லாரை தகரைத்துத்திபழம்பாசி
நூவும்வெள்ளைக்காக்கணம்வேர்சொன்னேன்கருவேல்பட்டையுடன்
காவுவசம்புவாய்விளங்கங் கடுகுரோசனைசித்தரத்தை. 742

சித்தமகிழுங்கருஞ்சீரஞ் செங்கத்தாரிபேரரத்தை
ஒத்தக்கருவாய்ப்பட்டையுட னுள்ளிப்பூடுமதிவிடையம்
மெத்தக்காட்டுச்சீரகமு மேவுங்கம்பிபிசினுடனே
பத்துமோதமொவ்வொன்று பலந்தான்காலேகொள்வீரே. 743

பலஞ்சேர்வோரிலதாமரையும் படகுஞ்சறியபுள்ளடியும்
நலஞ்சேர்பலந்தானேரெண்டு நல்லவெள்வேல்கொண்ணையுடன்
பிலஞ்சேர்கொத்தமல்லியுடன் பேணிப்பலந்தானரைகொள்ளும்
குலஞ்சேர்சாதிக்காயுடனே கூட்டுங்களும்பூர்வசுவாசே. 744

கூட்டுஞ்சரக்குவிராகனிடை கொள்ளீர்காலந்தானாகும்
நாட்டில்வளருஞ்செண்பகப்பூ நல்லதிப்பிலிமாசக்காய்
பீட்டும்விராகனிடையொன்று மிகவேயிடித்துத்தூள்செய்ய
காட்டுங்கற்பூரஞ்சேர்த்துக் கடுக்காய்போட்டுத்தெளியவையே. 745

தெளியுந்தண்ணீரொருகாண்டி சேரும்படியாமணக்கெண்ணெய்
பொளியுஞ்சாக்குளண்ணெய்தனில் போதவிட்டுக்காய்ச்சியதை
ஒளியுமொருதுட்டிடைகொடுத்து வுயிர்மேலிலுந்தான்பூசிவா
அளியும்வியாதிகடினமென்று லதிகமாகக்கொள்வீரே. 746

அதிகமானகணமஞ்சு மக்கரமானவியாதிகளும்
மதிசேர்குடலில்கில்லாது மாந்தமறுமேவியாதியும்போம்
பதிசேருலகோர்தங்களுக்குப் பகர்ந்தோம்புளியைப்பிளிப்பாகா
துதிசேர்கிரந்திகூடியதோர் சொன்னேமுறைமையாகாதே. 747

பித்தத்தில்வெப்புக்கொள்ளில் பெருத்திடுங்குளிர்ச்சிதானும்
ஒத்துத்தவுதிரநோவு மூவாந்தியுட்கழிச்சல்வீக்கம்
மெத்துத்தசுரங்கள்நீர்க ளவையிடவேகமுண்டாம்
கைத்துத்தபித்தம்வந்து காந்துபின்பட்டக்காலே. 748

நீளேகின்றவாய்வுகள் கிளந்துமேலேநோக்கிடுதல்
நாளேநல்கிமிளந்துநின்று நன்றாய்மேலேநின்றேற
தாளேவிங்காதிதுதண்ணீர் தக்கமருந்துமிதுவாகும்
மீளேவததிண்ணம் விரைந்துமருந்துசெயலாமே. 749

கண்ணேமுகங்கள்வெளுப்பிட்டுக் காலோடுதிரம்வீக்கமுமாம்
தண்ணீர்தாகமிகவுண்டாய்த் தாகித்தாசுமொருத்துடனே
விண்ணேசுழன்றுமிடுக்கத்து மிகுந்தேமலமுமடைபடுத்தில்
எண்மூதிவரையொன்றாக விதுவுமரணமென்றறியே. 750

வே று.

நெஞ்சினிலடைத்துவாந்தி நின்றுநின்றெடுத்துக்காட்டி
பஞ்சுபோல்நாவுங்கண்ணும் பாண்டமும்வெளுத்துக்காலும்
அஞ்சவேவீக்கமுட்டு மடுத்தடுத்துளதேயாகில்
கெஞ்சிதுமலமுந்தீயிற் சேடிதுகாலந்தானே. 551

வயிற்றுக்கடுப்புக்கு.

நச்சீரகத்தைவைத்தோட்டில் நயந்திருந்துபுடமிட்டு
உத்தேயிடித்துத்தூளதுசெய் துறவேசீனிபேழ்கொண்டு
நத்தேமணக்கும்நறுநெய்யில் நயந்தேயளாவியருந்திடுகில்
பத்தாவயிற்றுக்கடுப்பதுவும் பறந்தேபோகுந்திண்ணமிதே. 752

### சுவாசகாசக் குளிகை.

இருதாங்கெந்தகம்வெண்கார மெண்ணுநாவிமனேசிலேயும்
மருவுந்தாரம்பற்படகம் வண்மைத்திப்பிலியிதுசமனாய்
ஒருமைநொச்சிசுண்டங்காலி யோங்குமாடாதோடையிலே
பெருகுஞ்சாரேழ்நாள்வார்த்து பின்னும்பயரளவுண்டைசெய்தே. 753

செய்தவுண்டைதேனெய்யில் சிறந்தசர்க்கரைதனிற்கொள்ள
அய்யங்கிளையாச்சுவாதம் பத்துமானவிளையிருமலஞ்சும்
வெய்யகுன்மமிருவதுடன் மிகுந்தசுவாதமனத்தையெல்லாம்
உய்யும்வேறிடமில்லையென்று வோடிப்போகுங்கண்டாயே. 754

### உள்குத்துக்கு.

இதாஞ்சுக்குவெண்கார மியல்சேர்கடுகுதிப்பிலியும்
சிதாச்சினக்காரமுடன் சேர்ந்தமிளகுபெருங்காயம்
பதாழாத்தைக்கருஞ்சீரகம் பகர்கொண்டிலையின்பழச்சாறு
விதமாய்விட்டுவரைத்தெடுத்து மிக்கதூதுவளங்காய்போல். 755

தூதுவளங்காய்பிரமாணந் துய்யவுண்டைதான்செய்து
மாதேயிளவெந்நீரதனில் வருத்திக்குடிக்கக்குத்துவிடும்
கோதேகொடுவேலரிசியுடன் கூடியடித்துப்புட்டாக்கி
போதேபசும்பால்தான்குடித்துப் புட்டுதிண்ணப்போகுத்தே. 756

கையாந்தகரையிருநாழி கருதுங்குமரிமுன்னாழி
மெய்யாரெண்ணெயுழக்கு மிக்கஆவின்பால்நாழி
பொய்யாமிதரமீராறு போதிவடித்துச்சிரம்பூசில்
வெய்யாவந்தவுடகுத்து மிக்ககாசம்வெளியாமே. 757

### இரத்த குன்மத்தின் குணம்.

கெர்ப்பந்தரிக்குந்தலத்தில் கேளும்செளிம்புமமூர்தமுமாம்
அர்ப்புதானுமூன்றாகி யாகத்திரண்டுகட்டுண்டு
தர்ப்பாமாதந்தான்தோறுந் தலையவமுக்குத்தான்மாறி
இப்போபிள்ளைக்குண்டான வியம்புங்குணங்கள்காண்பிக்கும். 758

காணும்முலையில்பாலுண்டாங் கனத்தேவயிற்றில்மயிரொழுக்கும்
பேணுமுலைக்கண்தான்கறுத்து பிறகுவயிறுதான்வீங்கும்
தோணுமுதிரந்திரண்டுமேதான் சுகமாம்பிள்ளைபோலிருக்கும்
காணும்பெரியவயித்தியர்கள் நன்றாயறிந்துசெப்புகவே. 759

செப்புந்திங்கள்பத்தானல் சேரும்பிள்ளையல்லவென்று
வைப்பும்புகழுமிரத்தகுன்மம் மாறும்படிக்குமருந்துசெய்யும்
நப்பும்பழையவரிசிதனை நன்றாயெடுத்துச்சோராக்கி
செப்புலுள்ளிதான்பொரித்து சிறந்தநெய்சோருண்பீரே. 760

கடுக்காய்நெல்லிதான்றிக்காய் கனத்தமிளகுதிப்பிலியும்
முடுக்காய்சுக்குளாவரிசி முதியகொடுவேல்கொத்தமலி
எடுக்குஞ்சாக்குசெவ்விய மிசைந்தகழஞ்சிமூன்றாக்கி
தொடுக்கும்பசும்பால்வார்த்தரைத்து துய்யநெய்யும்பசும்பாலும். 761

பாலும்நெய்யுந்தான்விட்டுப் பதத்தில்வடித்துவுள்ளேதான்
காலமந்திதினமானங் காசினிடைதான்மூன்றுகொள்ள
மேலுமிரத்தகுன்மமது மிகுந்தேமாறியோடிவிடும்
மாலமுண்டகண்டர்திரு வாணையிதுதானறிவீரே. 762

அரியுமிதற்குப்பத்தியங்க ளானகாடைகவுதாரி
வெரிமான்பலவாய்முயலுடும்பு மிக்ககுருவியிறைச்சியுமாம்
கரிபூசனியின்வெள்ளரியின் கடியமஞ்சுதுளங்காய்
நெறியாம்பிரண்டைச்சாறணையும் நீண்டசுரையின்கொழுந்தாமே. 763

பித்தகுன்மத்தின்குணங்கேளும் பெருக்கயாழத்திதாகமுண்டாம்
தத்தியெடுக்குமிகச்சேப்பந் தருகாவாயுங்கசப்புமுண்டாய்
உத்தேவாந்தியுண்டாகு மோங்குநெருப்புவெயில்கண்டால்
சித்தமுடனேயுடல்பொருந்தி செய்யசிறுநீர்சிவந்திருக்கும். 764

இருக்கும்பித்தகுன்மமது யீளையிருமலுண்டாகும்
பெருக்குமருந்துகெந்தகமும் பேணுமீதாமரைப்பொடியும்
சுருக்கமுடனேகளஞ்சுகொண்டு துய்யகுமரிசாற்றரைத்து
பருக்கபற்பமாவாக்கி பையவெயிலில்வைப்பீரே. 765

வைத்தபிறகுபுகையெழுப்பில் வாகாய்பதமென்றேயறிந்து
உத்தேயெடுத்துவைத்துவதை யொருநாளொன்றில்வெருகடிகொள்
பித்தபாண்டுரூபமுடன் பிளித்தேக்கிட்டும்பீலிகையும்
மத்துங்குன்மங்குடல்பிரட்டு மாறுஞ்சிவனார்தன்னாணை. 766

(வேறு.) கவுசையின் குணம்.

காலுடன்கையும்வற்றி கனத்திடும்வயிறுதானும்
மேலுடல்விளங்குமாகில் விளைந்திடுங்கவுசைதானே

மூலமாமகோதாமு முற்றிடுக்திங்கள்மூன்றில்
ஆலமாம்வியாதிசொன்னே மாழியுஞ்சங்குபோல. 767

ஆழியிற்சங்குபோல யடிகாலுந்தான்வீங்கும்
நீழுடவீர்த்திருகி நெருங்கியேமலங்கள்சாரி
கோளிடுபருவையாராய்க் கொழுந்திடுந்திங்களாகில்
நாளினிநாட்குநாளு நல்வினைதானுங்காணே. 768

வினையுமேகவிதையுண்டா மேவியமாந்தரெல்லாம்
புளகியதிங்கள்மூன்றில் பையவேமானமாகும்
அளகியதோள்முழங்கை யத்துடன்வந்துநிற்கும்
ஒளிசெரிகண்ணும்நீல முடம்பெலாஞ்சாசாக்கும் 769

உடம்பெல்லாம்வில்லுபோல வொக்கவேநிமிர்ந்துகொள்ளும்
தடம்பயில்முனைகிமாந்தம் மைபோவினிக்குமேனம்
திடம்பெறும்குணங்கள்தன்னைத் தெரிதமிழ்தன்னுலாய்ந்து
நடம்பெருங்கவுசையாது நற்குணமுரைக்கலுற்றேன். 770

ஓடுவக்கு எண்ணெய்.

காண்டைபுங்குநீர்ப்பூலாக் கடியபொன்னுவிரைவேறும்
நீண்டதுரிசுகடலாஞ்சி நிறமாஞ்சாயவேருடனே
பூண்டவேழிறுளகுநல்லொதி பொருந்துவேர்களொருசரியாய்
கூண்டகைப்புவசம்புள்ளி கொள்ளுவாழுலுவாகளிப்பாக்கு. 771

பாக்குங்கடுக்காயாசமோதம் பகர்திப்பிலியுஞ்சவ்வள்ளி
காக்குந்துருசுவெம்பாடல் கருதுந்தூரமில்வாங்கும்
ஏக்குமேலங்கொத்தமல்லி யிசைவேர்சிவந்தசந்தணமும்
தாக்குமிவைகளொருநிறைபி விதக்கயெண்ணெய்காய்ச்சியிடேன்.

துடரிவேரும்பலம்பத்து துய்யகுருவியீச்சன்வேர்
படருங்கிளுவைகொண்ணை வொதிபட்டைதானமுக்குராவேர்
அடருஞ்சுக்குக்கைப்புடனே யானவேம்பாடல்வேரும்
மடல்சேர்நிரையில்தான்கூட்டி வளர்நல்லெண்ணெய்தனிக்காச்சே.

ஓடுவுபுண்ணுக்கு மருந்து.

காச்சிவடித்துயெடுத்தபின்பு களவுபார்த்துப்பின்னதனில்
கூச்சமறவேபோடுவீராய் கொடியவொடுவும்புண்ணுறும்

வாச்சதீயிலூட்டியெண்ணெய் வளர்புண்ணிதினில்மாறிவைக்க
பேச்சிமுலையாயமுதுண்ணும் பெருமாளாணைமாறிடுமே. 774

### சன்னி பதின்மூன்றுக்கும் மேற்பூசுந் தயிலம்.

சுக்குமிளகுதிப்பிலியுந் துய்யகருஞ்சீர்புகாரரிசி
சுக்குமாத்தைமாமஞ்சள் கடியகுப்பைசோமனதி
புக்குங்கத்தூரியின்மஞ்சள் புகழுங்கொடுவேல்வசம்புள்ளி
நக்குமுன்னையமுக்கூரால் நல்லசாரணைதன்வேரே. 775

வேர்சேர்மிளகுகரணையின்வேர் மிகுத்தவாம்பற்கிழங்குடனே
பூர்சேர்தண்டையுடன்குலவும் பெரியமருதத்தின்வேரும்
நேர்சேர்சரக்குவொருநிறையாய் நிறுத்தேகண்டுவரைத்தெடுத்து
பரர்சேர்நாழியெண்ணெய்விட்டு பையமெழுகுபதமிறக்கே. 776

இறக்கியுடலமுழுதுமெங்கு மினியவுடம்பிற்பூசுவீராய்
பறக்குஞ்சன்னிபிறவீச்சு பகருங்கபோலசன்னியுடன்
மிறைக்குஞ்சன்னியுட்குத்து மீளாவியாதிதீருமென
மறைக்குமுரியமாமுனியும் வகுத்ததிதுவென்றெண்ணுவரே. 777

### வாயுவுகளுக்கு பலசரக் கேலாதியுண்டை.

கோட்டந்திப்பிலியரிதாரங் குலவுமிதரம்வெண்காரம்
மேட்டில்வளருங்கெந்தகமு மேவுநாபிவாய்விளங்கம்
நாட்டில்வளருமக்காரம் நல்லதான்றிமஞ்ஞசிலையும்
கூட்டுமிளகுசாதிக்காய் கொடியகிராம்புவசுவாசி. 778

வாசியேலமிலவங்கம் மஞ்சிட்டிருவிகைச்சோலம்
பேசுந்திப்பிலிமூலமஞ்சள் பெருகுமிலிங்கமுடனரத்தை
கூசும்பொன்னினரிதாரங் குலவுங்கருஞ்சீர்நர்ச்சீரம்
வரசம்பெருநல்லுலுவாவும் வளருமோதம்வாலுளுவை. 779

வளருங்கார்பூகாரரிசி மாஞ்சில்வெளுத்தப்பிசினுடனே
சளருமுலையேவோரிரண்டு சரிசேர்நிறையிற்களஞ்சிகொள்ளும்
பழகும்வாளங்களஞ்சிரெண்டு பையக்குமரிசாற்றாலே
அழகுபெறவேயரைத்துண்டை யன்பாய்திரட்டிக்கொள்வீரே. 780

கொள்ளும்நொச்சியிலைச்சாற்றில் குத்திவடுத்தபேர்களுக்கு
மெள்ளச்சுக்குதண்ணீரில் விரும்பும்வாய்வுக்கிடுவீரே.

துள்ளும்வயிறுஷிரிச்சிக்கில் துய்யதண்ணீர்தான்கொள்ளும்
தள்ளும்படிவீரெண்ணுதே தணியுத்திருமால்தன்னுணே. 781

கபோலஜன்னிக்குத் தயிலம்.

எருக்கன்வேர்சாறுநாழி யெலுமிச்சம்பழச்சார்நாழி
முருங்கைப்பட்டைச்சார்நாழி முதிர்ந்ததேங்காய்ப்பால்நாழி
விரும்புங்கிராம்புவசுவாசி மேவுவள்ளிச்சாதிக்காய்
சுரும்புமேலலவுங்கமது துய்யநற்சிரகமோதம். 782

துய்யமதுரந்திப்பிலிமூலந் தொகுத்தவமுக்கூர்திப்பிலியும்
நையுஞ்சாறுகொண்டதிலே நாழியெண்ணெய்தான்விட்டு
பையக்கரைத்துவடித்தெடுத்துப் பகருஞ்சிரசில்பூசுவீராய்
மையப்புரியுங்குழலாரே மாருங்கபோலகோக்காடே. 783

தந்தவுதிர வியாதிக்கு வேது.

ஊண்டவலிக்கும்பல்லடியா முதிரஞ்சாய்க்குங்குணங்கண்டால்
தாண்டிக்காயுங்கடகசிங்கித் தக்கபுள்ளிப்பெருங்காயம்
தோண்டவரைத்துவேப்பெண்ணெய் சுருக்காய்க்குடிப்பீருள்ளுக்கு
காண்டநார்த்தமிலையதனைக் காடியதனில்வேதுயிடேன். 784

கண்டவியாதிக்கு ஆக்கிராணப்புகை.

கண்ணேவலிக்குந்தான்சிவக்கும் கனக்கவுடம்புதான்காயும்
நண்ணேசோமனுதியுள்ளி நல்லயெண்ணெய்நுணுப்பட்டை
விண்ணேபுரக்கவேயரைத்து வெந்துமெழுகுபதம்வடித்து
கண்ணேநாசிதலையிலிட கடியமிளகுபுகைகாட்டே. 785

வயிறுபிடுங்கும்வலியெடுக்கும் வந்தேயிரத்தந்தான்சொரியும்
வயிறுபொருமுங்கீழ்வயிறு வாகாய்த்தொப்புள்தான்வீங்கும்
வயிறுமறிந்துநோமிதற்கு மருந்துகிராம்பூர்பெருங்காயம்
வயிறுசுக்குவுள்ளிசுட்டு வாகாயரைத்துத்தேங்காய்ப்பால். 786

தேங்காய்ப்பாலிலுட்கொள்ள தீருங்காட்டேரிபில்லி
பாங்காய்க்கருங்கம்பிளிமயிரும் பகருமூஞ்சூர்மாட்டுக்குழம்பு
தாங்காமலேபுகைகாட்டிச் சத்துமிதனைப்புகையிலிட
நீங்காவியாதியெல்லாந்தான் நில்லாதூரமோடிடுமே. 787

### கண்டவியாதிக்குத் தயிலம்.

மண்டைக்காதுவலியெடுக்கும் வாகாய்க்காதிலெழுச்சியுண்டாம்
பண்டுசீழுந்தான்விழுந்து பகர்மாங்கிஷமும்புறப்பட்டு
கண்டோங்கோழிக்குஞ்சதுபோல் காதினுலேபுறப்பட்டு
அண்டுசொன்னேம்விழுமென்று மடுத்தமருந்துமுறைத்தோமே. 788

உரைத்தாரஞ்சுயெண்ணெயுட னுத்தகாசாயெண்ணெயதும்
பெருத்தகாயங்கெந்தகமும் பேணுங்கிராம்பூநோ்வாளம்
வருத்தமானவரிதாம் வசம்புதுரிசுமனேசிலையும்
திருத்தும்வேப்பம்பிசின்கூட்டிச் சேரவரைத்துவிடநாகம். 789

சேரும்வெள்ளாட்டியினுடைய சிதறுங்கோமியத்திலப்பா
காரும்வெடியினுப்புடனே கருதிக்கூட்டிபதத்தெரிந்து
சீருஞ்சிரசில்தான்தேய்த்துச் செய்யகாதிலூறவிட்டுப்
பாருநாலுநனைத்துபதம் பாங்காய்ப்பண்ணிக்கொள்வீரே. 790

பிடரிநோயுந்தலைவலிக்கும் பின்னும்வயிறுதான்பெறுகும்
நடைசேர்பில்லிகுணமதுக்கு நாடுமருந்துநீகேளாய்
கொடிசேர்சிந்திற்கிழங்குடனே கூறுமுள்ளிப்பெருங்காயம்
வடிவுசேருந்தான்றியுடன் வலம்புரிக்காய்நீரரைத்து. 791

அரைத்துக்கரைத்துப்பசும்பாலி லன்பாயேழுநாள்குடியும்
உரைத்தகோருமயிருடனே யுதவுமுட்டையின்கோதும்
திருத்தமாகப்புகைகாட்டத் தீராநடையின்பில்லியது
வருத்தமாகவோடிவிடு மாயோனாணையுண்மையிதே. 792

நீரின்முள்ளிதண்டுடனே நீண்டயிலையுமொருபிடியாம்
பாருங்கடுக்காய்மிளகுடனே பாக்குமிருப்புக்கிட்டமுடன்
சீரும்பெறவேயரைப்பலங்கேள் செய்யசுக்குமொருபிடியாம்
காருந்தண்ணீர்நாலொன்றாய்க் காய்ச்சிக்கொடுக்கக்குணமாமே. 793

சாதிக்காய்கலாம்பூர்வசுவாசி கருவேர்க்கொம்புமிளகுடனே
நீதிக்கடுக்காயமோதம் நிறமாந்திப்பிலிநற்சீரகம்
ஈதுவெல்லாமொருநிறைகொண் டிடித்துச்சீலைவடிகட்டி
கோதுபிரண்டைதானிடித்துக் கூட்டும்பற்பமொன்றுக்கே. 794

கூட்டும்பற்பந்தன்னையினிக் கொள்ளுந்தானுமேயருந்த
மீட்டுமருந்துவதுகொள்ளில் வேருகடியினளவாகும்

நாட்டுமூல்க்கடுப்புடனே நல்லகழிச்சலிவைமாறும்
தீட்டுஞ்சிவனுர்தன்னுணை திண்ணமிதுதான்செப்பினேமே. 795

மூலவாய்வுகழிச்சலுக்கு முந்துங்கிராம்பூர்வசவாசி
தாலம்வீழுமதிவிடையஞ் சாதிக்காய்நர்ச்சீரகமும்
கோலவைத்தித்திப்பிலியுங் குணமாங்கஞ்சாவபின்மருந்து
சீலம்பெறவேயோரொன்று சேருங்களஞ்சியொன்றுமே. 796

ஒன்றுமெடுத்துவிளம்பதமா யோட்டில்வறுத்துப்பொடிபண்ணி
நன்றும்வெருகின்பிடியளவு நாளேதின்றுவறுவீராய்
அன்றேபோகுங்கிராணிமுத லகுவைக்கட்டித்தான்றீரும்
மன்றோரறியமூலவாய்வு வளருங்கழிச்சல்மாறிடுமே. 797

மானேசர்வகுன்மத்திற்கும் வளருமிரதம்பலம்பத்து
தேனேசிலேயும்பலமஞ்சு செய்யவிலிங்கம்பலம்நாலு
தானேகெந்தம்பலமாறு தயவாய்நாபிபலமெட்டு
சுானேயப்பிரம்பலம்பத்து கருதுந்துத்தம்பலமாறு. 798

ஆறுந்துரிசிபலமஞ்சு அடுத்தபொய்த்தலேகையாந்தகரை
நாறுஞ்சரகம்வார்த்தரைத்து நாலுநாளுந்தப்பாமல்
மீறுஞ்செம்புவட்டிற்பூசி மிட்டகத்தில்வேகவைத்து
கூறும்பற்பந்திண்ணுவகை கொள்ளுமிரதம்பலமஞ்சே. 799

பதமாங்கூகைநீருடனே பகரும்பலந்தானெட்டுக்கொள்
ஸிதமாமீயம்பலமஞ்சு மின்னங்காரீயம்பலமஞ்சு
சதமாங்காந்தம்பலமஞ்சு தங்கவாலம்வேர்நறுக்கி
கதமாங்குழிக்கல்லிலரைத்துக் கனத்தசெம்புவட்டில்பூசே. 800

பூசிவைத்துத்தின்னும்படி புகழுமிஞ்சிச்சாற்றிடவும்
வீசுமங்கெய்தனிற்கொள்ள மிகுந்தவலிக்குப்பர்ப்பமாய்க்கொள்
நீசுமிந்தபர்ப்பமதை நிறையாய்க்குன்றித்தானருந்த
கூசவேண்டாம்பற்பமதைக் குன்றுபொருக்கத்தின்பீரே. 801

தின்பீரந்தபற்பமதைத் திரண்டுவரக்கண்டால்நெய்வடிக்க
முன்பேகூவிளபாதரிமுன்னே முகரும்பெரியவாகையின்வேர்
அன்பாய்சிறியவழுதுணைவேர் யானைநெருஞ்சிமாவிலங்கை
நன்போம்போசித்தமதில் நல்லகொடுவேல்வேர்தேடே. 802

தேடுங்கோட்டந்திப்பிலியுந் தீட்டுமத்தித்திப்பிலியுங்
கோடுமுழுவாஞ்சதகுப்பைக் கோடும்வெட்பால்விளாவரிசி
தாடுமதுரம்நற்சீரகம் நல்லவாளுவுளுவையுடன்
ஓடும்வச்சார்புகாரரிசி யோதுங்கிராம்பூர்சாதிக்காய். 803

நல்லமாஞ்சில்நாகப்பூ நலமாங்களஞ்சிநெய்குறுணி
நல்லபசும்பால்முக்குறுணி வாகாய்ப்பாலிலேயரைத்து
அல்லும்பகலுமுண்பீராய் அரியகடுப்புத்தானகலும்
நில்லம்பற்பகந்தின்றுவந்தால் நேராய்நெய்யையருந்துவதே. 804

செவ்வள்ளிகாந்தங்கொத்தமல்லி சேர்ந்தக்கன்னார்க்கடகம்
கொவ்வையிதழாயமுக்கூராக் கூறுங்கருஞ்சீரருவியுடன்
கவ்வைமோரிலிருவிதன்னைக் கடுகவூரவேகவைத்து
வெவ்வேரரைத்துநேர்வாள மிகவேசுத்திபண்ணுவீரே. 805

பண்ணும்வாளங்கழஞ்சியது பதினெட்டாகக்கொண்டதுவும்
எண்ணுங்கொமட்டிக்காய்தன்னை யிரண்டாய்வெட்டிக்கொண்டபின்பு
நண்ணும்பெரியகொடிக்கள்ளி நல்லபட்டையுடன்போட்டு
திண்ணமாகவேயவித்துத் துய்யவாமணக்கெண்ணெயெடேன். ()

எடுத்தயெண்ணெயுடன்விட்டு யிதுவுங்குழம்புப்பதமிறக்கி
தொடுத்தயெண்ணெய்களஞ்சிதின்னசுகமாய்வென்னீர்தான்கொள்ள
பொடித்தகுன்மம்பதினெட்டும் போகாவாய்வும்விட்டகலும்
படித்தசிவனார்தன்னுணைப் பகருங்குன்மமோடிடுமே. 807

## வாந்திக்கு நெய்.

கோட்டான்பழமும்நறுநெய்யுங் கொள்ளுந்துருசுந்தேசிப்பழம்
மாட்டாகவேயொன்றுக்கி வருந்திகொடுக்கச்சத்திபண்ணும்
மூட்டாமடைப்பின்சிரேட்டுமமு மூறிந்துவோடுஞ்சிவனாணை
போட்டாகணிரென்றெண்ணுதே பொருந்துஞ்சத்தியெடுபடுமே. ()

## பெரும்பாட்டுக்கு.

ஆலங்கொழுந்துமதினமுது மானபூனையதின்வேரும்
கோலமாவாரைவேர்பட்டைக் குணமாம்பசும்பால்தனிற்கொடுக்க
ஆலம்புகழும்பெரும்பாடு வற்றேவிழுந்துமாறிவிடும்
காலன்வந்துமிடுகானே கருதுமருந்துமிதுவாமே. 809

கொம்மட்டிக்காயிருபதுதான் கொண்டுவந்துவைக்கோவில்
செம்மையாகக்கட்டியதைத் திரும்பச்சுட்டுரெண்டுபடி
உம்மையாகச்சாறுகொண்டு வுதவுங்குழம்புபதங்காய்ச்சி
நம்மைவிடையமிளகுசுக்கு நல்லகடுக்காய்திப்பிலியே. 810

கடியதான்றிநெல்லிமுள்ளிக் கனத்தகாயமிந்துப்பு
வெடியுப்புடனேகூவளையு மேவும்விழாவுஞ்சவுக்காரம்
துடிசேர்கடுகுரோசனியும் சொல்லுமுப்புகல்லுப்பு
பொடிசேருப்புவெண்காரம் பொருந்துஞ்சீனக்காரமுமே. 811

சீனக்காரம்நவாச்சாரம் செய்யஎவச்சாரங்கருநாலாம்
தேனேநச்சீர்வயமோதும் செய்யகடுகுவிரரகனிடை
தானேமூன்றுவிராகனிடை தக்கவிளாவின்விரைகொண்டு
ஊனேயிந்தக்கியாழத்தி லொக்கத்தூவிவிளக்கெண்ணெய். 812

எண்ணெய்நெய்விட்டுக்கிளறி யிறக்கிப்பதத்தில்நெல்லிக்காய்
தின்னும்பொழுதுவந்தளவு சேரும்வெல்லஞ்சர்க்கரையில்
நன்றாய்ப்பிரட்டித்தின்பீராய் நாடும்வாய்வுபெறுவயிறு
சொன்னேமக்கினிமாந்தமுடன் துய்யகுன்மம்பீலியும்போம். 813

புத்தஞ்சாரதி.

வட்டத்திருப்பிக்கொடுவேலி வாடுஞ்சுக்குப்பெருங்காயம்
சுட்டந்திப்பிலிமிளகுடனே கலியமஞ்சலவணமுமாம்
மிட்டசீரங்கொத்தமல்லி மிசைந்தசங்கம்வேருடனே
திட்டமானமோதகமுஞ் செய்யகருஞ்சீரெவாச்சாரம். 814

செய்யுமாவின்கிழங்குடனே செவ்வியஞ்சார்வேற்கூட்டி
வையம்புகழத்தூளாக்கி வளரும்தேசிச்சாறரைத்து
நையுங்களஞ்சிபிரமாணம் நன்றாயுண்டைதான்பண்ணி
ஐயமறவேயொருவுண்டை யசனம்பண்ணுமுதற்கொள்ளே. 815

கொள்ளேயசனந்தான்செரிக்கிக் கூடும்பக்கச்சூலையும்போம்
அள்ளேவயிற்றுச்சூலையுடன் ஞரோசிகமாஞ்சூலைகளும்
பிள்ளேபிறவிமூக்குதலம் பீலிகையுமகோதரமும்
தள்ளேகிராணிகழிச்சல்களுந் தக்கசூலைரோகமும்போம். 816

நார்த்தங்காய்கடுகு.

வில்லைநெருஞ்சிசித்தாமட்டி மேவுஞ்சாறடைவேருடனே
நல்லகடுக்காய்பழங்கிட்டம் நாடுங்காட்டாமணக்குடன்வேர்

இல்லங்காட்டுக்கருணையுட னிருப்புசல்லிப்பலமிரண்டு
சொல்லுங்காடிகோமயமுந் துகளுமோரும்வுளத்தண்ணீர். 817

தண்ணீரிதுகளெட்டுமரைக்கால் தானேயிந்தமருந் துகளை
கொண்ணேபிடிச்சூலதில்போட்டு குடிலக்குறுணியாய்க்காய்ச்சி
மின்னேவடித்துவதில்பத்து மேவுகார்த்தம்பழம்பிழிஞ்சி
அன்னேயுள்ளிபலம்பத்து ஆனயிந்துபலம்பத்தே. 818

பத்தேயிந்தமருந்துதனை பாகக்கியாழமாய்க்காய்ச்சி
உத்தேபயித்தியம்வந்தவற்கு உடனேநறுநெய்ப்படியிரண்டு
சித்தாமணக்குயெண்ணெய்ப்படி சேரவொன்றுகூடவிட்டு
மெத்துமேறபெருங்காயம் மேவுஞ்சாதிக்காயுடனே. 819

உடனேசத்தியெவச்சாரம் ஓங்குகிராம்பூவடசாரம்
திடனும்புங்கங்கொட்டையுடன் சேருந்திப்பிலிமிளகுசுக்கு
நடனமானகடுவசம்பு நல்கும்பஞ்சலவுணமுடன்
அடவாஞ்சாறடைவேர்கடுக்காய் அகிலுமேலஞ்சிறுமூலம். 820

ஏருந்திப்பிலிமூலமுட னிசைந்தபெரியதிப்பிலியும்
கோலத்திப்பிலிசெவ்வியடன் கொடிவேல்வேரின்பட்டையுடன்
ஞாலம்புகழும்நர்ச்சிரகம் நல்லகருஞ்சீர்தேவதாரம்
மேலுமரத்தைத்தான்றிக்காய் மேவுநெல்லியுள்ளிமஞ்சள். 821

மஞ்சந்திகழுங்கடைமருந்து வராகனிடைதானீரிரண்டு
கொஞ்சமிஞ்சவறுத்துப்பொடி கூறுங்கிட்டம்பலமூன்று
துஞ்சார்கோமூத்திரமதனில் சுருக்காய்மூன்றுதான்போட்டு [ளே.
அஞ்சவேண்டாமரைப்பொடிதா னுனபலந்தான்மூன்றுநாள்கொள்

ஆனபுளியினிலேச்சாற்றி லன்பாய்பத்துதரம்வறுத்து
மானேகையான்தகரைச்சார் வார்த்தேயரைத்துமூன்றுதரம்
தேனேயடுப்பிலேமூடி சிறுகவசம்புபுடமிட்டு
தானேபின்புபொடிபண்ணி தக்கக்கியாழத்தினில்தூவி. 823

தக்கபதத்திலேயிறக்கித் தான்றிக்காயினளவாக
ஒக்கஅந்திசந்திகொள்ளும் ஓடும்வியாதிதனைக்கேளும்
பக்கசூலைவாயுவெட்டும் பகருஞ்சோகைபாண்டுவுடன்
மிக்கசீதக்கடுகுடனே விகார்ப்பமிதுகளெலாந்தீரும். 824

சுக்குப்பத்துபலங்கொள்ளுந் துய்யமிளகுபலமூன்று
ஒக்ககடுகுபலமூன்று ஓமந்தானும்பலமூன்று

மிக்கமுள்ளிபலமிருபது மேகவுங்காயம்பலமூன்று
தக்ககருஞ்சீர்பலமறைக்கால் சரியாயோட்டில்வருத்துயெடேன். ()

வருக்குஞ்சரக்குயெல்லாந்தான் வளருங்காயந்தன்னைவிட
சுருக்கதாகப்பொடிபண்ணித் தூயபனையில்கட்டியது
நிறுக்கும்பலந்தான்மூன்றுகொண்டு நேராத்துத்தியுடன்போட்டு
பெருக்குங்காயமுருக்கிவிட்டுப் பிறகியுள்ளிநருக்கியிடேன். 826

உள்ளிநருக்கியிட்டபின்பு உடனேயெள்ளினெண்ணெய்விட்டு
மெள்ளச்சட்டிதனில்போட்டு விரும்பிபிசரிக்காயமாக்கி
துள்ளுநெருப்பில்வேகவைத்து சுருக்காய்கலயைந்தனில்கட்டி
கொள்ளும்வெருகடிப்பிரமாணம் கூட்டும்பத்துநாளைக்கு. 827

பத்துநாளைக்குள்ளாகப் பாரவயிறுதான்கரைய
நித்தம்பிடித்தநயல்மாயு நிறமுமிகுந்துபிலனுண்டாம்
மத்துமுடலில்பலபிணியு மாறும்வென்னீர்தான்குடியும்
கத்தச்சடையோன்தன்னாணை கருதுமருந்துயிதுவாமே. 828

சோபத்துக்கும் சுரத்துக்கும் விஷபாகத்துக்கும் மருந்து.

வட்டத்திருப்பிகுரிஞ்சான்வேர் வளருஞ்சிறுகாஞ்சொண்டியின்வேர்
கட்டபிரண்டைவேருடனே காவட்டம்புல்லுக்காவளைவேர்
தொட்டபுங்குவேர்பட்டை திடருமுருக்கம்பட்டையுடன்
இட்டகொண்ணெய்ப்பட்டையுட னிசைந்தபாவட்டம்வேர்தேடே.

தேடேவெப்பமிலைதண்டும் செய்யும்பிரண்டைதண்டுடனே
நாடாய்பாதிபட்டையுடன் நாய்வேளைவேர்கூ.வேளைவேர்
கூடாய்மணலிச்சமூலமுமாம் கூவளைவேருஞ்சுண்டித்தண்டு
ஈடாமாமலைத்தண்டுமிலை யிசையுங்கோவைத்தண்டுடனே. 830

கோவேபூசனித்தண்டுகொள்ளு கொடியகரையின்தண்டுடனே
நாடேசொன்னேங்கத்தாழை நார்த்தயிலைகீழ்நெல்லிசமூலமும்
போடேகீரில்முள்ளியிலை புகழுமல்லியிலையுடனே
தாடேகொட்டைப்பாசியிலை தருமாந்துளிருசாறுடனே. 831

உரியசாறுவதுதனிலே உத்தேயரைத்துக்கடைமருந்து
கரியசீரம்நர்ச்சீரம் கடியவாத்தைச்சதகுபபை
அரியதிப்பிலிதேவதார மானமண்சிட்டிவசம்புள்ளி
தெரியுங்கோட்டமரமஞ்சள் செவ்வியமதுராஞ்சிறுமூலம். 832

மந்திரமானயெண்ணெய்க்கு வகையாஞ்சரக்குவோரெண்டு
அதிகமாகக்கழஞ்சியெட்டு ஆனசத்திசாரணைக்கிழங்கு
பதிசேர்மூகூர்சித்தாமட்டி பகர்நன்னாரிசாரணைவேர்
புதியவுத்தமாகாணி புகழும்வட்டத்திப்பிலிவேர். 833

வட்டக்கொளுஞ்சிவேர்துமிட்டி வளரும்பிலியுங்கீழாநெல்லி
இட்டவேர்கள்வகைகளஞ்சி யிதுவுமரைத்துத்தான்கரைத்து
பொட்டப்பொருவாயின்சாறும் பொன்னேமெழுகுபலமிரண்டு
இட்டுக்காச்சிவடித்தெடுத்து யிந்தக்கியாழந்தனிற்கலவேன். 834

கலந்தேயெண்ணெய்தான்விட்டுக் காய்ச்சிவடித்துப்பூசிக்க
பிலந்தானுண்டாம்வீக்கமும்போம் பிறகுசோகந்தான்தீரும்
தலந்தான்மகிழவருந்துவீராய் தக்ககுடிநீர்வகைசொலக்கேள்
நிலந்தான்புகழுங்கொத்தமல்லி நெடியவரத்தைமரமஞ்சள். 835

மஞ்சந்திகழும்நாய்வேளை வளரும்பிரண்டைசாறணையும்
அஞ்சவேண்டாம்நீர்விட்டு அழகாய்க்காச்சிக்குடிப்பீராய்
மிஞ்சுஞ்சோபஞ்சுரம்வீக்கம் மேவுமுடலம்நில்லாது
நெஞ்சமிதுதான்விட்டோடும் கேளுஞ்சிவனார்தன்னாணை. 836

குன்மங்காணுங்கொல்லாது கொடியகடியவியாதிகண்டீர்
கன்மங்காணுமொட்டாமூ கள்ளிப்பாலுமிந்துப்பும்
தென்னங்காயிலுள்ளிட்டுத் தீயச்சுட்டுவாரியபின்
புன்னங்காயில்பாதிகொள்ளப் போயேகுன்மம்போய்விடுமே. 837

வீக்கத்துக்குக் குடிநீர்.

நீர்முள்ளிசெம்முள்ளிசிந்தி நெடியஆடாதோடையின்வேர்
காடுசாவடுவேருடனே கடியவாழமரத்தண்டு
கூர்சேர்வவ்வாலொட்டியுடன் கொடியகிரமிகொத்தமல்லி
சீர்சேர்நனையவிராட்டியுடன் செய்யக்கடுக்காய்வேற்கொம்பே. 838

கடியயுள்ளிநர்ச்சீரங் கருதுமோமந்திப்பிலியும்
துடிசேர்மிளகுகருஞ்சீரஞ் துய்யசரக்குவொருநிறையாம்
படிகொள் தண்ணீர்தான்வார்த்துப் பாகாய்க்கொள்நாலொன்றாக
விடிவேரந்திகுடிப்பீராய் வீக்கஞ்சுரங்கள்விட்டோடும். 939

காமாலைக்கு செய்யுங்குணம்.

கண்டங்கனக்குந்தலைநோவும் கனத்தவிளப்புமுண்டாகும்
பண்டேயசனமத்திருக்கும் பகருங்கடுக்காயிருவதுகொள்

செண்டேகாந்தம்பலமூன்று செய்யகிட்டம்பலமிரண்டு
விண்டோமரைப்பொடிபலமூன்று மேவுநீலம்பலமூன்றே. 840

நிலஞ்சேர்தான்றிகருஞ்சீரம் நேராயாறுகாசிடைகொள்
கலந்தேமதுரங்காசிடைநால் கருதும்புளியினிலைச்சாறு
பிலந்தானுடையகுப்பைமேனி பெருகுங்கையாந்தகரையுடன்
தலந்தான்புகழவொவ்வொன்று சார்முன்னாழிதான்கூட்டே. 841

கூட்டுந்தேசிக்காய்தானுங் குலவும்நார்ப்பதெனலாகும்
பூட்டும்புளிவிட்டேயரைத்துப் புகழவெட்டுநாளூறி
ஊட்டுமோனந்தானுளி லொக்ககாய்ச்சியுண்டைபண்ணி
தீட்டுகாசினளவாக செய்நார்ப்பதினுள் திண்பீரே. 842

திண்ணும்பிறகுபத்தியங்கேள் செய்யப்பசும்பால்நெய்முருங்கை
உண்ணும்பசலையிலையுடனே யுப்புபுளிதான்விட்டுவிடும்
சொன்னேம்வயிறுசுழிந்தாக்கால் துய்யமிளகுநீர்கூட்டும்
நண்ணுந்தண்ணீர்தான்காய்ச்சி நயமாயாறவைப்பீரே. 843

காய்ச்சி ஆரவைத்ததண்ணீர் குடிக்ககுளிக்க.

ஆராயோடிவயிர்கழியி லழகாம்வாயுதானெடுத்தால்
சாரேயெடுத்துநீர்ப்பூலாத் தக்கவேளை தானரைத்து
கூராந்தேசிக்காயினுடன் குணமாயிட்டேதான்குழைத்து
நீராந்தலையில்தப்பிவைக்க நேராய்த்தண்ணீர்குடிகுளியும். 844

உள்ளியாமணக்குளெண்ணெய்தனை உரைகேளுமடமயிலே
விள்ளுங்கூவளைபெருங்குமுழும் விளங்குமுன்னைபாதிரியும்
தெள்ளுஞ்சித்தாமணக்குடனே சிறுவழுதலைகொடுவேலி
கொள்ளுஞ்சித்தமல்லிபேர்மல்லி கொண்டுயிவையோர்சரிநிறையே.

நிறையேயுள்ளிமுப்பதின்பலமாம் நேராமுள்ளிமுப்பதுமாம்
மறைசேர்சுக்குதிப்பிலிமிளகு வாகாநெல்லிதான்றிகடுக்காய்
இறையுமலம்விளாவரிசி யெடுப்பீர்களஞ்சிபத்தாக
நறைசேர்நாழிதண்ணீரில் நாழிவார்த்துநாலொன்றாய். 846

ஒன்றாய்க்காய்ச்சியந்நீரில் உதவயரைத்துக்கடைமருந்து
நன்றாஞ்செவ்வியானுக்கும் நாடுமத்திதிப்பிலியும்
கொண்டாம்பெரியகாயமுடன் கூறுஞ்சிறியமூலமதும்
கண்டோமெரிக்கவொருபலங்கொள் கடுகவரைத்துக்கருமருந்தே.

### சூலைக்கு எண்ணெய்.

மருந்தாமணக்குயெண்ணெய் நாழிவாகாய்க்கள்ளிப்பால்நாழி
திருந்தாபிதுகள் தான்புகட்டிசெய்ய மெழுகுபதம்வடித்து
இருந்தேநீருமுண்பீராய் ஏகுங்குன்மங்குடல்வாதம்
பிரிந்தேசூலப்பெறுவயிறு பேசுமொத்துவாய்வகளும். 848

சிருகாஞ்சொண்டிபார்ப்படகம் செய்யசுக்குநிலவேம்பு
குருகாக்கோட்டந்திப்பிலியும் கொள்ளுஞ்சீந்திலத்தண்டுடனே
சிரியவழுதினிலைவேரும் சேரேபாண்டுவொருபலமாம்
நிறையுந்தண்ணீர்நாழிவிட்டு நேரேயுழக்காய்காச்சிவிடே. 849

### பரங்கிவியாதிக்கு.

பரங்கிவியாதியதுதனக்குப் பகருஞ்சிறுதேக்கொருபலங்கொள்
திரஞ்சேர்குடிநீருட்கொள்ளத் தீராப்பாங்கிநவசுரமும்
இரங்குமாறல்நாள்மூன்று விரண்டுநாளில்சுரம்போமே
அரஞ்சேர்சிவனார்தன்னாணை ஆராப்பரங்கிமாறிடுமே. 850

மிளகுசுக்குதிப்பிலியு மேவுங்கீழாநெல்லியுடன்
பழகுஞ்சிறியதேக்குடனே பகருங்கோட்டங்காலியிவை
அழகுபெறவேயிவைரண்டு ஆனகழஞ்சிதான்கொண்டு
இளகுதண்ணீரிருநாழி யிட்டேகாய்ச்சிக்கொள்வீரே. 851

### பித்தசுரம்.

இடித்துயத்திப்பட்டையுடனிசையுங் கதலிப்பழம்பிசைந்து
வடித்தநீரும்நெல்லிக்காய் வருத்துஞ்சாறுந்தான்கூட்டி
பிடித்துவறுத்துச்சீரகமும் பிரியமுடன்சர்க்கரைகலந்து
குடித்தபோதேபித்தசுரம் பேசாதோடிப்போய்விடுமே. 852

### மாறல்சுரம்வேறு.

நாய்வேளை வேலிப்பருத்தி கஞ்சாங்கோரை நற்றுழைமுடக்கொத்தான்கடியசுக்கு, தேவைமிகுசிறுதேக்கு சிறுகாஞ்சோரிசீர் வேம்பின்பட்டையதிற்சிறந்தவிறகும், மேவுஞ்சங்கம்பட்டையுடன் பதக்குநீரில் வெந்துகொள்ளசீதங்கள் சுரங்களெல்லாம், கோவை நறுங்கனிவாய் முனிவாய்வந்தகுளிர்மாறல் சுரமீளுங்கொள்ளுகொள்ளே. 853

### வேறு.

தூதுவளையின்பூரலாடாதோடை சொன்னசங்கின்வேர்சுக்கு வீழிகூட்டி, மாதுவளர்திப்பிலியுமிக்க சிந்தமல்லிபேர்மல்லிமுள்ளி வில்லேகண்டம், பாதிரிகோலொடுதக்கநிலக்குமிழ் முத்தம்பண்பானமோதந்தான்நிலவேம்பு, மோதுகருவாகதிப்பிலியுங் கூட்டிமிளகு மல்லார்சுக்கு தொண்டைசீந்திலுண்ணே. 854

### வாதசுரம் வேறு.

முத்தக்காசிபற்படக மூதலாமிச்சையிருவேலி
சுத்தச்சுக்குசந்தணமும் சுகமாய்க்காய்ச்சிக்குடிப்பீராய்
சித்தப்பிரமியுடன்பிறந்ததேனே மானேசிலேக்கண்ணுய்
பித்தத்துடனேவாதசுரம் பேசாதோடிப்போய்விடுமே. 855

### விஷசுரம்.

சுக்குகடுக்காய்நிலவேம்பு தோறுமாடாதொடைசீந்தி
கைக்கும்புடலம்பொடியதுவும் கதிக்குமிதுவொன்றோர்களஞ்சி
ஒக்கநறுக்கியிருநாழி யுழக்காய்காய்ச்சியுண்பீராம்
தக்கவிஷமிச்சுரமதுவுந்தான் விட்டோடுந்தப்பாதே. 856

சித்தாமுட்டிபசும்பயறு சிறந்தபடகம்விலேயோடு
கொத்தமல்லிசமனுக குறுநீர்விட்டெட்டொன்ருய்
சத்தமுடனே தான்காய்ச்சி சதுராய்ச்செய்துவுண்பீராய்
மெத்தபிராயதோஷமது நிலேவிட்டோடும்நிச்சயமே. 857

சிருகாஞ்சோரிகுருந்தொட்டி சிறந்தசுக்குசீந்தலோடு
மருவாதோடைவேப்பீர்க்கு வருபர்ப்படகஞ்சமன்கொண்டு
மருகாநீர்விட்டொன்ருய் மறுகக்காய்ச்சிக்குடிப்பீராய்
திருகாதோடும்சுரங்களெல்லாங் கோடாகோடியோடிடுமே. 858

### வேறு.

நெர்ப்பொரியும் பசும்பயறும் வில்லேமுல்லே நெரியசிரோலமுடன் நெல்லிமுள்ளி, மூர்ப்படவேயிருநாழி நீரெட்டொன்ருய் முதிரநிரையிருந்தருந்து முதுந்தபேர்கள், சொற்பெரிய சத்திகுன்மமதி சாரசுர முந்துயாமுடன்கிறுகிறுப்பு வுழலேமூர்ச்சு, நர்ப்பெரியமுனியுரைத்தபடியென்ருகும்நாடாதென்றேயுரைத்தநலமீதாமே. 859

அதிசாரசுரம் வேறு.

முகமாம்பிஞ்சதிவிடையம் முத்தக்காசுபெருமரத்தோல்
தகமாஞ்சுக்குவிளாங்காயும் சமனுயொன்ருய்வேர்கழஞ்சு
உகையாய்க்கூட்டியிருநாழி யுழக்காய்காய்ச்சிவைத்தருந்த
பகையாய்வந்தவதிசாரசுரம் பாரீர்பாரீரே. 860

வேறு.

மாவடிபுகழ்நாவர்க்கொழுந்து புளியாரைவன்குரிஞ்சி நுணுவிலை நறுவாழைப்பூவும், தாவுவகைக்கோர்கழஞ்சியிருநாழிநீரில் தகமைபெற வுழக்காக்கிதனதோடித்துடனே, பூவில்வருந்திப்பிலியும் வெண்காரங் கூட்டிப்பொருந்து நீர்மென்பொடியும்புகழ்வேன்கொள்ள, தாவில்வந் தாகமோடதிசார சுரமுந்தன்னுலுநாள்நாறலுடனஞ்சாமே. 861

வேறு.

கருவாங்கதலிப்பூமுத்தங் களரும்விடத்தலைக்கொழுந்து
நுருவாம்பாளைபெருமரத்தோ லொளிமாதளம்பிஞ்சுருகழஞ்சி
தருவாம்நீர்வார்த்தெட்டொன்ருய் சாருமிலவம்பிசின்விடையம்
பெருமாத்திரையாய்கொண்டாக்கால் போமேசாரமொழிந்திடுமே.

வேறு.

மாதளங்கடம்புபுங்சன் வாய்த்தவேர்திப்பிலியத்தி
தீதிளங்கெழுந்துசுக்கு திரிபலைவிரும்பிக்கூட்டி
நீதியாயிரண்டுநாழி நீருழக்காக்கிக்கொண்டால்
சூதிளமுலையினுளே சுரசத்திசாரம்போமே. 863

வேறு.

மூடித்துக்கனத்தகருங்குழலாள் முத்தக்காசுமாம்பட்டை
இடித்துநனைத்துபுட்டாய்ச்சட் டிறுகபிழிந்திட்டதிவிடையம்
தடித்தவிலவம்பிசினேடு தகமைபெறவேகொள்வீராய்
துடித்துவிழுந்தவதிசாரஞ் சுரத்தைப்போக்குஞ்சொன்னேமே. 864

தேங்காய்ப்பாளைமொட்டுமுத்தஞ் சிதறிவிடித்துத்திறமாக
போங்குமுலைமேர்ப்புட்டாக்கிப் பிழிந்துதேனுமுட்கலந்து
வேங்கும்புகழுமதிவிடைய மிலவம்பிசினுமிட்டருந்த
பாங்கப்படுத்துமதிசார சுரத்தைப்போக்குஞ்சொன்னேம். 865

தாபசுரம்-வேறு.

ஏலமதுரஞ்செங்கழுநீர்கோஷ்டம் விலாமிச்சமிருவேலிபிசைந்த சுக்கு, மூலமிகுசந்தணநன்னாரி முத்தபற்படகஞ்சமன்கூட்டிமுன்னீர் விட்டு, கோலமெட்டொன்றாய்க் காய்ச்சியபின்னேகுடித்திடவே பித்த முடன்குருவேர்வேரோடு, காலமிகுதாபசுரந்தீருமென்று கருணையுடன் முனியுரைத்தார்காணலாமே. 866

முரிவெளிநன்னாரியொடு வெள்வெங்காயம் முதிர்மாரம்புயிந்துப் புகடுக்காய்முள்ளி, பருவியநாரத்தையெலுமிச்சைவேளைவைக்கணமலே தாங்கி, கிளாக்காய்நெல்லிவருசுவாய் பூசினியும்பேய்ப்படாசுத்திவள குரட்டைமால் கரந்தவகையொன்றாக்கி, பெருநல்லநீர்விட்டுகாச்சியுண் ணபிலத்தசுரம் விஷம்வீக்கம் பேர்ந்துபோமே. 867

கலிவிருத்தம்.

வில்வவேர்சங்கொடு விளாநன்னாரி
புல்லுவேர்பயனொடு பொரிவெள்ளமும்
நல்லநீர்குறுணியும் நாழியாக்கி
சொல்லநீர்வாந்தியுஞ் சுரஞ்சோறுமே. 868

ஏத்தசுக்கொடாரத்தை யெருக்கன்வேர்
காத்தநொச்சிக்கொழுந்து நாரத்தமுஞ்
சேத்துனீருழக்காக்கி தினங்கொண்டால்
மாத்தவர்சன்னி வாதசுரங்களே. 869

முன்னைபாதிரிமுள்ளி முதிர்கண்டங்காலிகோரை
பின்னை தூதளையுஞ்சிந்தில் போராமுட்டிசித்தாமுட்டி
சொன்னகாஞ்சொரியுந்தோடை துளசிவெம்பிலகுரோணி
நன்னிலகுமுழ்முடோலும் நல்லவாலுளுவைகூட்டே. 870

கூட்டிவேப்பிலிகுவித்து கோட்டநற்கொத்தமல்லி
வாட்டியவாத்தையோடு மதூமுமேலந்தானும்
நாட்டியதிருகடுகுநாத் திரிபலையுங்கொண்டு
நீட்டினிரெட்டொன்றாக்கி செலுத்தவுட்சுரங்கள்போமே. 871

வே று.

சிறுதேக்குதோடையொடுகஞ்சாங்கோரைசேர்முதியகூந்தல்சிறு குரட்டைசோதி, உருசிறுகாஞ்சோரிமுள்ளிச் சாரணத்தி யுத்தநீர் முள்ளி மட்டியிரண்டுமன்னு, மருகுமுக்காமுக்காவேளை வக்கணவும் வளரும்பாவட்டையுங் கோஷ்டமல்லி, குருகுமுருவலியானு வேர்நன் னரி கொத்தமல்லி சுக்குமுத்தங்கூட்டுவீரே. 872

தீராதரோகத்திற்கு.

முத்தமால்காந்தியொடு கண்டங்காலி முதிர்ப்பர்ப்பாட வசம்பு முன்னீர்விட்டு, சுத்தமாய்காய்ச்சியதிற் கடுகுரோணிகமான சீரகமுந் துலங்கக்கொண்டு, மத்தநாள்முதலாக வரைத்துக்கொண்டு மானேயிப் புவியில்வளர் மாந்தர்க்கெல்லாம், சித்தமாஞ் சுரங்களெல்லாம் வெகு சோபனிக்கந் தீராதரோகங்கள் தீர்ந்துபோமே. 873

வே று.

ஆடாதோடைநன்னரியகிலுஞ் சிறியவழுதலையும்
பாடாநிலங்குபர்ப்படகம் பங்கம்பாளைவேர்க்கொம்பு
சேடாசிந்திச்சந்தணமும் செப்பவரியனிவையனைத்தும்
கூடாநீர்விட்டுழக்காக்கி குடித்தார்குளிரைகெடுத்தாரே. 874

மாந்தசுரத்திற்கு.

சீந்தில்தண்டுங்கடுக்காயும் சிவதைவேருங்களிப்பாக்கும்
காந்தசுக்கும்ரோகணியும் கன்னிச்சாறுங்காந்துகொண்டு
வேந்தமுலையாய்நீர்விட்டு வெட்டொன்றாக்கிக்கொடுப்பீராய்
பாந்தமானசுரந்தீரும் வயிறுங்கழியுங்கண்டாயே. 875

சிட்டச்சீந்தில்நிலவேம்பு சிறுகாஞ்சோரிகொத்தமல்லி
வட்டத்திருப்பிமுத்தமொடு மகிழ்ந்துபோந்துவிலாமிச்சு
வெட்டிப்பொருதுமுதாரியுடன் வுடனேகூட்டிநீர்விட்டு
திட்டமுடனேதான்செலுத்த தீராச்சுரங்கள்சேராதே. 876

சேர்ந்தசெங்கழுனீர்க்கிழங்குஞ் சிறியவழுதலைவில்மிச்சு
சார்ந்தவேலிபொன்முசுட்டை தன்னேடொக்ககொத்தமல்லி
வாய்ந்தமுத்தநிலவேம்பு வளர்புர்ப்பாடந்தானருந்த
வேந்தவெதுப்பைவிடுவிக்கும் விடாதால்விதியின்கொள்கையிதே. 877

கடுக்காய்தாரங்கொத்தமல்லி கடியநொச்சிவெண்கோஷ்ட
மெடுத்தார்சுக்குநிலவேம்பு மிரண்டுமட்டுமுடன்கூட்டிப்
பொடித்துளாக்கிநீரிலிடப் பொங்கக்காய்ச்சியெட்டொன்ருய்
குடித்தார்தம்மைசுரம்விட்டுக் குடிப்போமென்றுகூறியதே. 878

வே று.

காரமட்டுங் கருங்குழல்செப்புவாய்
வாரமட்டும் வனமுலைமாதுகேள்
பேரமட்டியுஞ் சுக்குங்குடித்ததால்
ஊரைவிட்டுநீ யோடுஞ்சுரங்களே. 879

வில்வபத்திரிவேர் சிறுமட்டியும்
வல்லசுக்கு வளம்பெறக்காய்ச்சியே
நல்லதேனில் நயந்துகுடித்திட
கொல்லவந்ததோர் சத்திக்குறுகுமே. 880

வே று.

இருபலைமுக்காவேளை யிசைந்தசுக்குதான்றியாகி
ஒருபடிதண்ணீரெட்டி யொன்ருகக்காய்ச்சியுண்ண
பெருகியகிராணிவாய்வு பெலத்திடுங்குன்மரோகம்
பொருவதுமேகம்விட்டுப் போவதுதிண்ணந்தானே. 881

வே று.

முருங்கைக்கிழங்குகொடிக்கழல்வேர் முதுசாரணைவேர்வெள்ளுள்ளி
நெருங்கத்தழைத்தவசம்புடனே நெருப்பின்மிகுந்தகொடிவேலி
ஒருங்காய்த்தேய்த்தபெருங்காய முடனேகாய்ச்சிக்கொள்வீராய்
மருங்காச்சூழ்ந்தநோய்களும்போய் வயிறுவலியும்வாராதே. 882

வே று.

ஆவாரத்துளிர் கல்மதங்கொன்றைவேர்
நீவிரைந்து புளிமோரிலுண்பீராய்
தீவிரைந்து வரினுந்திரைகடல்
காவிரைந்து கடக்குவடக்குமே. 883

வே று.

ஆவாரைகொன்றைநாக லளைகடல்முத்தங்கோஷ்டம்
மேவியமருந்துந்தோலும் விரைந்துடனேக்கங்கொண்டு

பூவிருங்குழலினளே பொருந்தவே தன்னையுண்ண
காவேரியாறும்வற்றிக் கடல்களும்வற்றுந்தானே. 884

திருந்தியவிளாவரை செப்பியவாள்பூலாவேர்
மருந்தியபிலந்தைகாட்டு மல்லிகையிவையுங்கூட்டி
பொருந்தவேமோதிமோரில் புகழ்படவேகவைத்து
கருந்திடீர்தயிரிலப்போ கண்டிடுஞ்சலங்கள்தானே. 885

வெண்பா மேகசுரத்திற்கு.

வல்லசுரம்போம் மாந்தமொடுதோஷம்போம்
சொல்லவெகுமேகம்போம் சோகைபோம்—நல்லாய்கேள்
நல்லவெல்லஞ்சுக்குடனே நயந்துசத்தேநீலக்குமிழாஞ்
சொல்லவல்லக் காய்ச்சியுண்ணும்போது. 886

வேறு.

கீழாநெல்லிவேர்களஞ்சி கிளாப்பொர்க்கடுக்காயிருகழஞ்சி
காளாமிளகுமுக்களஞ்சி கடுகப்புளித்தமோருடனே
தாளாதுண்ணமணக்கழலுங் தழைத்தவயிறுந்தாழ்வாகும்
ஆழ்வாருண்டநீரென்று வரனருளிச்செய்ததுவே. 887

முதியார்கூந்தற்கொடிவேலி முருங்கைப்பட்டைக்குளவிந்தம்
கொதியால்வெந்தகழல்பருப்புக் கூறுங்கரணைச்சாற்றுடனே
விதியால்வந்தவிரைவாதம் வெறுமைகண்டவேசியைப்போல்
குதியாதாகில்பொத்தகத்தை கொடுப்பேன்தீயிற்கொடுப்பேனே. 888

வேறு.

சேர்த்துக்கஞ்சியிர்ச் சுக்கரைத்துதேத்தி
கூர்த்துயிரொழக்கோ ருழக்காக்கியே
யூர்த்தியூர்த்தி யுருஞ்சிக்குடிப்பீராய்
நீர்த்துபாண்டமும் நீருண்ணும்பாண்டமே. 889

முருவிலிமாவேலை முள்ளிதூதளை
வரியுரியணலி நன்னரிகோவை
உரியுரிகாடியோ டொக்கக்கூட்டினர்
சுரிகரிசுரும்பெனச் சோபமாறுமே. 890

வே று.

பேருமாப்பட்டைநன்னரி பெருத்தகுடசைப்பாலையுமே
வாருமாதளையின்பொன்முசுட்டை மருவும்பில்லைவெட்டிவேர்
தாருமிலாமிச்சமுத்தமொடு தந்தசீந்திலதிவிடையம்
மாருமிதினிக்காட்டாத்தி மதிககிராம்புமருந்திடுமே. 891

வேறு.

பெரியவாகை பெருங்குழல்வேரொடு
பரியமுன்னையும் பாதிரிவேரோடு
கரியசிங்கித்தாரி நெரிஞ்சில்வின்வேர்
சிரியமல்லி யிவைதிசைமூலமே. 892

கதிரோனெனவேதிசைமூலக் கியாழத்தாற்பிணிநீங்கிடே
சதிராம்வாகைகுமிழ்முன்னை சாற்றுப்பாதிரிவில்வமுடன்
புதியமிளகுகரிமுள்ளி போத்துநெருஞ்சியிருமல்லி
மூதிரக்காய்ச்சிக்குடிப்பீராய் மூர்ச்சைசன்னிசுரமாறும். 893

தந்தரோகத்திற்குமருந்து வெண்பா.

மருக்காரைசுக்கு மருதந்தோல்வெள்வே
வெருக்காவாரைபிரம்போடேமும்-நறுக்கியே
நாலிலொன்றாய்க்காய்ச்சி நாலுநாள்கொப்பளிக்கப்
பாலன்பல்லாங் கிழவன்பல். 894

வே று.

காசுகட்டிப்பலமொன்று கனத்தகடுக்காய்பலமுமரை
நீசுகாணவிந்துப்பு நிலைக்குமாசிக்காயுடனே
பாசமானபடிகாரம் பகர்வோமென்றுக்காற்பலமாய்
மீசத்துடனேபொரித்தெடுத்து விதமாயசனங்கார்த்துயெடே. 895

ஏகமாகவேயிடித்து யிசைவாய்ச்சூரணமாய்ப்பண்ணி
தேகத்திதமாய்தந்தத்தில் தினமும்நன்றாய்த்தேய்த்திடவே
வாகமானமுகவாதம் வரையும்பல்லுங்கடுப்படங்கும்
மேகமானதந்தசைவு மிறுகப்பிடிக்குங்கண்டாய். 896

கொன்றைத்தோலுங்கொத்தமல்லி குமரிச்சாறுங்கடுக்காயும்
ஒன்றக்காய்ச்சிரோகணியு மொக்கக்கலந்துகுடிப்பீராய்

கண்ணில்குடிக்கமலத்திரட்டுக் கடுகக்கழியும்வகைசொன்னல்
விண்ணிற்பெரியவேந்தர்க்கு வெப்புஞ்சுரமும்வாராதே. 897

வெண்பா.

கூறுகின்றபாவட்டை கொன்றைசிறுமட்டியுடன்
வீறுடன்வேலிப் பருத்திவேர்-காறுகின்ற
நன்மிளகுகூட்டி நலமாய்க்கியாழமிட
சென்மமில்லையாஞ் சுரமேசெப்பு. 898

பிரிந்தவுள்ளவென்னீரில் பின்முதியார்கூந்தல்
அரிந்தமதன்வேறரைத்து திண்ணப்-பரந்திடும்
குன்மமஞ்சும்போகுங் குளிருஷ்ணதாகம்போம்
துன்மைசுர மில்லையெனச்செப்பு. 899

வேறு.

சிட்டச்சிந்தில்நிலவேம்பு சிறுகாஞ்சோரிபாவட்டை
கட்டப்பொருதுமுதாரியுட நன்றாய்க்கூட்டிநீர்விட்டு
அட்டிப்படாமலடுப்பேற்றி யன்பாயிறக்கித்தானருந்த
திட்டத்துடனேயெட்டொன்றாய்ச் செலுத்தச்சுரங்கள்சோரதே. 900

வெண்பா.

காணும்புனல்முருங்கைக் கழற்சிக்காயின்பருப்பு
பூணுங்கொத்தானுடனே பேர்ந்தசுக்கு-வேணுமே
பண்ணீர்க்கியாழம் பருகிப்பருகியபின்
விண்ணிலண்டவாதம்போம் விட்டு. 901

விட்டவொதியீர்க்கு மேவுகரிவேப்பீர்க்கு
முட்டகருஞ்சீரகமு மோதகமும்-தட்டியிட்டு
காய்ந்தநீர்க்கொள்ள காணுமாரூசிகமும்
பாய்ந்தகிராணியும்போம் பண்ணு. 902

அலையுங்கருவளைய லார்க்கப்பொடித்துமே
சிலையுமுளகுபொடி சேர்சரியாம்-மலையிர்ப்
பெருங்காயங்கூட்டியுண்ணப் பெருமண்டவாதம்போம்
வரும்பாளைவண்டதாம் வாடு. 903

போர்த்திடாத்தோடையிலை பொரித்ததொருமுந்திரிகை
சேர்த்திடித்தாக்குடிநீர் செலுத்திடீர்-மாத்தறியார்

காரங்கூட்டியருந்தக் கடியதோர்வெட்டைமுதல்
காரிரத்தப்பித்தம் போங்காண். 904

போகுங்காண்ரெத்தபித்தம் போய்விடவேதான்மருந்து
ஏகவேகுகைநீருகாற்பலமும்-நாகமாய்
நிம்பழச்சார்தான்வாங்கி நேகவரைத்தரைத்து
தம்பசும்பாற் பாலருந்திப்பார். 905

## இரத்தவாந்திக்கு வேறு.

அகமேமாந்தரானவற்கு வரியமருந்துநானுரைப்பேன்
உகமேயொவ்வொன்றுமுக்கழஞ்சு வுகந்தாவின்பால்நாழிசேர்
சுகமாய்முன்னுழிநெய்கூட்டி சேரப்பதமாய்வடித்துண்ண
தகமாரெத்தவாந்தியுந்தான் சலித்துப்போகுங்கண்டாயே. 906

## நேத்திராஞ்சனத்திற்கு.

அழகுஞ்சாறுதான்குறுணி யகமேயாவின்பால்குறுணி
திகழும்நெய்தானிருநாழி சேரப்பதமாய்வடித்தபின்பு
அகமும்நாசியுதிரந்தோன்றி லதுவேநசியம்பண்ணுவீராய்
இகழும்செவியுந்தான்சிவந்தா லிதமாய்க்கண்ணில்தான்விடவே. 907

பதமாய்த்தண்டிலுதித்தோன்றில் பதமாய்த்தண்டில்தானேற்ற
இதமாமயிர்க்காலுதிரந்தோன்றி லிதமாய்மேலெங்குந்தான்பூச
இதமாவிழுகாபூசைபண்ணி சேரகிருதந்தான்விடவே
நிதமாய்தேரேனும்ரெத்தபித்தம் நில்லாதோடிப்போய்விடுமே. 908

## வெண்பா.

நண்ணுகவேர்க்கொம்பு நர்ச்சாரணைவேரும்
ஒண்ணுய்க்கியாழ மிட்டுண்டாக்கால்—நன்னுக
ஓடுமேரெத்த மொளியாமல்நாடுவிட்டு
வாடுமேகெட்டு மனம். 909

## வே று.

பாதிரியின்பெருங்குமிழுமுன்னைமுத்தம் பர்ப்படகஞ்சிறுதேக்கு
கண்டங்காலில், ஓதரியசித்தமல்லிகடுக்காய்சுக்கு ஒங்குதாமரைவளை
யம்போமல்லி,நீதசிறுவழுதலையும்வில்வவேரும் நெருஞ்சில்வேருஞ்சம
னுய்க்காய்ச்சிக்கொள்ள, சீதசுராஞ்சன்னிப்போமென் றீசனுர்தெளிந்
துமேவுரைத்திட்டாரே. 910

வெண்பா.

கூசுஞ்செங்கத்தாரிபட்டை கூர்கன்னிகூர்மிளகு
வீசுஞ்சிறிகுரிஞ்சான் வேர்கூட்டி-காசினியில
எண்ணெயிட்டுவேகுடினீ ரெறங்குமேமால்கரப்பான்
திண்ணமுடன் போமேதினம். 911

தினத்தாளிசங்குகரை சிருதெருஞ்சியிஞ்சி
மனத்தாலநீர்முள்ளியுள்ளி மாமலையிர்-கனத்துவரின்
வெண்காரமென்பொடியா மேவுகுடிநீரருந்தக்
கண்காணவீக்கம் போங்காண். 912

தாகவாந்திக்கு வேறு.

சத்தநெர்ப்பொரியுஞ்சுக்குந் தொந்தகூவளைவேர்கூட்டி
இத்தரக்காய்ச்சிக்கொண்டு யிசையவேகுடித்தபோது
சத்தியமருகுருப்புந் தாகமுந்தீருமென்று
வித்தகர்முனிவர்தானே வேண்டியேவிளம்பினாரே. 913

பயத்தினிலுமியைப்போக்கி பரிவுள்ளநீரைவிட்டு
வியப்புறக்காய்ச்சிப்பின்னை விறைந்தநீர்தன்னினோடே
நயப்புறச்சீனிகூட்டி நலம்பெறக்குடித்தபோதே
தியக்கிடுஞ்சத்திமாது தீர்வதுதிண்ணந்தானே. 914

குன்மத்திற்குக்கியாழம் வேறு.

சிந்தில்சுக்கு துடரியின்தொட்டிவேர்
சாந்தவேலி விலாமிச்சுசந்தணம்
போந்தகூவளை பொங்கிருநாழிநீர்
காய்ந்தபோதெரிகுன்மங் கடக்குமே. 915

மருவுக்குக்கியாழம் வேறு.

பயத்தொடுகடுக்காய்சுக்கு பகுத்திருகழஞ்சிகொண்டு
வயத்தசுரத்தண்டுமந்த மருங்குருந்தொட்டிவேரும்
நயக்கவேவெட்டிக்கூட்டி நயம்பெறக்காய்ச்சிக்கொள்ள
வியப்புறுங்கைகால்தின்று வெரிகுடல்மருகும்போமே. 916

குமரிவேர்கொன்றைசுக்கு குலவுரோகணியுமிந்தும்
அமர்குணஞ்சாலேசிந்தி லானசந்ததிமதுரம்

தமரமாய்க்காய்ச்சிப்பின்னைத் தானிதுவெந்தபோது
திமரமாஞ்சத்திகுன்மம் செயல்குடல்மருகுப்போமே. 917

உடலதுமருகுண்டாகி யுற்றுணர்ந்திருக்குமாகில்
பொடிபடைதகத்துசுக்கைப் போதவேகழஞ்சிகூட்டி
மூடியிருநாழிநீரில் மூன்றுநாளிதனைக்காய்ச்சி
குடியிதுநீறுமென்று கூறினர்முனிவர்தாமே. 918

வேறு.

கொள்ளுமுள்ளி கொடியமுருக்கிலை
எள்ளுக்காய்சுக் கிவையுஞ்சிவதைவேர்
உள்ளதாகநீர் நாழியுழக்கதால்
மெள்ளவேகுடிவிடுகுஞ் சுரோணியே. 919

நீர்சுருக்குக்கு வெண்பா.

கடுகளிசுக்கிந்துப்புகல் மதங்கொடங்கை
அடுக்கள்வேநீரை வார்த்தரைத்துகுடிக்கில்
வளரிளவன்மூலமாதே வயிறுகள் தான்கழியும்
களரியுடன்நீர்க் கடுப்புப்போம். 920

காசத்திற்கு வெண்பா.

பாரழிஞ்சிப்பட்டைப் பலமொன்றுதன்னுடனே
கூர்மிளகுதினம்பாதி கூட்டியேசேர்பாவை
வீசுநீரெட்டொன்றாய் மேவிகுடித்திடவே
காசமெல்லாந்தானீங்குங் காண். 921

விக்கலுக்குக்கியாழம் வேறு.

தக்கநொர்ப்பொரி தன்னுளநீருட
நொக்கவிட்ட பயறுடன்கூவிளை
மிக்கதாய்ச்சிப்பின் சர்க்கரைப்போட்டுண்ண
விக்கல்சத்தி விரைத்துடனோடுமே. 622

அதிசாரத்திற்குக் கியாழம்.

மாதளந்துளிர் மாந்துளிர்நாவலுந்
தாதவிழ்சடை யாருடனஞ்சனம்
வீதிதன்னில் விலங்கியநண்ணினுப்
போதவெந்துண்ணப் போமதிசாரமே. 923

### இரத்தவாந்திக்குக்கியாழம் வேறு.

பாதிரிபட்டைசுக்கு பாழ்சுண்டிபூலாவில்வம்
மேவியமுத்தக்காசு விளம்பியகளஞ்சுகொண்டு
தாவியசலத்திற்காய்ச்சி தான்குடித்திடுவீராகில்
நூவியேவருகும்ரெத்தந் நூளேழுந்தோடிப்போமே. 924

### பித்த அதிசாரத்திற்குக்கியாழம் வேறு.

அத்திப்பட்டைவாழப்பூவும் அரைத்துவைத்துப்புட்டாக்கி
பொத்துப்பிடித்துப்பிழிந்துகொண்டு புதியவிடைமேல்விசரி
மெத்தச்சீனந்தனேக்கூட்டி மிகவும்பருகவல்வீராய்
பித்தகழிச்சலதிசாரம் பிறப்பட்டோடுங்கண்டாயே. 925

இரப்பொனூர்தம்மிநாணே யிட்டோலமுத்தக்காசு
பரப்படஞ்சிங்கிசுக்குப் பையவேவதையவெந்த
அரப்பினூர்தேனினேடே அளவினூரென்னக்கேட்டு
வெரப்பினர்சீதனுரை விரைவினூர்விடைகொண்டாரே. 926

### சன்னிக்குகியாழம் வேறு.

சுக்குச்சீந்தில் சிறியவழுதலே
ஒக்கக்கொண்டிரு நாழியுழக்கதாம்
தக்கக்கியாழந் தானேகுடித்திட
மிக்கதோர்சன்னி விட்டிடுமுண்மையே. 927

### இருமலுக்குக் கியாழம்.

ஆடாதோடைதேள் கொடுக்குசாதனே
வாடாசுக்குடன் வல்லிதன்கொண்டவேர்
நீடாதிப்படி நீபொடியிட்டிட
வோடாதாகிலு மோடுமிரும்பலே. 928

### குடிநீர் வேறு.

கோட்டமுடன்சிறுதேக்கு கோரைக்கிழங்குநிலவேம்பு
தேட்டமாகமிகுசீந்தில் சேருங்கண்டங்காரிசுக்கு
நாட்டமாகப்பர்ப்பாடகம் நலமாஞ்சிறுமஞ்சொரிதானம்
வாட்டமாகத்திப்பிலியும் வளர்பரங்கிக்குடிநீரே. 929

### அரோசிகத்துக்கு வேறு.

கண்டசுக்குக் கடுகுடன்பேய்ப்புடல்
விண்டதேக்கு மிகுகொத்தமல்லியும்
கொண்டநீரைக் குறிகிக்குடிப்பீராய்
அண்டவாயு மரோசிகந்தீருமே. 930

### வயிற்றுவலிக்கு வேறு.

சிறுகாஞ்சோரிநன்னாரி தெய்வப்பெண்டீருடனுக
குறுகாதரைத்துவுண்டைபண்ணிக் கொடிசுரத்துக்கிடுவீராய்
மறுகால்வாராதுவாதமொடு வயிறுநோவுங்குன்மமுடன்
தருகாதளவும்விழிமடவீர் றரணியோருக்குரைப்பீரே. 931

இதித்தனுபிகெந்தகமு மியல்சாதிக்காய்லவணமஞ்சந்
துதிசேர்சீனக்காரமுடன் சுவானுபீசம்வெண்காரம்
திதிசீரகமிரண்டுடனே திறமாய்க்கந்தஞ்சரிகூட்டி
குதிகொண்ணிஞ்சிச்சாறதனில் கூட்டியரைத்துவுண்டைசெய்யே.()

### வேறு.

துத்துருசி துடர்ந்தபாஷாணமும்
மெத்தியகெந்த மிகுர்சங்கையுப்புடன்
பத்தியப்பாகலின் சாற்றிலரைத்துமே
தத்திமிளகள வுண்டைகள்செய்திடே. 933

### சீதசுரத்திற்கு மாத்திரை.

சீதசுரமது செய்யுமுறைமைகேள்
ஓதியகெந்தி யுயரசவாளமும்
கோதறுதிரிகடுகு கொடுசேவதை
மாதுறுபாலினில் மாத்திரைசெய்திடே. 934

செய்திடுமாத்திரை தேனிலருந்திட
எய்திடும்பித்த மிறங்கியேயோடிடு
கொய்திடுமையங் குறைந்துமேயுறுது
வைதுகூறுந்தேறன் வாக்குப்பொய்யாதிதே. 935

### அக்கினிபிளாஸ்திரி.

பொய்யாதமாந்தர்க்குப் புகலுவேன்வாகடம்
அய்யாபிளாஸ்திரி அறைவேன்முறையுடன்

மெய்யாகவீரம் விராகனிருபது
கொய்யாவிளக்கெண்ணெய் துகளவரைத்திடே. 936

அரைத்துச்சல்லாவி லழுந்திடப்பூசியே
விரைத்தக்கிறந்திப்புண் வீறும்ரணத்திற்கு
உரைத்தப்படியாக வுறுதியாய்ப்பூட்டிடில்
கரைத்தரணங்களுங் காணுமலோடுமே. 937

அண்டவாயுவுக்கு மாத்திரை.

ஓடும்பத்திரி யுற்றகழற்சிக்காய்
நாடுங்கிராம்பு நன்னாரிவேருடன்
தேடும்பரங்கித் தேர்ந்ததோர்பட்டையும்
நீடுமாசிக்காய் நிறுத்துப்பலமெடே. 038

எடுத்துச்சாதிக்காய் ஏற்றலவங்கமும்
அடுத்தப்பத்தி யானைநெருஞ்சியும்
கடுத்ததான்றிக்காய் காசுக்கட்டியுடன்
தொடுத்தமுந்திரித் தொல்சமன்சேர்த்திடே. 939

சேர்த்துபத்திரி சிவதைகுறிஞ்சானும்
பூர்த்துச்சந்திரக் காந்திப்பூதன்விரை
வார்த்துக்குமரி வாகாகயூறவை
பார்த்துமூன்றுநாள் பதமாயரைத்திடே. 940

அரைத்துச்சாம மறுபதமானபின்
உரைத்துமெழுகாய் வற்றபயிர்போல
நிரைத்தரவியில் நேர்மையாய்க்காயவை
மரைத்தமண்டல மதிப்பாயருந்திடே. 401

அருந்தும்போதுமே யண்டத்தின்வாயுவும்
செருந்துமேக சர்வாங்கவாதரோகம்
பொருந்துமேகழல் வாதமிருபதும்
திருந்துமேறு வாதங்களுந்தீருமே. 942

வாந்திபேதிக்கு மாத்திரை.

திருங்கக்கல் தெளியுமுறைமைகேள்
பாரும்லிங்கம் பகரும்வீரமுடன்

சேருஞ்சூடன் சிறந்தசாம்பிராணியும்
நேரும்வஸ்துவால் நிகழவரைத்திடே. 943

அரைத்துச்சாம மரியக்கியாழங்கேள்
கரைத்தமருந்தைக் கடியமாத்திரைசெய்
உரைத்தப்படுவன் வுற்றகொம்பனுக்கும்
நிரைத்ததேனிலே நேராய்க்கொடுத்திடே. 944

கொடுத்திடபேதி கொட்டலுங்கக்கலும்
அடுத்துமூன்றுநா ளார்வேளையில்தீரும்
கொடுத்திடுங்கஞ்சி கோதுமைதன்ரவை
தடுத்துமூன்றுநாள் தயவாய்ப்பொசித்திடே. 945

பித்தமயக்கத்திற்குச் சூரணம்.

பொசித்திடும்பித்தம் போக்கும்வகைகேளு
வசித்திடும்வில்வம் வன்னப்பச்சைப்பயர்
பசித்திடுஞ்சீந்தில் பாங்கானநெற்பொரி
மூசித்திடுமமுககுராவுந் தூக்கிடே. 946

தூக்குசந்தனந் துடியாம்விலாமிச்சை
பாக்குஞ்சீரகம் பண்பானவேலமும்
நோக்கும்பத்திரி நொய்யவசுவாசி
தேக்குமதுரந் தேர்ந்தசீனிகூட்டே. 947

கூட்டும்வெண்ணெயில் கூறுமிருவேளை
மூட்டுமண்டல முசியவருந்திட
ஆட்டும்பத்திய மாகாகடுகெண்ணெய்
பாட்டுந்தேரையன் பாடலுமுண்மையே. 948

பரங்கிப்புண்ணுக்கு மேற்பூசும் எண்ணெய்.

உண்மைகேளு முதகினில்மாந்தரே
நண்மையாயெண்ணெய் சாற்றுறேன்சூட்சமாய்
வண்மையாமணக் கெண்ணெயொருபடி
பண்மையாம்பசும் பாலும்படிகூட்டே. 949

கூட்டும்பூரங் குணமாந்துருசியும்
தீட்டுங்காரஞ் சிறந்தவெடியுப்பும்
பாட்டுந்துத்தம் பகருமனோசிலை
நாட்டுங்கெந்தக மாறுஞ்சரிதூக்கே. 950

தூக்குங்கல்வத்தில் துகளப்பொடித்துமே
தாக்குமெண்ணெயில் தயவாய்க்கலக்கியே
நோக்கும்வாலுகை நுகருமடுப்பினில்
போக்கில்லாமலே பொரிந்தவெரித்திடே. 951

எரித்துஎண்ணெ யெழிலாயிறக்கியே
பரித்துமேனி பரங்கிக்குப்பூசிட
முரித்தமேக மறையாப்புமாறிடும்
குரித்துதேரையன் கூறுமருந்திதே. 952

மாரடைப்புக்குச் சூரணம்.

மருந்தும்பரங்கி பட்டையறுபலம்
குருந்தான்வேருங் கூறுங்கழற்சிக்காயும்
பொருந்தநன்னரி பூட்டும்நுணாவேரும்
திருந்துமிளகு சேரவிடித்திடே. 953

இடித்துச்சூரண மெழிலாய்வடிசெய்து
கடித்துச்சீனியில் கலந்துவருத்திடு
வடித்துதேரையன் வாக்குப்பொய்யாதிது
நடித்தமார்நோய் நடுங்கியேயோடுமே. 954

கபாலவலிக்குத் தயிலம்.

ஓடுங்கபால வுச்சிதநோய்கட்கு
தேடுந்தேரையன் தெளிந்தமுறைகேளும்
ஆடுந்தூதளை யாதண்டைதன்வேரும்
நீடுஞ்சுக்கான்வேர் நேர்மையாய்க்கூட்டிடே. 955

கூட்டுஞ்சீரகங் கொடியதேவதாரம்
நீட்டுஞ்சந்தனம் நேர்ந்தவிலாமிச்சு
கூட்டுக்கஸ்தூரி கொடியரோகணியும்
மாட்டும்பத்திரி மாசிக்காய்சேர்த்திடே. 956

சேர்த்துலவங்கஞ் சிறந்தகிராம்புடனே
தூர்த்துமோதகங் துய்யகருஞ்சீரம்
நேர்த்தியான நெருஞ்சிவிளாவுடன்
பார்த்துதுங்கத்தின் பத்திரிகூட்டிடே. 957

கூட்டுமொன்றாய்க் குறிக்குங்குழிக்கல்லின்
நீட்டுஞ்சாக்கு நேர்த்தியாய்த்தானிடி

தீட்டும்பாண்டத்தில் சிறக்கவடிசெய்து
மூட்டுஞ்சூரண மாகவெடுத்திடே. 958

எடுத்துச்சூரண மெண்ணெயிற்காய்ச்சியே
அடுத்துமண்டல மன்பாய்முழுகிட
கெடுத்திடுங்கபால வலிபீனிசம்
விடுத்திடுமென்று விளம்பினன்றேறனே. 959

ஒருதலைநோய்க்குத் தயிலம்.

தேறன்வாக்குத் திசையிலும்பொய்யாது
ஏறலெண்ணெ யெழிலானவெள்ளெண்ணெய்
கூறுநாழி கொடியமுசுக்கைச்சார்
மாறலின்றி மதிப்பாய்ச்சமனெடே. 960

எடுக்கும்வெள்ளுள்ளி யெழிலானரோகணி
கடுக்குந்தான்றிக்காய் கடியவிருசீரம்
அடுக்கும்வேலி யழ்காயிருவேலி
தொடுக்குஞ்சீந்திலின் வேர்சமன் றூக்கிடே. 961

தூக்கும்பத்திரி துய்யவிளங்கமும்
பாக்குஞ்சாதிக்காய் பற்படம்பத்திரி
நோக்குமேலே நுகருங்கிராம்புடன்
வாக்குதப்பாமல் வல்லாரைமாட்டிடே. 962

மாட்டும்பத்திரி மணத்தவசுவாசி
கூட்டுநன்னாரி கொடியபரங்கியும்
தீட்டுஞ்சுக்கு தெளித்ததண்ணீர்மிட்டான்
போட்டுச்சூரணம் பொடியாகச்செய்திடே. 963

செய்யுஞ்சூரணஞ் சிறந்தவெண்ணெய்தனில்
பையகலக்கிப் பாங்காயெரித்திடு
மெய்யமண்டல மேவுமுழுகிவா
ஐயமோர்தலை நோயுமகலுமே. 964

அகலும்பத்திய மாகாதுபுளிபுகை
நிகலுந்தாம்பூல நேர்மையாய்நீக்கிடு
புகலுமாய்கையும் பெண்போகமாகாது
பகலுநித்திரைப் பாங்காகநீக்கிடே. 965

### செவிநோய்க்குத் தயிலம்.

நீக்குமாந்தரே நேர்மைமுறைமைகேள்
வாக்குதேரையன் வார்த்தைபொய்யாமலே
தாக்குமேசெவி தக்கவியாதிக்கு
போக்குந்தயிலம் புதுமையுரைப்பேனே. 965

உரைக்குநெய்யுட னுகர்ந்தவெள்ளிலெண்ணெய்
திரைக்குமாமணக் கெண்ணெய்சரிசமன்
கரைக்குநண்டுநெய் காற்சேருடனுகை
முரைக்குமூன்றையு மொன்றாய்க்கலக்கிடே. 966

கலக்கிச்சாம்பிராணி கருநாபிவெள்ளுள்ளி
மலக்கிசுக்கு மதித்தவசம்புசேர்
தலைக்குயேற்றதோர் தாளிசபத்திரி
நிலைக்கும்வேம்பின்வேர் நேர்சமனெடுத்திடே. 967

எடுத்தசூரண மெழிலாய்வடிசெய்து
கடுத்தயெண்ணெய் கடுகுபதமாக
முடித்தசூரண மூன்றுபலமிட்டு
நடித்தபதமாய் நன்றாயிறக்கிடே. 968

இறக்கிப்பூசை யியலாக்கணேசனை
சிறக்கவேதியே சிறந்தவுருவேற்றி
திறக்குந்தயிலந் திறமாய்முழுகிட
பறக்குஞ்செவிநோய் பாரினிலோடுமே. 969

ஓடும்பத்திய முப்புப்புளியாகா
தேடுந்தேனுந் தினைமாவுமுண்டிடு
நீடுமண்டல நேர்மையாயிம்முறை
பாடுந்தேரையன் பாட்டுபொய்யாதிதே. 970

### ஐநத்திராஞ்சனவியாதிதொண்ணூற்றாறுக்குந்தயிலம்.

பொய்யாதுதேறன் புகலுந்திருமொழி
யோகேளுமறைகிறேன் கண்ணேய்க்கு
செய்யதயிலஞ் செப்புறேன்மாந்தர்க்கு
கையாந்தகரை கால்நாழிசேர்த்திடே. 971

சேர்த்துமாமணக் கெண்ணெயிருநாழி
பார்த்துநறுநெய் பாங்காகமுன்னாழி
நீர்த்துமேபசும்பாலது நால்நாழி
கூர்த்துநெல்லிச்சாற் குறிப்பாயாய்ச்சமனெடே. 972

அளக்குமெண்ணெயி லகில்பட்டைநான்குசேரு
பளக்கமான பருத்தநெரிஞ்சியும்
களக்குமிளகு கடியகசகசா
இளக்கமாகருஞ் சீரமெடுத்திடே. 973

எடுத்திடும்பீதரோகணி கிரம்பச்சாற்
கடுத்திடுஞ்சீந்தில் கடியபொன்னாங்கண்ணி
அடித்திடுமுத்த மானசிறுகீரை
தொடுத்திடுநாகங் துய்யமதுரமே. 974

மதுரஞ்சண்பக மரமஞ்சள்தன்னுடன்
அதுரமேலமலருஞ் செங்கழுநீர்
சதுரங்கோஷ்டஞ் சரிந்தபாதிரிப்பூ
இதரமாகவிடித்துச் சூரணியே. 975

சூரணத்தைச்சுருக்கா யெண்ணெய்தனில்
பூரணயோகவாசியில் நின்றுகொண்
டாரணிவாதுக்கர்ச்சனை செய்துபின்
வாரணத்துடன் வாகாயெரித்திடே. 876

எரித்துப்பதத்தி லெழிலாயிறக்கியே
உரித்துமண்டல முறைமைதப்பாமலே
கரித்துமேகரி நாளதனைநீக்கியே
வருத்துவாகடம்போ லுரைமுழுகிடே. 977

முழுகும்பத்திய மொய்குழலேகேளும்
அழகும்வெற்றிலே யாகாதுபுளிபுகை
ஒழுகும்நெய்யுட னுற்றபசும்பயர்
நழுகும்வெள்ளுள்ளி நவிலவேயுண்டிடே. 978

உண்டிடகண்ணி னுற்றவலிநீங்கும்
அண்டிடபித்த மரியபுழுவெட்டு
கண்டிடும்படலங் காமாலைபோகும்
தொண்டன்றேரையன் றெருகுப்புபொய்யாதிதே. 979

## கிராணிக்கழிச்சலுக்கு.

பொய்யாதுகிராணிப் புகலுமருந்துகேள்
ஐயாமாந்தற்கறைய வுரைக்கிறேன்
தொய்யாசாதிக்காய் துய்யவிளாவரை
மெய்யாகசகசா மேவுமாவர்ரையே. 980

வாரைமிளகு வசம்புதிப்பிலி
சூரைவிரையுஞ் சுருண்டைலவுங்கமும்
கோரைக்கிழங்கு கொடியபற்படகம்
சாரைபருப்புஞ் சரியெடைகூட்டிடே. 981

கூட்டியொன்ருய்க் குலாவியிடித்துமே
நீட்டுஞ்சூரணம் நேர்மையாய்த்தான்செய்து
பூட்டுஞ்சீனிப் புகட்டிக்கலந்துமே
மூட்டுகாறுநெய் முசியவேவுண்டிடே. 982

உண்டுமண்டல முறுதியாயிருவேளை
கண்டுபத்தியங் கணக்காயிருந்திடில்
திண்டுகிராணி திரமாய்த்தீர்க்கிடும்
உண்டுதேரைய னுறுதியாயுரைத்தேனே. 683

உரத்துமெத்தலை வியாதிப்பிணிநீங்க
காக்குமெள்ளெண்ணெய் கணக்குடன்நாழிதான்
சிரக்குமாவின்பால் சேரறைகாலதாய்
நிரக்குங்கம்பஞ்சோர் நீறையுங்கூட்டிடே. 984

கூட்டுமாதொண்டைக் கோவைத்துளிர்ச்சாறும்
நீட்டுமிளகு நேர்ந்தபெருங்காயம்
போட்டுமெண்ணெயில் பொடிக்கலக்கியே
வாட்டடுப்பினி லரைத்துயெரித்திடே. 985

எரித்துக்காலையி லேழுநாள்ஸ்தானஞ்செய்
தெரித்துமண்டைநோய் தேர்ந்தக்கண்ணுக்குத்து
கரித்துக்காலையில் கணக்காய்முழுகிட
குரித்துவோடும் வியாதிகைகண்டதே. 986

## ஒருதலைநோய்க்கு நசியாக்கிராணம்.

கண்டபோது கண்டத்தின்வியாதிக்கு
அண்டமேபெருங் காயஞ்சமுத்திரா

பெண்டுமேடுலைப் பாலினாலாட்டியே
உண்டும்நாசியி லுரையப்பிழிந்திடே. 987

பிழிந்திடுங்காதி னுறைந்தப்பிணிகட்கு
தெழிந்தும்வெள்ளுள்ளி தேர்ந்தமாமஞ்சள்
கழிந்துசுக்கொடுக் கடியவலம்புரி
நழிந்துஞ்சீரகம் நத்தையிறைச்சியே. 988

இரைச்சிமுட்டை இசைந்தமுசுரண்டம்
கரைச்சியேகருங் கோழியினண்டமும்
துரைச்சிடும்தண் டிறைச்சிசமனதாய்
முரைச்சிடுங்கள்ளி முருங்கைச்சார்சேர்த்திடே. 989

சேர்த்துமேசாறு சிறக்கவொருநாழி
பார்த்துமேபசும் பால்படிகாலதாய்
நார்த்தும்வேப்பெண்ணெய் நாழிசமனதாய்
கோர்த்துக்கலந்து கொதிக்கயெரித்திடே. 990

எடுத்திடுமெண்ணெ யிசைந்தசெவியினில்
வரித்திடுபிணி வாகாய்சொரிந்திட்டு
நிரித்திடும்பஞ்சி நோய்பொதிந்திடில்
குரித்தநோயுங் குடியோடிப்போகுமே. 991

சகலமேகத்துக்கு எண்ணெய்.

உறைக்குமெண்ணெ யுலகினில்மாந்தற்கு
திறக்கமாகவே தேர்ந்தவாமணக்குநெய்
பறக்குஞ்சன்னியின் பாதாளமூலியும்
முறக்கமாகவே முன்னைவேர்சேர்த்திடே. 992

சேர்த்துப்பத்திரி சிறந்தலவங்கமும்
பார்த்துதானெடு பற்படமோரிடை
தூர்த்துக்கைவாங் துடர்ந்தவாவாரையும்
போர்த்துப்பொடியாய்ப் பொட்டணஞ்சேர்ந்திடே. 993

செய்யும்பொட்டணஞ் சிறந்தயெண்ணெய்தனில்
பையக்கலக்கிப் பாங்காயெறித்திடு
நையுமண்டலம் நயமாய்முழுகிவா
தொய்யுமேகத் தொடர்ந்துதானோடுமே. 994

ஓடும்பத்திய முப்புப்புளியாகா
தேடும்வெற்றிலைத் தினமும்விரும்பாதே
நாடுதூக்கமும் நல்காதல்வேளையில்
போடும்பத்தியம் பொருந்தவிருந்திடே. 995

இருந்திடமேக மெழிலாய்ப்பறக்குமே
பிரிந்திடுரோகப் பிசகாமலோடிடும்
சொரிந்திடும்பித்தஞ் சிதைந்துதாநீங்கிவிடும்
தெரிந்துதேரையன் தெளிவாயுரைத்தேனே. 996

நூல்சமர்த்துக் கூறுகின்றார்.

உரைத்தேன்மாந்தர்க் குறுதியாமிந்நூலை
பரைத்தசித்தர் பதினெண்பேர் நூல்களில்
நிறைத்தமுறைமை நோயில்லாததால்
திரைத்தமனமாக தெளிவாகச்செப்பினேன். 997

செப்பினேன்முறை சிறந்தயிந்நூல்தனில்
ஒப்புநாலாயிரத்துச் சிலவாணநோய்
தப்பிப்போகத் தகுந்தமருந்துகள்
துப்புறவாய் தொடர்ந்துவுரைத்தேனே. 998

இந்நூல்த்தொகுப்புக் கூறுகின்றார்.

உரைத்தேனின்னூலுக் குற்றபெருநூலொன்
றிறைத்தேன்காவிய மாயிரத்தைன்னூறாய்
வரைத்தேன்தேரையன் வயித்தியமாயிரம்
குரைத்தேனன்னூறுங் கூறியதுண்மையே. 999

உண்மையாமுறை வுரைத்தேனின்னூல்தனில்
தண்மையாய்ச்செய்தால் தப்பாதொருநாளும்
வண்மையாக வகுத்தனர்தேரையன்
திண்மையாகத் தெளிந்தவர்செய்வரே. 1000

செய்யும்போது சிறந்தகுருமொழி
வையுந்தேரையன் வாக்குபொய்யாதிது
எய்யுமாந்தற் கெளிதாகுமிந்நூலு
உய்யுமாயிரத் தொன்றுதான்முற்றதே. 1001

தேரையர் வயித்தியம்-1001

முற்றிற்று.

வெளிவந்துவிட்டது. வெளிவந்துவிட்டது.

வெகுநாளாய்க் காத்திருந்த விந்தையான நூல் வெளிவந்துவிட்டது

# ஹார்மோன்ய அநுபவ சங்கீத ரத்னம்.



சங்கீத நேயர்களே யாவரும் எளிதில் தாமே கற்றுக்கொள்ளும்படி ஆர்மோன்யத்தைக் கையில் எடுத்ததுமுதல் இரண்டுகைகளாலும் சபையில் வாசித்து ஆனந்திக்கும்வரையுள்ள விஷயங்களையும் இடத்திற்குத் தகுந்தபடி உபகர்ணப் படங்களைக் காண்பித்து கீர்த்தனைகள், கண்ணிகள், தேவாரம், திருவருட்பா, இராமாயணக்கீர்த்தனை, நந்தனார், காவடிச்சிந்து, தில்லாணா, பார்ஸிநோட்முதலிய இன்னும் அநேக பாடல்களும் அவைகளுக்குத் தகுந்தவாறு சுரங்களமைத்து எளிய நடையில் இனிய வசனத்தோடு கிரவுன் 16 சயிஸ் கிளேஸ் பேப்பரில் அச்சிட்டு அழகிய காலிகோ பைண்டுடன் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.

புத்தகம் ஒன்றின் விலை ரூபா-1.

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

# அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேககொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இதுநிகரற்ற மருந்தாகும். ஆங்கிலமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. இதை உட்கொண்ட இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இத் திராவகத்தால் தீரும் வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும் நீர்வியாதிகள் தீரும் கண்ணெரிச்சல் கைகால்காந்தல் இவைதீரும் முகவசிகரத்தை உண்டாக்கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும் மனதை அதிக உற்சாகப்படுத்தும் நரம்புகளுக்கு அதிக வலுவைத்தரும் தேகத்தில் நல்ல ரத்தத்தைச் சுரப்பிக்கும் க்ஷயரோகத்தைத்தீர்க்கும் வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும் சத்ததாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைகள்தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது 40-நாள்மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது தேகம் வஜ்ஜிரமேயாகும் இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறையும் இதைப் பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைய மருந்தின் விலை ரூபா. 1—4—0

டஜன் 1-க்கு ரூபா. 12—0—0

ஒருமண்டலம் 40-நாளைய மருந்தின் விலை ரூபா. 2—0—0

டஜன் 1-க்கு ரூபா. 21—0—0

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு. மதராஸ்.